Registered at the G. P. O. as a Newspaper விலை சதம் 15

வாரப்பதிப்பு

ஈழநாடு

EELA NADU National Tamil Daily தேசிய தினசரி

போன 339 தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது மார்கழி 22ஆம் நாள் ஷஃபான் பிறை 9 (6-1-63) ஞாயிற்றுக்கிழமை இதழ் 327

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்

அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணாடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழ்ப்பாணம்.

கோப்பாய்

ஆசிரிய கலாசாலை மூடப்படமாட்டாது

கல்வி மந்திரி அறிவிப்பு

திருநெல்வேலி, நல்லூர் கலாசாலைகள் மூடப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மாற்றும் திட்டத்தை கல்வி மந்திரி, அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் கைவிட்டுவிட்டார். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இனி மாதர்களுக்கான பெரிய பயிற்சிக் கலாசாலையாக இருக்க வேண்டுமென்றும் வட-பகுதியில் ஆண்களுக்கென பெரிய பயிற்சிக் கலாசாலையொன்று தனியாக இருக்கவேண்டுமென்றும் மந்திரி தீர்மானித்துள்ளார். கோப்பாய் கலாசாலை பெண்களுக்கான பெரிய பயிற்சிக் கலாசாலையாகவும், கொழும்புத்துறை பயிற்சிக் கலாசாலை ஆண்களுக்கான பெரிய பயிற்சிக் கலாசாலையாகவும் அமைக்கப்படவிருக்கின்றன.

இத்தகவலை கல்வி மந்திரி அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் நேற்றுப் பிற்பகல் சிறுபான்மைத் தமிழர் மகாசபை அளித்த தேநீர் விருந்துபசாரத்தில் பேசுகையில் வெளியிட்டார்.

(12-ம் பக்கம் பார்க்க)

ஆஸ்பத்திரியில் கந்தையா எம். பி.

ஆர்ப்பாட்டக்காரரை பொலிஸார் தாக்கினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

உணவுமந்திரி திரு. டி. பி. இலங்கரத்தினா நேற்றுமாலை யாழ்ப்பாணம் பெரியகடையில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் கிளையொன்றைத் திறந்துவைத்தபொழுது அவருக்கும் அவருடன் வந்த கல்வி மந்திரி அல்ஹாஜ் பதியுதீன் மாமுத்துக்கும் தமிழரசுக் கட்சி எம். பிக்கள் சிலரும் வாலிப முன்னணியினரும், கறுப்புக்கொடி பிடித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டக்காரரை பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்து கலைத்தனர்.

மந்திரிகளிருவரும் மோட்டார் கார் ஒன்றில் ஆஸ்பத்திரி வீதி வழியாக வந்துகொண்டிருந்தனர். வழியில் இரண்டொரு வியாபார நிலையங்கள் அவர்களுக்கு மலர்மாலை சூட்டின. பட்டாசு வெடிகளும் கொழுத்தப்பட்டன.

கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனக் கிளைக் கட்டிடத்துக்குச் சமீபத்திலுள்ள கட்டிடங்களின் கரையோரத்தில் தமிழரசுக் கட்சி எம். பிக்கள் சிலரும் மற்றும் சில பெண்களும் மற்றும் பல ஆதரவாளர்களும் ஒதுங்கி நின்று கொண்டிருந்தனர். அப்பொழுது மழைதூறிக்கொண்டிருந்தது. மந்திரிகளின் கார் சந்தியைத் திரும்பி வந்ததும் கரையில் ஒதுங்கி நின்றவர்கள் இரண்டு அடி முன்வந்து நின்று கறுப்புக்கொடிகளை

(12-ம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறையில் இருவர் காயம்

யாழப்பாணம், ஞாயிறு

உணவு மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தினா நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கிளை நிலையத்தைத் திறந்து வைக்க அழைத்துவரப்பட்ட பொழுது தமிழரசுக் கட்சி எம். பி.க்கள் சிலரும் ஆதரவாளர்கள் சிலரும் பாதையின் ஒரு ஓரத்தில் நின்று அமைதியான முறையில் கறுப்புக் கொடிகளைக் காட்டி "மந்திரியே திரும்பிப் போ" என்று கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டக்காரர் கள்மீதியில் பொலிசார் குண்டாந்தடியை ஓங்கியபடியே பாய்ந்து தள்ளிவிட்டு கலைத்தனர். சிலர்மீது பொலிசார் அடித்தனர். இதனால் சிறிது குழப்பம் ஏற்பட்டது. பொலிசாருடன் சேர்ந்து வேறு சிலரும் ஆர்ப்பாட்டக்காரரைத் தாக்கினர்.

'கறுப்புக்கொடி காட்டி' கோஷமிட்ட வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்தை யாழ்ப்பாண உயர்தர பொலிஸ் அதிகாரி கைகளால் தாக்கி பல முறை தள்ளிவிட்டார். கழுத்துச் சட்டையில் பிடித்து இருபுஜங்களிலும் கைகளால் அவர் பல தடவைகள் அடித்துத் தள்ளி

(12-ம் பக்கம் பார்க்க)

உடன் பகிரங்க விசாரணை வேண்டும்

பொலிஸ் தாக்குதல் பற்றி எஸ். ஜே. வி. தந்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு

"அமைதியான மக்கள் கூட்டத்தின் மீது பொலிஸார் சட்டத்தை மீறி மிருகத்தனமாகவும் கொடூரமாகவும் நடந்து கொண்டதை நான் மிக வன்மையாக ஆட்சேபிக்கிறேன். பொலிஸாரின் இந்த சட்ட விரோதமான தாக்குதல் நடவடிக்கைக்குப் பொறுப்பானவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் பொலிஸாரின் நடவடிக்கை பற்றி பகிரங்க விசாரணை நடத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன்." என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், ஜனப் பிரதிநிதிகள் சபை முதல்வர் திரு. சி. பி. டி' சில்வா, எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனாநாயக்கா ஆகியோருக்கு நேற்றிரவு அனுப்பிய தந்திச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நேற்றுமாலை யாழ்ப்பாணம்

(12-ம் பக்கம் பார்க்க)

தாமதம்

எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மின்சாரக் கோளாறு காரணமாக 'ஈழநாடு' பத்திரிகை இன்று வெளிவரத்தாமதமாகிவிட்டதென்பதை வாசக நேயர்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பயிர்களைப் பாதுகாக்கும் சர்வபூச்சி நாசினி

பொலிடோல்

FOLIDOL

Agents: ROYAL DISPENSARY Phone: 397 Jaffna

உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

சுபகிருது ஆண்டு மார்கழித் திங்கள் 22-ம்நாள் ஞாயிற்றுக்கிழமை (6-1-1963) முதல் மார்கழித்திங்கள் 28-ம் நாள் சனிக்கிழமை (12-1-63) வரை உள்ள பலன்கள்.

மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழில் முன்னேற்றம், கஷ்டங்களைச் சமாளிக்கத் தக்க மனஉறுதி, பணச்செலவு, எண்ணியவை தடைப்படல், வர்த்தகத்துறையில் ஓரளவு முன்னேற்றம், பணவரவு, உத்தியோகத்துறையில் கடும் உழைப்பு, மாணவருக்குகல்வித் தேர்ச்சி, கமத்தொழிலாளருக்கு பயிர்த்தொழிற்கேடு, பெண்களுக்கு உடல்நலக் குறைவு, கணவருக்கு நன்மை, குழந்தைகளுக்குச் சிறப்பு ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 8, 9, 10 சுபதினங்களாகும்.

★

இடப இராசி

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்திலே இனசனசகோதரர்களால் உதவி, வெளிப்பிரயாணம், ஊழியர் தகராறு, வருமானக்குறைவு, வர்த்தகத் துறையில்மத்திமபலன், தொழில் விஸ்தரிப்பால் இடர், உத்தியோகத்துறையில் உடல் நலக்குறைவு, மேலதிகாரிகள் வெறுப்பு, மாணவருக்கு உடல் நலம், கல்விச் சிறப்பு, கமத் தொழிலாளருக்கு நற்பலிதம், பெண்களுக்குப் பணச்செலவு, தொழிலாளருக்கு நற்பலிதம், [illegible]காரிகளது ஆதரவு, [illegible]கஉத்தி[illegible]யோகத்தர் ஆதரவு, மாணவ[illegible]க்குக்கல்வி மேன்மை, கமத் தொழிலாளருக்கு பயிர்த்[illegible]லும் [illegible]ல்நடையும் சேத[illegible]மடைதல், [illegible]பண்களுக்கு குடும்பத்தி[illegible] சுபகருமங்கள் நடத்[illegible] மாதாவழி ஆதரவு ஆதி[illegible] காணப்படுகின்றன. இவர்[illegible]ளுக்கு ஜனவரி 7, 11, 12, சுப[illegible]தினங்களாகும்.

★

மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்ன[illegible] திருவாதிரை, புனர்பூசம் [illegible] முக்கால்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்திலே குடும்பத்திலே சுபகருமம் நடத்தல், தெய்வ வழிபாடு, ஊழியர் தொல்லை, வர்த்தகத் துறையினருக்கு ஆதாயம், நாணய விருத்தி, உத்தியோகத்துறையில் சிரமம், குடும்பத்தொல்லை காரணமாக தொழில் தாமதம், மாணவருக்கு கல்வித்தடை, கமத்தொழிலாளருக்கு தாயாதிகளாலும் பணியாளராலும் தொல்லை, பயிர்ச்சேதம், பெண்களுக்கு சந்ததிச் சிறப்பு, கணவருக்கு மேன்மை, தார்மீகச் செலவு காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 8, 9, 10 சுபதினங்களாகும்.

★

[illegible]டக இராசி

(புனர்பூசம் நான்காம் பாதம், பூசம், ஆயிலியம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்திலே கடும் உழைப்பு, [illegible]வத்தியச்செலவு, மாதரால் [illegible]ன்மை, வருமானம் அதிகரி[illegible]ல், எதிரிகள் சாதகமாக[illegible]ரும்புதல், வர்த்தகத்துறையி[illegible]ருக்கு நல்லாதாயம், [illegible]த்தி[illegible]பாகத்துறையினருக்கு மேலதி[illegible]காரிகளது ஆதரவு, [illegible]கஉத்தி[illegible]யோகத்தர் ஆதரவு, மாணவ[illegible]க்குக்கல்வி மேன்மை, கமத் [illegible]தொழிலாளருக்கு பயிர்த்[illegible]தொழிலும் [illegible]ல்நடையும் சேத[illegible]மடைதல், [illegible]பண்களுக்கு குடும்பத்தி[illegible] சுபகருமங்கள் நடத்[illegible] மாதாவழி ஆதரவு ஆதி[illegible] காணப்படுகின்றன. இவர்[illegible]ளுக்கு ஜனவரி 7, 11, 12, சுப[illegible]தினங்களாகும்.

★

சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்திலே தொழில் காரியங்களில் உற்சாகம், குடும்பத்திலே சுபகருமமுயற்சி, எதிர்ப்புக்கள் மறைதல், நல்லோர் நட்பு, சந்ததிகளது கல்வி, விவாகம் ஆதியனவுக்காக அலைச்சல், முயற்சிவெற்றி, வர்த்தகத் துறையில் இலாபமதிகரித்தல், கமத்தொழில் சிறப்பு, மாணவருக்கு கல்விமேன்மை, பெண்களுக்கு சகோதர இனபந்துக்களால் உதவி, கணவருக்கு நன்மை, கன்னிப்பெண்களுக்கு விவாகமுயற்சி ஆதியனகாணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 5, 7, 9, 10 சுபதினங்களாகும்.

★

[illegible]னி இராசி

(உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்திலே கடுமையான உழைப்பு, வெளிப்பிரயாண கஷ்டம், கோர்ட் வழக்குகளில் வெற்றி, வர்த்தகத் துறையில் இலாபம் சம்பாதித்தல், உத்தியோகத்தருக்கு நல்லபலன்கள் நடத்தல், கமத்தொழில் விருத்தி, மாணவருக்கு கலவிச் சிறப்பு, உத்தியோகத்துறை பரீட்சை எடுப்போருக்கு வெற்றி, பெண்களுக்குகுடும்பச் சிறப்பு, கணவருக்கு நன்மை, இனபந்துக்கள் ஆதரவு ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 8, 9, 11, 12 சுபதினங்களாகும்.

★

துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்திலே வாகனதிகளால் பணச்செலவு, வெளிப்பிரயாண கஷ்டம், பழைய பாக்கிகள் வரவு, தொழில் மத்திமபலிதம், வர்த்தகத்துறையில் மத்திமவரவு, மாணவருக்கும் உத்தியோகத்தருக்கும் வித்தைச் சிறப்பு, பதவி உயர்வு, இடமாற்றம், கமத்தொழிலாளருக்கு தானியலாபம், பயிர்த் தொழில் சீராக நடத்தல், பெண்களுக்கு தனதானிய விருத்தி, இலக்குமி கடாட்சம் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 11, 12 சுபதினங்களாகும்.

★

விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பழைய பாக்கிகள் வரவு, கணக்குகள் சாதகமாக முடிதல், குடும்பத்திலே நிம்மதி, களத்திரவழி புத்திரவழி ஆதரவு, வர்த்தகத்துறையில் சுபபலன், உத்தியோகத்துறையில் மேலதிகாரிகள் பகை, கமத்தொழில் நட்டம், மாணவருக்குக் கல்வியில் சோர்வு, பெண்களுக்குக குடும்பச் சிறப்பு, போசனசுகம், குடும்ப நலன் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 6, 7 சுபதினங்களாகும்.

★

தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்திலே குடும்பத்தில் ஏற்படும் பலவிதமான கஷ்டங்களையும் சமாளிக்கத்தக்க மனஉறுதி ஏற்படும். வீணான சந்தேகங்களால் மனவருத்தம், வர்த்தகத்துறையில் தொழிலை விரிக்காவிடின் நன்மை, உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு மறைமுக எதிர்ப்பு, மாணவருக்கு அரசாங்க உதவி, கல்விச் சிறப்பு, கமத்தொழிலாளருக்கு நட்டம், பெண்களுக்கு மகிழ்ச்சி, சந்ததிகளால் நன்மை ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 6, 7, 9, 10, சுபதனங்களாகும்.

★

மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால் திருவோணம், அவிட்டம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்திலே குடும்பசுகம், தொழிற்பொறுப்புக்கள் அதிகரித்தல், வர்த்தகத்துறையில் நாணயச்சிறப்பு, மதிப்பு, தொழிலை விஸ்தரிக்காதிருத்தல் நன்று. உத்தியோகத்துறையில் மேலோர் அதிருப்தி, குடும்பத்தொல்லை, பயிர்த்தொழில் சேதம், பண உதவி காரணமாகத் தொழிற் கல்விப் பரீட்சைகளில் மாணவருக்கு வெற்றி, பெண்களுக்கு குடும்பகருமங்கள் சீரமைதல், தனதானிய லாபம், சந்ததி நலம் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 8, 9, 11, 12 சுபதினங்களாகும்.

★

கும்ப இராசி

(அவிட்டம்பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்திலே தார்மீகவழிச் செலவு, சுபகருமமுயற்சி, காரியங்களைச் சாதித்தல், வர்த்தகத்துறையில் விருத்தி, தொழிற் சிறப்பு, உத்தியோகத்தருக்குப் பதவி உயர்வு, பயிர்த்தொழில் விருத்தியும் செரத்துச் சேர்க்கையும், பணத்தொல்லைகள் காரணமாக கல்வியில் தடை, மாணவர் கவலை, பெண்களுக்குக் குடும்பத்திலே செல்வாக்கு, சந்ததிகளுக்கு நன்மை ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 11, 12, சுபதினங்களாகும்.

★

மீன இராசி

(பூரட்டாதி நாலாம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்திலே வெளியூர்ப் பிரயாணங்கள், குடும்ப ஒற்றுமை, சுமுகமான சூழலில் புதிய தொழில்கள் ஆரம்பம், உத்தியோகத்துறையில் அதிகாரிகள் ஆதரவு, சுபசெய்திகள், சகதொழிலாளர் பாராட்டு, மாணவருக்கு வித்தியா கௌரவங்கள், அரசாங்க பணஉதவி, வர்த்தகத்துறையில் ஆதாயச் சிறப்பு, பயிர்த் தொழில் நட்டம், பிறரை நம்பி ஏமாறுதல், பெண்களுக்கு பாக்கியவிருத்தி, கணவருக்கும் குழந்தைகளுக்கும் நற்பலன் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 6, 7 சுபதினங்களாகும்.

ஸி. டபிள்யூ. ஈ.

உங்களுக்கு அளிக்கும்

சிறந்த ஒளிஇணைப்புகளை

உங்கள் வீட்டில்

பொருத்துங்கள்



மேற்கு ஜெர்மனியிலிருந்து தருவிக்கப் பெற்ற இச் சிறந்த ஒளி இணைப்புகள் உங்கள் வீடுகளுக்கு புதியதோர் அழகைத் தருகின்றன. அது மட்டுமா? உங்கள் ஒவ்வொருவருக்கும் நல்ல பிரகாசத்தையும் அவை அளிக்கின்றன.

கிடைக்குமிடம்

ஸி. டபிள்யூ. ஈ. ரேடியோ இலாகா,
85, மெயின் வீதி, கொழும்பு.

ஸி. டபிள்யூ. ஈ.
பிறின்ஸ் வீதி, கோட்டை.

ஸி. டபிள்யூ. ஈ. ரேடியோ இலாகா
131, வாக்சால் வீதி, கும்பனித்தெரு.

பட்டுப் பூச்சிகளின் வாழ்க்கை

பான் நகரத்தைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் ஹுபர்ட் ரோர் பட்டுப் பூச்சிகளின் இறக்கைகளில் அலுமினியம் காகிதத்தை ஒட்டவைத்து அதில் இதை மீண்டும் கோனிக் நூதனசாலைக்குத் திருப்பியனுப்பவும் என்று குறிப்பிட்டு இலக்கமிட்டு வெளியே விட்டு இருக்கிறார். இதனால் பட்டுப் பூச்சிகளின் வாழ்க்கை பற்றிய பல விவரங்கள் தெரியவரலாம் என்று தெரிகிறது. இம்மாதிரி 60,000 பட்டுப் பூச்சிகள் வெளியே விடப்பட்டிருக்கின்றன.

முடடை கோஸ்களுக்கு சில ரக பட்டுப் பூச்சிகளினால் பெருஞ் சேதம் ஏற்படுகிறதாம். ஆகவே இவைகளின் பெயர்களைக் கேட்டாலே சில விவசாயிகள் நடுங்குகிறார்கள். இவைகளைக் கொல்ல மருந்துகளை உபயோகித்தும் பூரண பலன் கிட்டவில்லை. இப்பூச்சிகளின் வாழ்க்கை விவரங்கள் தெரிந்தால் இவற்றை அடியோடு ஒழித்துக்கட்ட வழி கண்டுபிடிக்கலாம் என்று டாக்டர் ரோர் கூறுகிறார். இவர் பிராணிவர்க்க ஆராய்ச்சிக் கழகத்தின் அங்கத்தினர். இவர் சேவைசெய்துவரும் கோனிக் நூதனசாலை பட்டுப் பூச்சி ஆராய்ச்சி நிபுணர்களின் "மெக்கா"வாக மாறியிருக்கிறது.

பட்டுப்பூச்சி இறக்கைகளில் ஒட்டப்படும் இந்த அலுமினிய காகிதத்தின் எடை 5 மில்லிகிராமிற்கு மேற்பட்டதாக இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் பட்டுப்பூச்சி அதன் விருப்பப்படி எதேச்சையாக பறக்க முடியாது போகும்.

சுயரூபம்

"சந்திரா! ... என்னை மன்னித்து விடம்மா ... என்னைப்போல் சுயநலக்காரியை இந்த உலகத்திலே தான் காணமுடியுமா? ... என் குடிகாரப் பிள்ளைக்குப் பெண் கேட்ட பாவத்தை எப்படித் தான் கழுவப் போகின்றேனோ?"

சிறுகதை

இரவு மணி பன்னிரண்டு. இருள் அன்னையின் அரவணைப்பிலே அந்தக் கிராமமே உறங்கிக்கொண்டிருக்கிறது.

சந்திராவினால் உறங்க முடியவில்லை. தாயின் குறட்டையொலி அவளது உறக்கத்தைக் கெடுக்கின்றது எனச் சொல்ல முடியாது. உள்ளத்திலேபெரிய சுமை; மனதிலே ஏக்கம். உறக்கம் வருமா?

இருந்தாற்போல் நாய்கள் குரைக்கின்றன. அதைத் தொடர்ந்து யாரோ கதவைத் தட்டும் ஓசையும் எழுகின்றது. ஆண் துணையிழந்த வீடு. "ஐயோ" என்ற குரல்கேட்டு உதவிக்கு வருவதற்கு அக்கிராமத்தில் குடிகள் ஒன்றும் அப்படி நெருக்கமாக இல்லையே. சந்திராவின் உள்ளத்தில் பயம் படர ஆரம்பிக்கிறது.

"சின்னம்மா!...சின்னம்மா!!"- யாரோ ஈனக்குரலில் அழைக்கிறார்கள். சந்திரா பயத்துடன் எழுந்து படுக்கைமீது இருக்கிறாள். கதவு தட்டப்படும் சத்தம் தொடர்ந்து கேட்கிறது.

"சின்னம்மா! சின்னம்மா!"

இப்பொழுது குரலுக்குரியவனைத் தெரிந்துகொண்டு விடுகிறாள். பயம் போய்விடுகிறது. ஆனால் உள்ளத்திலே ஆயிரங் கேள்விகள் ஒரேகணத்தில் எழுகின்றன. சத்தம் செய்யாமல் டோச் விளக்கை கையிலெடுத்த வண்ணம் வெளியே வருகின்றாள். விருந்தைக்கு வந்த சந்திராவின் மனம் அந்த வெறுமையான இடத்தைக் கண்டு துணுக்குறுகின்றது. அப்பா உறங்கிய இடம்! "நான் போகப்போகிறேன் எனக் கண்ணீர்வடிக்கிறாயா சந்திரா!...இல்லை,நான்உன்னை விட்டுவிட்டுப் போகமாட்டேன் சந்திரா... அப்படி நான் போய்விட்டாலும் நீ அனாதையில்லை என்று சொல்வதற்கு உன் அம்மா இருக்கிறாள். உன் ஆருயிர் அத்தான் மனோகரன் இருக்கிறான்" என மூன்று மாதங்களுக்கு முன்பு கூறிய அப்பா அடுத்தநாளே போய்விட்டார்!

"சின்னம்மா!.. சின்னம்மா!" என்ற அந்த ஈனக்குரலும்"தட, தட" எனக் கதவைத் தட்டும் சத்தமும் தொடர்ந்து கேட்கின்றது. சந்திரா ஓடிச்சென்று கதவைத் திறக்கின்றாள்.

"சின்னம்மா!...ஐயாவிற்கு... சின்னையாவிற்கு..."- சொற்கள் வெளிவர மறுக்கின்றன. வீட்டிலிருந்து ஓரே ஓட்டமாய் ஓடிவந்திருக்கிறான் போலிருக்கிறது "வீட்டு நிலையும்" அவள் உள்ளத்திலே பீதியைத் உண்டாக்கியிருக்கவேண்டும்.

"என்ன பட்டு!... என்ன... ஐயாவிற்கு என்ன?"- கலக்கத்துடனே சந்திரா வினவுகிறாள்.

"ஐயா குடித்துவிட்டு ..." அவன் சொல்லி முடிக்கவில்லை "ஆ" என ஏங்கியபடி மனோகரனின் வீட்டை நோக்கி ஓடுகிறாள். பட்டுவும் தொடருகிறான்.

மனோகரன் கிடந்த நிலை! வெறுந்தரைமீது குப்புறப்படுத்தபடியே ஏதோ அரற்றிக்கொண்டிருக்கிறான். அவனைச் சுற்றி ஓரே வாந்தி வெள்ளம். உடல் அதில் தோய்ந்துபோயிருக்கிறது. வாந்தி நாற்றமும் பிறண்டி நாற்றமும் சேர்ந்து சந்திராவின் வயிற்றைக் குமட்டுகிறது.

அறையிருந்த நிலை! கட்டில் அலங்கோலமாகக் கிடக்கிறது. சுவரிலே மாட்டப்பட்டிருந்த கண்ணாடி பிறேம்போட்ட படங்களெல்லாம் சிதறப்பட்டிருந்தன. சிதறிக்கிடந்த கண்ணாடித் துகள்கள் எந்நேரமும் காலைப் பதம்பார்ப்பதற்குக் காத்திருக்கின்றன. மேசையிலே கிடந்த விலைமதிப்பற்ற புத்தகங்கள்- 'மனோகரன்' கம்பெனியின் கணக்குப் புத்தகங்கள்—அறையிலிருந்த அத்தனை பொருட்களும் மனோகரனின் கோர வெறியிலே சிக்கி நிலை பெயர்ந்து பரிதாபகரமான நிலையிலே கிடக்கின்றன.

"மாமி எங்கே பட்டு?"

"அந்தம்மாவை என்ன வென்று சொல்வது சின்னம்மா...சின்னையாவைப் பார்த்தாரோ இல்லையோ அவருக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே! 'இவன் இப்படியே கிடக்கட்டும் வெறி முறிந்த பின்னர், தான் செய்த வீரத்தனத்தைப் பார்க்கட்டும். அப்பொழுதாவது இவனுக்குப் புத்திவருகிறதா பார்ப்போம்' எனக் கத்திவிட்டுக் கதவையும் பூட்டிவிட்டுப் போய்விட்டார். நான்தான் மனம் பொறுக்காமல் உங்களிடம் வந்து..."

"பட்டு..."- அவனைப் புகழ்வதற்காக அழைத்தவள் நிலைமையைப் புரிந்துகொண்டவளாய் "இரண்டு வாளி தண்ணீர் கொண்டு வா" என முடிக்கிறாள்.

ஐந்து நிமிடங்களில் நரக லோகம் சொர்க்கலோகமாக மாறியது. பட்டுவின் உதவியுடன் மனோகரனின் உடைகளைக் களைந்து அவன் முகத்தையும் உடலையும் கழுவுகிறாள். அவன்விடும் மூச்சிலிருந்து வரும் பிறண்டி நாற்றம் அவளைச் சித்திரவதை செய்கிறது. பொறுத்துக்கொண்டு பட்டுவின் உதவியுடன் அவனைத் தூக்கி கட்டிலில் கிடத்துகிறாள். அடுத்து அறையைச் சுத்தம் செய்வதில் ஈடுபடுகிறாள்.

சந்திராவின் உள்ளத்தை நன்றாக அறிந்த பட்டுவுக்கே ஆச்சர்யம்! இத்தனை பொறுமையும் அடக்கமும் இந்தப் பெண்ணுக்கா?

'பெற்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தாயே கண்டுங் காணாததுபோல் போய்விட்டாளே! தாய்க்கில்லாத இரக்கம் இவளுக்குஎங்கிருந்து வந்தது? எப்படி வந்தது? ... சின்னையா அதிர்ஷ்டசாலிதான்' என அவன் மனம் எண்ணலாயிற்று.

சந்திரா தன்னை இன்னுமொரு ஜோடிக்கண்களும் கவனிக்கின்றன என்பதை அறியாமல் தனது காரியத்திலே கண்ணாயிருக்கிறாள்.

சிதறிக்கிடந்த பொருள்கள் எல்லாம் அதற்குரிய இடத்தை அடைந்தன. பட்டு தண்ணீர் ஊற்ற அறையையும் கழுவி முடிக்கிறாள்.

"அப்பாடா" எனப் பெருமூச்சு விட்டவண்ணம் நிமிர்ந்த சந்திராவின் கண்கள், வியப்பு, ஆனந்தம், பெருமை, அனுதாபம் முதலிய பல்வேறு உணர்ச்சிகள் மேலிட நோக்கிய மனோகரனின் தாயாரின் கண்களைச் சந்திக்கின்றன.

"மாமி!" என அழைத்த சந்திரா நாணத்தின் காரணமாகக் குனிந்து கொள்கிறாள்.

மெல்ல நடந்துவந்து சந்திராவின் கைகளைப் பற்றுகிறாள் மாமியார். அவளின் கண்களினின்றும் வழிந்த கண்ணீர் சந்திராவின் கைகளை நனைக்கத்துடிக்கிட்டு நிமிர்கிறாள். அவளின் கண்களிலிருந்து ஆறாகப் பாய்கிறது கண்ணீர்!

"ஒரேயொரு மகன்! தந்தை வைத்துவிட்டுப்போன சொத்தையெல்லாம் அழித்துக்கொண்டிருக்கிறானே! இப்படிப்பட்ட குடிகாரனுக்கு யார்தான் பெண்கொடுக்கப் போகிறார்களோ" என ஏங்கிய அவருக்கு குணக்குன்றான சந்திராவே தனதுமருமகள் என்ற உணர்வு கொடுத்த ஆனந்தக் கண்ணீரா? அல்லது குடிகாரர்களுக்குத் தலைவனாக விளங்கும் இவனுக்கு வாழ்க்கைப்பட்டுத் தன் வாழ்க்கையைப் பாழடித்துக் கொள்ளப் போகிறாளே என்ற பொறாமலின் காரணமாக எழுந்த துயரக்கண்ணீரா?

"என்ன மாமி இது, சிறு குழந்தையைப் போல ... சி! முகத்தைத் துடைத்துக்கொள்ளுங்கள் ... மாமி!"

"சந்திரா! ... என்னை மன்னித்து விடம்மா ... என்னைப் போல் சுயநலக் காரியை இந்த உலகத்திலேதான் காண முடியுமா? ... என் குடிகாரப்பிள்ளைக்குப் பெண் கேட்ட பாவத்தை எப்படித்தான் கழுவப்போகின்றேனோ?"

அம்மாளின் அழுகை நிற்கவில்லை. மாறாகப் பெருகுகின்றது. சந்திராவின் மார்பிலே தலையைப் புதைத்த வண்ணம் கண்ணீர் சிந்துகின்றாள்! "என் உள்ளத்தை அறிந்துகொள்ளாமல் அழுகின்றீர்களே மாமி! ... நீங்கள் பெண் கேட்டதற்காகவோ அல்லது அம்மாவும் அப்பாவும் வற்புறுத்தியோ நான் திருமணத்திற்குச் சம்மதிக்கவில்லையே. என் தூயஅன்பின் காரணமாக அவருடைய குடியை நிறுத்தி அவருடன் இன்ப மணவாழ்க்கை நடத்துவேன் என்ற உறுதி அன்று இருந்தது சம்மதித்தேன். இன்றும் இருக்கிறது மாமி!... இருக்கிறது ... என் உயிரைக் கொடுத்தாவது அவரின் பழக்கத்தை நிறுத்துவேன் ... இது சத்தியம்! சத்தியம்! சத்தியம்!" என்கிறாள் மாமியாரின்கைகளை இறுகப் பற்றிய வண்ணம். அவள் குரலில் உறுதிதொனிக்கிறது.

கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும் என்ற முன்னோரின் வாக்கிலே சந்திராவிற்கு அசைக்கமுடியாத நம்பிக்கை. செய்கைகளினாலும் இனியபேச்சினாலும் மனோகரனின் குடியை சிறுத்திவிடமுடியும் என்பது அவள் நம்பிக்கை. அவள் அவனுடைய பழக்கத்தைப் பற்றி முன்பு குறிப்பிடும்பொழுதெல்லாம் அது ஒரு பிரச்சினை என்றே அவன் ஏற்றுக்கொள்ளமாட்டான். நாலு தலைமுறைக்கு வேண்டிய சொத்து இருக்கிறது. பிறருக்குத் தீங்கு ஏற்படாத வகையில் தான் குடிப்பதில் தவறொன்றும் இல்லை என்பது அவன் கருத்து. சந்திரா தன் செய்கையைக் குத்திக்காட்டும் பொழுதெல்லாம் சிரிப்பையே தன் பதிலாகக் கொடுப்பான். இப்பொழுது மனோகரனை சாதிக்கும் மௌனமும் அவனுடைய ஆழ்ந்த சிந்தனையும் அவனது பழக்கத்திலே உள்ள விபரீதன்மையைச் சிறுது சிறிதாகப் புரிந்துகொண்டு வருகிறார் என்ற எண்ணத்தை அவருக்குக் கொடுத்தன.

"அத்தான்"

பதிலில்லை.

"அத்தான் பூரண சந்திரனைப் பார்த்தீர்களா...? அவனுடைய உடலிலே மறைக்கமுடியாத பெரிய மறு... இருந்தும் எவ்வளவு இனிமையான தண்ணொளியைப் பரப்புகின்றான்."

சந்திரா தலையை நிமிர்த்தி மனோகரனை நோக்குகிறாள். அவன் இருந்த நிலையிலோ பார்வையிலோ எந்தவிதமான மாற்றமுமில்லை. ஒரு நமுட்டுச் சிரிப்புடன் தொடருகிறாள்.

பரம்

— 2 —

கீழ்வடலைப் பாலாக்கிக்கொண்டிருந்த பூரண சந்திரனின் தண்ணொளி நீண்டு வளைந்த கடற்கரையின் வெண்மணற்பரப்பு; உடலிலே கிளர்ச்சியை உண்டாக்கும் இனிய தென்றல் காற்று எல்லாவற்றிற்கும்மேலாக அந்தஇடத்தை அரசு செய்து கொண்டிருந்த ஏகாந்தம். தனிமையை விரும்பும் காதலர்களுக்குவேறென்ன வேண்டும். ஆனால் சந்திராவோ மனோகரனோ இந்த இனிய சூழ்நிலையை ரசித்ததாகத் தெரியவில்லை.

சந்திரா உல்லாசமாய் மணல் மீது அமர்ந்திருக்கிறாள். கைகள் மணலுடன் விளையாடுவதில் ஈடுபட்டிருக்கின்றன. கண்கள் கடலுக்குள் செல்வதும் பின்பு மனோகரனிடம் பாய்வதுமாக இருக்கின்றன. ஆனால் மனம்?

மனோகரன்! அவன் எதிர்த்திசையை நோக்கிய வண்ணம் அமர்ந்திருக்கிறான். அங்கு நிலவிய அமைதியைக் குலைக்க விரும்பாதவன் போல் ஆழ்ந்த சிந்தனையில்ஈடுபட்டிருக்கிறான். இது கடந்த இரண்டு மாதங்களாகத்தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சி! மௌனமாக இருவரும் வந்து உட்காருவதும் மௌனமாகவே எழுந்து சென்றுவிடுவதும் அக் கடற்கரை தினம் காணும் காட்சி. ஆனால் இந்த நிகழ்ச்சி சந்திராவிற்கு மனவேதனைக்குப் பதில் மனநிம்மதியே அளித்துவருகின்றது.

"பெரிய புதுமையொன்றையல்லவா கண்டுபிடித்துவிட்டாய் என நீங்கள் என்னைக் கேலி செய்யலாம். ஆனால் யோசித்துப்பாருங்கள் அத்தான். அதில் எத்தனை பெரிய உண்மை பொதிந்திருக்கிறது.

சுய ஒளியில்லாத சந்திரன் தனக்கு வேண்டிய ஒளியைக் கதிரவனிடமிருந்துதான் பெறுகின்றான். ஆனால் அதை அப்படியே பிறருக்காக ஈர்ந்துவிடுகின்றானே!

"அது மட்டுமா அத்தான்? சந்திரனுக்கு கதிரவன் கொடுக்கும் ஒளியோ உஷ்ணம் மிகுந்தது. ஆனால் சந்திரனோ உஷ்ணத்தைத் தன்னுள்ளே அடக்கிக்கொண்டு தண்ணொளியையே பரப்புகின்றான். இங்கே தான் அவனுடைய பெருமையும் பூரணமடைகின்றது!"

மீண்டுமொருமுறை மனோகரனைக் கூர்ந்து நோக்குகிறாள். எந்தவிதமான அசைவையும் அவன் காடட்டவில்லை. அவள் கூறியதன் உள் அர்த்தத்தை அவன் புரிந்துகொண்டானா அல்லது புரியாதது போல் நடிக்கின்றானா?

"வானிலே மின்னும் எண்ணற்ற விண்மீன்களையும் பாருங்கள் அத்தான்! அவைகள் சொந்தமாக ஒளி பெற்றிருந்தும் அலையால் நமக்கு ஏதாவது பயனுண்டா?"

"போதும் சந்திரா, போதும்! என்னைச் சித்திரவதை செய்வதென்ற எண்ணத்துடன் தானா இன்று வந்தாயா... இருக்கக் கூடாத இடத்தில் பணம் இருக்கிறதே... இவ்வளவு பணமிருந்தும் யாருக்காவது அதனால் பயனுண்டா... இல்லாதவர்க்கு அளித்துப் பெருமைப்படவேண்டிய பணத்தை அநியாயமாகக் குடித்து அழிக்கின்றானே என, குத்திக்காட்டுகிறாயா சந்திரா?"

"இல்லை அத்தான்! என்னைத் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டீர்கள்." தான் கூறிய தன் பொருளை அறிந்துகொண்டுவிட்டார் என்பதில் அவளுக்கு உள்ளூர மகிழ்ச்சி!

"சந்திரா!" எனச் சற்று உறுதியான குரலில் அழைத்தவன் பின்பு என்ன நினைத்துக்கொண்டானோ தலையைத் தாழ்த்திக்கொண்டு யோசனையிலாழ்கின்றான்.

சந்திராவின் கேலிப் பேச்சு அவனுள்ளத்திலே அம்பாய்த் தைக்கின்றனது. கிராமக்கிளையே ஒளிபாய்த் திகழ்ந்த குடும்பத்தின் பெயரைக் கெடுத்தாகிவிட்டது. நிலபுலன்களெல்லாம் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது; ஆயிரக்கணக்கில் லாபம் கொடுத்துவந்த வியாபாரமும் விழுந்துவிட்டது. எந்நேரமும் கலகலப்பாய் சாவீடு போல் காட்சியளிக்கும் மனை; பெற்றதாய் பட்ட வெறுக்குமளவுக்கு வந்துவிட்டதன் நிலை. இத்தனை நடந்துவிட்டும் மனதைத் தடுக்காமல் சந்திரா நடத்தும் போராட்டம் கல்லையும் கரையக் கூடியதல்லவோ!

"சந்திரா!" எனக் கனிவுடன் அழைத்தவண்ணம் அவளது கையைப் பற்றுகிறான். இரண்டு மணித்தியாலங்களாக அத்தத்திலே நடந்துவிட்ட போராட்டம் ஓய்ந்துவிட்டது போலிருக்கிறது. முகத்திலே அமைதி ஒளிவீசுகின்றது.

"என்று கல்லூரியில் உன் அறிமுகம் எனக்கு ஏற்பட்டதோ, அன்றே உன்னை ஒரு பாழுங்கிணற்றிலே வீழ்த்திவிட்டேன் சந்திரா."

மனோகரனின் மென்மையான ஸ்பரிசத்தை அனுபவித்துக்கொண்டிருந்த சந்திராவுக்கு காய்ச்சிய எண்ணெய்யைக் காதில் விட்டாற்போல் இருந்தது இந்த வார்த்தைகளைக் கேட்க.

"அத்தான்!" எனக் கூவுகிறாள்.

"எதற்காக அலறுகிறாய் சந்திரா... நீ என் காதலை ஏற்றுக்கொள்ளும்போது இல்லாத கொடிய பழக்கத்தை நான் பழகிக்கொண்டபொழுதும் நீ உன் காதலைப்போற்றி கொடிய குடிகாரனொருவனை மணக்க முன்வந்திருக்கிறாயே... நான் அதற்கு சற்றாவது தகுதியுள்ளவன் தானா? ...கைகட்டிச் சேவகம்செய்த வேலைக்காரர்களே இப்பொழுது என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். ஏன் என்னைப் பெற்றெடுத்த அம்மாவே என்னை வெறுக்கிறாள். ஆனால் நீ மட்டும்..." அதற்குமேல் அவனால் பேசமுடியவில்லை. சந்திராவின் தோளிலே சாய்ந்தவண்ணம் கண்ணீர் சிந்துகின்றான். ஐந்து நிமிட மௌனம்!

"சந்திரா" மௌனத்தைக் கலைக்கிறான். குரல் மணியோசைபோல் கணீரென ஒலிக்கிறது. "இன்று ஒரு கடைசி முடிவுக்கு வந்துவிட்டேன்... ஆமாம் சந்திரா... இன்னும் மூன்று மாதங்களில் எமது திருமணமல்லவா? அன்றே, உனக்குத் தாவிகட்டும் அன்றே எனது குடிக்குத் தலைமுழுகி விடுகின்றேன்..."

அவன் முடிக்கவில்லை "அத்தான்" எனக் கூவிக்கொண்டே அவனை இறுக அணைத்துக் கொள்கிறாள். அவன் கண்களினின்றும் வழிந்த ஆனந்தக் கண்ணீர் மனோகரனின் மார்பு வழியாகப் பாய்கிறது. எதோ பேச முயலுகிறாள். ஆனால் சொற்கள் வெளிவந்தாற்றானே!

"உண்மையாகத்தான் சந்திரா கூறுகிறேன்... இது,குடி

(10ம் பக்கம் பார்க்க)

ஈழத்துச் சிறுகதைகள் பொதுவான சில அம்சங்கள்

— சு. வே. —

ஈழத்திலே சிறுகதை வளர்ச்சி பற்றி எழுத்தாளர் பலர் பல்வேறு கோணங்களில் தமது பார்வையைச் செலுத்தி ஆராய்ந்துள்ளனர். சிறுகதைத் துறையில் தமக்கென ஓர் இடத்தை வகுத்துள்ள சு. வே. சிறுகதைகளுக்கு இரு உயிர்த்தன்மைகளுண்டு என்று கூறுகின்றார். ஒன்று உருவம்; மற்றது உள்ளடக்கம். சிறுகதை இலக்கியம் வளமுற்று வரும் இக்காலத்தில், இத்தகைய கட்டுரைகள் எழுத்தாளர்களின் சிந்தனைக்கு நல்விருந்தாகுமென்பதற்கு ஐயமில்லை.

இந்தக் கட்டுரை எதனையும் அறுதியிட்டு முடிவுகாண முயலவில்லை; முயலாது. விஞ்ஞானம், கணிதம் போல் நிரந்தரமான தோர் உண்மையை-விடையை-முடிபாகக் கூறி முற்றுப்புள்ளி வைத்து விடக்கூடிய விஷயமன்று இது. இத்துறைபற்றிப் பலர் பல பல கோணங்களிலே தத்தம் பார்வையைச் செலுத்தி ஆராய முற்பட்டதுண்டு. சிலர் தத்தம் மனோபாவம் சிந்தனை என்பவற்றோடு, வேண்டாத 'மன அரிப்பு'களையும் கூட்டி விமர்சிக்கமுயன்றதுண்டு. எனினும் கடைசிவிடை பாதரசம் போல நழுவி நழுவிப் போனதைத்தான் காண முடிந்தது. உண்மைகள் மனதிலே உறைக்க முடியாமல் தெளிந்தும் தெளியாமலும் மயக்குவதைத்தான் காணமுடிந்தது. அதற்குயாரையும் குறைகூறிப் பயனில்லை; ஏனெனில் இதுபோன்ற எல்லாப் பொருள்களின் இயல்பு இதுதான்.

அடுத்ததாக, இத்துறைபற்றி நான் விமர்சிக்கவும் முயலவில்லை. ஆக்கபூர்வமான விமர்சனமென்று கூறி யாரையும் ஏமாற்றவும் முயலவில்லை. எனவே, இக் கட்டுரையில் பொதுவான சில அம்சங்களைப் பற்றியே கூறமுயல்வேன். இதுஇன்றுள்ள பல எழுத்தாளர்களுக்கும் ஆக்கபூர்வமான விமர்சன கர்த்தாக்களுக்கும் ஆர்வமுள்ள வாசகப் பெருமக்களுக்கும் ஒருசிறிதாவது பயன் விளைக்குமென்று நம்புகிறேன்.

'எழுத்தாளர்' என்ற பட்டம்

சமீபத்தில் வெளிவந்த ஒரு மாத சஞ்சிகையில் ஒரு விவாக விளம்பரம் காணப்பட்டது. அதில் பிரபல எழுத்தாளர் சிரஞ்சீவி x அவர்களுக்கும் செல்வி y அவர்களுக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது என்ற குறிப்பு தம்பதிகளின் குறிப்பு படத்துடன் காணப்பட்டது. அந்த x என்னென்ன இலக்கிய முயற்சிகள் செய்தார்; அவற்றுள் எத்தனை சிரஞ்சீவித்துவம் பெற்றுள்ளன; எந்தெந்தச் சஞ்சிகைகளில் எழுதினார் என்ற கணக்கெடுப்புகளைவிட்டு, அதிலுள்ள எண்ணக் குறிப்பையே கவனிக்க வேண்டும். பொருள்நிலையில் அகலபாதலத்துட்கிடந்து துன்புற்றாலும், எழுத்தாளர் என்ற பட்டம் சமூகத்தாற் கௌரவிக்கப்பட்டு வருகிறது என்பதை அது காட்டுகிறது. தமிழ்நாட்டிலும் ஈழநாட்டிலும் பெரும் உயர்பதவிகள் வகிப்பவர்கள் கூட, அப்பதவிபற்றிப் பிரஸ்தாபிப்பதிலும் பார்க்க, தாம் எழுத்தாளர் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப் படுகின்றனர். அதுவும் 'பற்றி' இலக்கிய உற்பத்தியாளராகவோ, செய்யுட்களுக்கு விரிவுரை கூறிச் சுவைகாணுஞ் கலைஞராகவோ தம்மைக் காட்டிக்கொள்ளாது, சுய சிருஷ்டிகளாய், ஆக்கமுயற்சிகளாய் உள்ள சிறுகதை எழுதுபவர்களாகவே முத்திரை பொறித்துக் கொள்ளவிரும்புகின்றனர். இந்நிலையை ஊன்றி நோக்குங்கால், 'என்ன கதை தானே' என்ற அலட்சிய மனோபாவம் கரைந்துவிட, அவையும் இலக்கிய அந்தஸ்துடையவை, இலக்கியத்துறைகளிலே, குறிப்பிடத்தக்க ஒரு துறை என்ற எண்ணம் சமூகத்தில் மலர்ந்து விட்டது என்பதை உணர முடிகிறது. சிறுகதை இலக்கியம் இத்துணை வியாபகமடைந்து, இலக்கியத்திலும் சமூகத்திலும் நிரந்தரமானதோரிடம் பெற்றமைக்குப் பலகாரணங்கள் கூறலாம். சிறுகதைகளெல்லாம் 'சிறு' என்ற அடைமொழிபெற்றிருப்பது அவற்றுளொன்று. அந்தச் சிறு என்ற அடைமொழியின் அடித்தளத்திலே, தற்காலச் சூழ்நிலையும் வாழ்க்கை முறையுங் காணப்படுகின்றன. வேகம் கூடி இயந்திரப் போக்கிலமைந்துவிட்ட சூழலிலும் அதனாலமைந்த வாழ்க்கைமுறையிலும் எதனையும் நின்று நிதானித்து ஆராய முடிவதில்லை, அதற்குரிய ஆற்றலும் காலமும் இல்லை. பழந்தமிழ் இலக்கியங்களைப் படித்துணர்ந்து சுவைப்பதற்குச் சராசரி ஆற்றலும் காலநீட்டமும் பொறுமையும் தேவை. நீண்டநாவலைப் படிப்பதற்குப் பொழுதும் பொறுமையும் தேவை. கட்டுரைகளையும் கவிதைகளையும் நாடகங்களையும் படிப்பதற்கு மனஈடுபாடும் பொறுமையும் வேண்டும். இந்நிலையில் மக்களின் வாசிப்புத் தாகத்தைப் பூர்த்திசெய்வதற்கான ஒரு குறுக்கு வழியாகச் சிறுகதைகள் வளர்ச்சிபெற்றுவிட்டன. இந்நிலை இலக்கிய வளர்ச்சியிலே போற்றி செய்யக் கூடிய ஒரு நிலையல்லவாயினும் தடுக்கமுடியாததொன்று. இலக்கியமென்னும் பிண்டப் பொருளின் அங்கங்களான கவிதை நாடகம் நாவல் ஆய்வு ஆய எல்லாத்துறைகளும்வளர வேண்டிய இடத்தில், ஒரு அங்கமான சிறுகதைகள் மின்னல் வேகத்திற் பெருகி, மற்றவற்றை அடிமை கொள்ளுமளவுக்கு வளர்வது இலக்கிய வளர்ச்சியாகுமா? அதனால் சிறுகதை வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதுகருத்தன்று. மற்றத்துறைகளிலும் வேகமூட்டி, அவற்றையும் துரிதகதியில் வளர்த்தலே அறிவுடைமை. இதனைஎழுத்தாளப் பெருமக்கள் உணர்வது நன்று.

இரசனையுணர்வு

தாம் தாம் அனுபவித்த வாழ்க்கை அனுபவங்களையும், உணர்ச்சிச் சுழிப்புகளையும் எதிர்த்துப் போராடிய வாழ்க்கைச் சிக்கல்களையும் விண்டு சொல்லி, அனுபவப்பரிமாற்றம் செய்யமுடியாமல் தத்தளிக்கும் நிலை எல்லார்க்கும் ஏற்படுவதுண்டு அப்போது அவற்றின் ஒவ்வொரு துணுக்கையும் நுட்பமாகச் சொல்லத் தெரிந்தவன் நிதர்சனமாகக் காட்டத்தெரிந்தவன் சிறுகதை உருவில் காட்டும்போது, தாம்கண்டு, உணர்ந்து, அனுபவித்தவற்றை மக்கள் தெளிவாக அறிகிறார்கள். இந்த இரசனையுணர்வு மற்றொரு பிரதான காரணமாகும். இந்த அவசர யுகத்தில் சுருங்கிய அளவிலே சுவை நிரம்பியதாக வாசகனுக்கு ஏதாவதொன்றைக் கொடுக்கலாமென்றால் அது சிறுகதைதான் என்ற எண்ணம் எல்லாப் பத்திரிகாசிரியர்களுக்குமுண்டு. மூன்று நான்கு சிறுகதைகள் தானும் இல்லாத எந்தப் பத்திரிகைகளையும் காண முடிவதில்லை பத்திரிகைகளின் இவ்விதத் தொண்டும் புறக்கணிக்க முடியாத இன்னொரு காரணமாகும்.

மிகக் குறுகிய காலத்துள்ளே பெருவளர்ச்சியடைந்த இலக்கியத்துறை, சிறுகதையைப் போன்று வேறொன்று மின்று. மேலைநாட்டிலே 19-ம் நூற்றாண்டிலே, தனக்கென உருவமும்உள்ளடக்கமும்கொண்டு, தனித்துவமானதொரு துறையாக இயங்கத்தொடங்கிய சிறுகதை, தமிழில் வ. வே. சு. ஐயரால் அறிமுகப்படுத்தப்பட்டதென்றால் மிகையாகாது. தமிழில் சிறுகதை வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும்போது, அதன் தனித்தன்மை பூண்ட உற்பத்தியும் வளர்ச்சியும் அரை நூற்றாண்டுக்குள்ளாகவென்று துணிந்து கூறலாம்.

உருவமும் உள்ளடக்கமும்

குழந்தைகளுக்காக, 'ஒரேயொரு ஊரிலே ஒரேயொரு இராசா இருந்தாராம்' என்று கூறும் பாட்டி கதைகளும், கட்டுக்கதைகளும் நீதிக்கதைகளும் நொடிக்கதைகளும் பாமரக்கதைகளும் உருவத்திற் சிறியயனவாயினும் அவற்றை இன்றைய சிறுகதை இலக்கியத்துள அடக்கிவிடுவதற்கில்லை. ஆனால் அவற்றின் கருக்களில் ஒன்றோ பலவோ அமைக்கப்படும் விதத்தினாலும் சொல்லப்படும் முறையினாலும் இன்றைய சிறுகதை அந்தஸ்தைப் பெற்றுவிடலாம். 'எல்லாம் தமிழில் உண்டு' என்று வாதிடும் தமிழ்ச் சான்றோர்கள் சங்கச் செய்யுட்களெல்லாம் சிறுகதைகள் தாமே என்று வாதிடவும் தயாராயுள்ளனர். இந்த இடத்தில் அவர்களது தர்க்கம் குதர்க்கமாகப் பட்டாலும் அந்தக் குதர்க்கத்திலுள்ள தர்க்கரீதியான தொருண்மையைப் புறக்கணித்தல் முடியாது. கலித்தொகைச் செய்யுட்களுட் சில, இன்றைய எழுத்தாளர்களின் உப்புச் சப்பற்ற காதற்கதைகளின் கருக்களைவிட, நெஞ்சைத்தொடும் தன்மைவாய்ந்தன. சிலநாடகங்கள் சிறுகதைத் தன்மையுடையன என்பதை யாரும் மறக்கமாட்டார்கள். உருவத்தைப் புறக்கணித்து உள்ளடக்கத்தைப் பெரிதுபடுத்திப் பாராட்டினால் இவைகளையெல்லாம் சிறுகதையெனல வேண்டும். பாத்திரவமைப்பு, சூழ்நிலை, தொடக்கம், எழிச்சி முடிபு ஆகிய விறுவிறுப்பு பொருத்தமான உரையாடல், உத்தி, உவம உருவகம், நடை என்பன சேர்ந்த உருவ அமைப்பே சிறுகதையைத் தனித்ததொரு துறையாக்கியது. இதனால் கதைப்பொருளும், கருப்பொருளும், உரிப்பொருளுமாகிய உள்ளடக்கம் தேவையற்றதென்பது கருத்தன்று. பிணத்துக்கு உருவமுண்டு என்றால் அது மனிதனாகி விடுமா? சுளையற்ற தோலைப் பழமெனக்கூற முடியுமா? சிறுகதைத் துறையிலும் உள்ளடக்கம் வேண்டாம் உருவந்தான் வேண்டுமென்று வாதாடுவதும் உருவம் வேண்டாம் உள்ளடக்கந்தான்வேண்டுமென்று போர்புரிவதும் வீண் முயற்சி. சிறுகதைகளுக்கு இரு உயிர்தன்மைகளுண்டு. ஒன்று உருவம்; மற்றது உள்ளடக்கம்.

ஈழத்தில்

ஈழத்துச் சிறுகதை வரலாற்றை எண்ணுங்கால், அது தமிழகச் சிறுகதை வரலாற்றுடன் வெகு நெருக்கமாகப் பிணைந்திருப்பதை உணரலாம் தமிழகத்தில் இத்துறையில் எழுந்த ஒவ்வொரு அலையும் ஈழத்தையும் தாக்கி எதிரொலித்தது என்று கூறுவது தவிர்க்கமுடியாததோர் உண்மை. தமிழ்ச் சிறுகதைத் தந்தையெனப் போற்றப்படுபவர் வ. வே. சு. ஐயர் அவர்கள். அவர்களையே தமிழ் சிறுகதை வரலாற்றின் மூல விக்கிரகம் எனக் கொள்ளல் வேண்டும். அவர் காலத்தவரான மறுமலர்ச்சிக் கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரும் நடைச்சித்திர வல்லாளரான வ. ராவும் இந்த இலக்கிய இயக்கத்தாற் கவரப்பட்டனராயினும் முன்னவருக்குக் கவிதைத் துறையும் பின்னவருக்கு நடைச் சித்திரத் துறையும் வெற்றியளித்த அளவுக்கு, இத்துறை வெற்றியளிக்கவில்லையென்றே கூறவேண்டும். எனினும் இந்த இலக்கிய இயக்கம் அணையாய் விளக்காய் எரிய, எண்ணெய் ஊற்றியும் திரி தூண்டியும் உதவிபுரிந்தவர்கள் மணிக்கொடி பரம்பரையினராவர்.

இந்த இடத்திலே ஒருண்மையை நாம் மனதிற் கொள்ளல் நன்று. எந்தக்காலகட்டத்திலும் சிறுகதை வளர்ச்சிக்கு உரமிந்த பெருமைஅவ்வக்கால கட்டங்களில், காலப் போக்குக்கேற்ற கருத்துச் செறிவு கொண்ட பத்திரிகைகளையே சாரும். எனவே அவற்றின் காலத்தோடொட்டி, வளர்ச்சியை ஆராய்வது இலகுவான வழியென எண்ணுகிறேன்.

(தொடரும்)

மலர்க் கொத்து

— [illegible]ஸ் —

"இலங்கை உலகிலேயே மிகவும் அதிசயமான தேசம் என்று, பிரிட்டிஷ் இராஜதந்திரி ஒருவரிடம் ஜோர்ஜ் சொல்லியிருக்கிறாரே; அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று ஒருவர் பெர்னாட் ஷாவைக் கேட்டார்.

"அந்த அரசியல்வாதி, தாம் [illegible] எல்லாத தேசங்களைப் பற்றியும் இப்படிக் கூறுவது வழக்கம். அதைக் கேட்டு யாரும் ஏமாந்து விடக்கூடாது!" என்று பதிலளித்தார் ஷா.

∴ ∴ ∴

நாம் அடுப்பு எரிக்கவும்; வீடுகட்டவும் உபயோகிக்கும் மூங்கிலைக் கொண்டு ஜப்பானியர்கள் 1,400க்கு மேற்பட்ட மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு உதவக் கூடிய முறையில் பொருள்களைச் செய்து குவிக்கிறார்கள். அடேயப்பா! இதிலும் அதிசயிக்கத்தக்கது, மூங்கிலைக்கொண்டே அவர்கள் வானொலிப் பெட்டியைத் தயாரித்து விடுவதுதான்!

∴ ∴ ∴

லேப்பிலைக் கொழுந்தைச் சாப்பிட்டுப் பழகுங்கள். அதில் விட்டமின் 'ஏ' சத்துப் பொருள் ஏராளமாக இருக்கிறது.

∴ ∴ ∴

அமெரிக்காவில் 1955-ம் ஆண்டு, காட்சி நிலை அழகு ராணி (Posture Queen) எப்படித் தெரிவு செய்யப்பட்டாள் தெரியுமா? அப்போட்டிக்கு மனுச் செய்து கொண்டவர்களின் முதுகெலும்புத் தொகுதியின் 'எக்ஸ்-றே' புகைப்படங்களைக் கொண்டுதான்!

∴ ∴ ∴

உலகத்திலேயே அதிகமான பக்கங்களுடன் வெளியிடப்பட்ட செய்தித்தாள் 'நியூயோர்க் டைம்ஸ்'தான்! அது, 1956-ம் ஆண்டு, மே மாதம் 6-ம் திகதியன்று 516 பக்கங்களுடன் வெளிவந்தது!

∴ ∴ ∴

'கறையானை அழிப்பதற்கு இறைவன் என்ன செய்கிறார்?—அதற்கு இறகு கொடுக்கிறார்!' —பெ. தூரன்.

∴ ∴ ∴

அறிவு வளர்ந்தோங்கும் இந்த அவனியிலேயே ஸ்வீடனில் படித்தவர்களின் தொகை ஏராளம். ஆயிரத்தில் ஒருவருக்கே எழுதப்படிக்கத் தெரியாது!

∴ ∴ ∴

நாம் தான் தபால் முத்திரைகளைச் சேகரித்து வைக்கிறோம் என்று நினைக்காதீர்கள். உலகப் புகழ்பெற்ற பல தலைவர்கள் கூட இந்தப் பழக்கத்திற்கு அடிமையாக இருந்திருக்கிறார்கள். அவர்களில் முக்கியமாக அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோர்ஜ் வாஷிங்டனையும்; இங்கிலாந்தின் அரசராக இருந்த ஆறாம் ஜோர்ஜ் மன்னரையும் குறிப்பிடலாம்.

∴ ∴ ∴

இரவு நேரங்களில் 'மினுக் மினுக்'கென்று நீலம் கலந்த ஒளியோடு காட்சியளிக்கின்றனவல்லவா மின்மினிப் பூச்சிகள்? அவற்றில் ஆண்களுக்குத்தான் இறக்கைகள் உண்டு; பெண்களுக்கு இல்லை!

∴ ∴ ∴

ஸ்விட்சர்லாந்தில், பேஸல் என்ற இடத்திற்கு அருகே உள்ள ஒரு ஹோட்டலில் ஒரு விளம்பரப் பலகை தொங்குகிறதாம். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறதாம்: "இந்த ஹோட்டலில் சாப்பிடுகிறவர் எவராவது இங்கே உள்ள வெள்ளித்தட்டு, 'ஆஷ்-ட்ரே' போன்ற பொருள்களைத் திருட விரும்பினால், மிகவும் ஜாக்கிரதையாகத் திருடும்படி வேண்டிக்கொள்கிறோம். ஏனென்றால், எங்கள் வாடிக்கைக்காரரின் நல்ல பெயரைக் காப்பாற்ற நாங்கள் விரும்புகிறோம்!"

∴ ∴ ∴

"நீங்கள் ஒரு குறித்த தவணையின் மீது பணம் வாங்கும் போதும், கொடுக்கும்போதும் அதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்" —திருக்குர்-ஆன் (2: 282)

★ கலை ★ அரங்கம் ★

ஆஸ்கார் பரிசுக்கு ஸ்ரீதரின் படம்!

நெஞ்சில் ஓர் ஆலயம் அனுப்பப்படலாம்

ஸ்ரீதர் டைரக்ட் செய்த நெஞ்சில் ஓர் ஆலயத்தை ஆஸ்கர் பரிசுப்போட்டிக்கு இந்தியாவின் சார்பில் போட்டியிடும் படங்களைத் தேர்ந்தெடுக்க நியமிக்கப்பட்டுள்ளமத்திய கமிட்டிக்கு தென்னிந்தியாவின் சார்பில் தென்னிந்திய பிலிம் வர்த்தகசபை தேர்ந்தெடுத்து சிபார்சு செய்துள்ளதாகத் தெரிகிறது.

பம்பாய், கல்கத்தா படங்களின் தேர்வு கிடைத்ததும் அவைகளை இந்திய சலனப்பட சங்கத்தார் பரிசீலனை செய்து முடிவு செய்தபின் நெஞ்சில் ஓர் ஆலயமும் போட்டிக்கு அனுப்பப்படும். இந்த ஆண்டுப் போட்டியில் இப்படம் இடம்பெறும் என நம்பப்படுகிறது.

அயல் நாட்டுப் படங்களில் சிறந்த ஒன்றுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஹலிவூட் ஆஸ்கார் பரிசி வழங்கப்பட்டு வருவது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

வளரும் படங்கள்

"பாதி மனிதன்"!

புத்தா பிக்சர்ஸ் தயாரிக்கும் படத்திற்கு "பாதி மனிதன்" என்று பெயர் வைத்திருப்பதாகத் தெரிகிறது.

சிவாஜிகணேசன் பிரதமபாகத்தில் நடிக்கும் இந்தப் படம் நியூடோன் ஸ்ரூடியோவில் வளர்ந்து வருகிறது.

"கும்பிட்ட கரங்கள்"

புதிதாகத் துவக்கப்பட்டுள்ள ராஜகுமாரி பிக்சர்ஸார் "கும்பிட்ட கரங்கள்" என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரிக்கப் போவதாகத் தெரிகிறது. மதுரை பாலமுருகன் என்பவர் எழுதியுள்ள இந்தக் கதையில் முத்துராமன், சந்திரகாந்தா ஆகியோர் நடிக்கலாம்.

அரங்கண்ணல் படம் வளர்ச்சி

வளர்மதி பிக்சர்ஸ் என்ற பெயரில் வசனகர்த்தா இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ. துவங்கியிருக்கும் புதிய திரைப்பட நிறுவனத்தின் படப்பிடிப்பு ஏவி. எம்மில் வளரத் துவங்கிவிட்டது. சிவாஜி, விஜயகுமாரி, சௌகார் ஜானகி, ராதா, நாகேஷ் ஆகியோர் நடிக்கும் இப்படத்தை பீம்சிங் டைரக்ட் செய்கிறார். விஸ்வநாதன்-ராமமூர்த்தி இசையமைக்கின்றனர் அரங்கண்ணல் வசனமெழுதுகிறார்.

மன்னார் 'திரைக்கலை மன்ற'ப் படத்தேர்வு (1962)

1962-ல் இலங்கையில் திரையிடப்பட்ட பாசமலர், சபாஷ் மாப்பிளே, மாமியாரும் ஒரு வீட்டு மருமகளே, கைதி கண்ணாயிரம், உத்தமி பெற்ற ரத்தினம், யானைப்பாகன், மாதவி, புதிய பாதை, தூய உள்ளம், ஜிம்போ, நான் கண்ட சொர்க்கம், தேன்நிலவு, பாலும் பழமும், அரசிளங்குமரி, நிச்சதாம்பூலம், இரத்தினபுரி இளவரசி, மருதநாட்டு வீரன், பெற்றவள் கண்ட பெருவாழ்வு, குமுதம், ஆளுக்கொரு வீடு, யார் மணமகன், சிவகாமி, எல்லாம் உனக்காக, சொல்லு தம்பி சொல்லு, நல்லவன் வாழ்வான், செந்தாமரை, பட்டி விக்கிரமாதித்தன், திலகம், மாடப்புரு, தாய் சொல்லைத் தட்டாதே, தங்கம் மனசு தங்கம், பூலோக சுந்தரி, வீரக்கனல், நாட்டுக்கொரு நல்லவள், சவுகடி சந்திரகாந்தா, சோலைமலை ராணி, பார்த்தால் பசிதீரும், கானல்நீர், பாலநாகம்மா, பாக்கியலக்ஷ்மி, சாரதா, நாகநந்தினி, ஆடவந்த தெய்வம், எதையும் தாங்கும் இதயம் ஆகிய படங்களில் கீழ்க்காணும் வரிசைப்படி மன்னார் திரைக்கலை மன்றத்தினர் படத்தேர்வு செய்துள்ளனர்:

சிறந்த படம் சாரதா (ஏ. எல். எஸ்.), சிறந்த நடிகர்: சிவாஜி (பாசமலர்), சிறந்த நடிகை: சாவித்திரி (பாசமலர்), சிறந்த துணை நடிகர்: அசோகன், (தாய்சொல்லைத் தட்டாதே), சிறந்த துணை நடிகை: விஜயகுமாரி (சாரதா), சிறந்த சிரிப்பு நடிகர்: தங்கவேலு (கைதிகண்ணாயிரம்), சிறந்த சிரிப்புநடிகை: சரோஜா (தேன்நிலவு), சிறந்த வில்லன்: ராதா (குமுதம்), சிறந்த வில்லி: ஞானம் (பாசமலர்), சிறந்தகவிஞர்: கண்ணதாசன் (பாலும் பழமும்), சிறந்த இசையமைப்பாளர்: விஸ்வநாதன் – ராமமூர்த்தி (பாலும் பழமும்), சிறந்த பாடகர்: சௌந்தரராஜன் (பாலும் பழமும்), சிறந்த பாடகி: சுசிலா (பாலும் பழமும்), சிறந்த ஒளிப்பதிவாளர்: வின்ஸென்ட் (தேன்நிலவு), சிறந்த கதாசிரியர்: கோபாலக்கிருஷ்ணன் (சாரதா), சிறந்த வசனகர்த்தா: கோபாலக்கிருஷ்ணன் (சாரதா), சிறந்த டைரக்டர்: கோபாலக்கிருஷ்ணன் (சாரதா) சிறந்த தயாரிப்பாளர்: சீனிவாசன் (சாரதா), சிறந்த வெளியீட்டுத் தாபனம்: "சினிமாஸ் லிமிடெட்" (பாசமலர், கைதி கண்ணாயிரம், பாலும் பழமும், குமுதம், தாய்சொல்லைத் தட்டாதே, பார்த்தால் பசிதீரும், ஆடவந்த தெய்வம்).

மன்னாரில்

சிறந்த படம்: குமுதம். அதிக வசூலான படம்: பாசமலர்.

அமெரிக்க ஸ்டூடியோக்களைப் பற்றி பாலச்சந்தர் கருத்து

சமீபத்தில் "ஆசிய சொஸைடி" யின் அழைப்பின் பேரில் அமெரிக்காவில் வீணைக் கச்சேரிகளை நிகழத்த அங்கு சென்றிருந்த திரு. எஸ். பாலச்சந்தர் ஹாலிவுட்டிற்கும் விஜயம் செய்து அங்குள்ள ஸ்டூடியோக்களையும் பார்வையிட்டார்.

தாம் அங்கு கண்டவற்றைப் பற்றி இவ்வாறு தெரிவித்துள்ளார்:

நட்சத்திர வாழ்க்கை

ஹாலிவுட் நட்சத்திரங்கள் மிகவும் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்கிறார்கள். அவர்களிடைய அரண்மனை போன்ற பங்களாக்கள் என்னை பிரமிக்க வைத்தன. நம் நாட்டில் பிரமவுத் கார் வாங்கிவிட்ட நட்சத்திரத்தை, பணக்கார நட்சத்திரமாக கருதுகிறோம். ஆனால் அவர்களுடைய ஆடம்பரத்திற்கு முன்னால் நம் நட்சத்திரங்கள் நிற்கமுடியாது.

அதிர்ச்சி!

ஹாலிவுட் சென்றதும் நான் முதலில் யூனிவாசல் இண்டர்நேஷனல் ஸ்டூடியோவை பார்வையிட்டேன். அங்கு ஒரு படப்பிடிப்பு நடைபெறுவதைக் கண்டு அதிர்ச்சியுற்றேன். அங்கு இப்போது டெலிவிஷன் படங்களே தயாரித்துவருகின்றனர்.

டெலிவிஷன் படங்களுக்கு அமெரிக்காவில் மௌசு. திரைப் படங்களையும் பிரதி தினமும் இரவு 9-30 மணிமுதல் இரவு 2-30 மணிவரை டெலிவிஷனில் காட்டுகின்றனர்.

நான் அடுத்தபடியாக வார்னர் பிரதர்ஸ் ஸ்டூடியோவைக் காணச் சென்றேன். அங்கு படப்பிடிப்பு நடைபெறாமல், நிசப்தமும் அமைதியும் குடிகொண்டிருந்தது. நட்சத்திரங்களுக்கு வேலையில்லாமல் அநேகர் ஸ்டூடியோவை விட்டு அனுப்பப்படுகின்றனர்.

20-ம் நூற்றாண்டு பாக்ஸ் ஸ்டூடியோவில் பாதிப் பகுதியை வேறு தொழிற்சாலைகளை நடத்துவதற்காக விற்று விட்டனர்.

ஹாலிவூட் ஸ்டூடியோக்களைப் பற்றிய விசேஷ அம்சம் என்னவென்றால் அங்கு பிரமாண்டமான 'ரெடிமேட்' அரங்குகள் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ளன.

செயற்கைக் காடு

சுமார் 10 ஏக்கர் நிலத்தில் செயற்கைக் காடுகள், அருவிகள், நீர்வீழ்ச்சிகள், மலைகள் லண்டன் மாநகர் பகுதிகள், மெக்ஸிக்கோ நாட்டு வீதிகள், படகுகள் விடக்கூடிய ஏரிகள், பெரிய கடைகள், பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் எல்லாம் எந்தநேரத்திலும் படப்பிடிப்புக்குத் தயாராக ஜோடிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற நிரந்தர அரங்குகள் நம் நாட்டிலேயும் மிகவும் அவசியம்.

டிஸ்னிலாண்ட்

ஹாலிவுட் ஸ்ரூடியோக்களைக் கண்ட நான், உலகப் புகழ் பெற்ற வால்ட் டிஸ்னியின் 'டிஸ்னிலாண்'டையும் காணத் தவறவில்லை. வாழ்நாளில் ஒவ்வொருவரும் தவறாமல் காணவேண்டிய கண்கொள்ளாக் காட்சி அது. இதைக் காண்பதற்காகவே எத்தனை தடவை வேண்டுமானாலும் அமெரிக்கா செல்லலாம்

ஹிந்தி படங்களில் சாவித்திரி நடிக்கிறார்

தென்னிந்திய நட்சத்திரமான சாவித்திரி நடிக்கும் ஹிந்திப் படமான சந்தோஷ் பிக்சர்ஸின் "கங்கா கி லஹ்ரன்" படப்பிடிப்பு பம்பாயில் ஆரம்பமாகிவிட்டது.

தயாரிப்பாளரும் டைரக்டருமான தேவிசர்மா தயாரிக்கும் இந்தப் படம் வர்ணத்தில் தயாரிக்கப்படுகிறது.

கிஷோர்சரஹு தயாரிக்கும் "கர்பாஸ்கே தேகோ" என்ற ஹிந்திப் படத்திலும் கதாநாயகியாக நடிக்க சாவித்திரி ஒப்பந்தமாகி இருக்கிறார். சாவித்திரி ஏற்கனவே ஜெமினியின் "பஹுத்தின் ஹுவே" என்ற ஹிந்திப் படத்தில் 1954-ல் நடித்திருக்கிறார்.

535 படங்கள் ஜப்பான் தயாரித்தது

சென்ற ஆண்டில் ஜப்பானில் 535 படங்கள் தயாரிக்கப்பட்டன. இவைகளில் 251 படங்கள் வர்ணத்தில் தயாரிக்கப்பட்டன.

தயாரிக்கப்பட்ட படங்களில் 528 சினிமாஸ்கோப் முறையில் படமாக்கப்பட்டவை. 6 படங்கள் மட்டுமே சாதாரணமுறையில் தயாரிக்கப்பட்டன.

யாருக்குச் சொந்தம்?

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்ரூடியோவில் அவர்களது "யாருக்குச் சொந்தம்"? துரிதமாக தயாராகி வருகிறது.

இளங்கோவன் வசனமெழுதியுள்ள இப்படத்தை கே. வி. ஸ்ரீனிவாசன் டைரக்ட் செய்து வருகிறார்.

கல்யாண்குமார், மனோகர் சந்திரபாபு, சாக்ரடீஸ் தங்கராஜ், எஸ். வி. சுப்பையா, முத்தையா, தேவிகா, புஷ்பலதா, பி. எஸ். சரோஜா, கே. மாலதி, மனோரமா ஆகியோர் நடிக்கின்றனர்.

'நான் மறவேன்' தங்கவேலு கூறுகிறார்

அந்தக் காலத்தில் எனது நாடக வாழ்க்கையில் நான் அனுபவித்த இனிப்பு கசப்புகளைப் பற்றி பல ரசமான சம்பவங்களைச் சொல்லமுடியும். இனிப்பு சம்பவங்களைவிடக் கசப்பே அதிகம். அவைகளில் இது ஒன்று. நடிகர்கள் 'கூத்தாடிகள்' என இழிவாகக் கருதப்பட்ட அந்த நாட்களில் நாடகம் பார்க்கமட்டும் மக்கள் ஆர்வமாக வருவார்களே தவிர, நாடகக்காரர்களைக் கண்டால் மக்களுக்கு வெறுப்புத்தான். அதன் காரணமாக நடிகர்கள் அந்த நாட்களில் பட்ட துன்பம் எழுதி மாளாது. ஒருதடவை ஒரு குக்கிராமத்தில் நாடகம் நடிக்கப் போயிருந்தோம் நானும் எனது கோஷ்டியினரும். நாங்கள் தங்குவதற்கு எங்களுக்குக் கிடைத்த இடம் என்ன தெரியுமா? அரிசி அரைத்துக் கொடுக்கும் மில். நல்ல காலம், அந்தச்சமயம் அந்த மில் பழுதாகியிருந்தமையினால் அந்த இடமாவது எங்களுக்குக் கிடைத்தது. இல்லாவிட்டால் நடுத்தெருவில் தான் நாங்கள் நின்றிருக்கவேண்டும்.

மாலை ஐந்து மணிபாயிற்று. நடிகர்கள் அரிதாரம் பூசிக் கொள்ள வேண்டிய நேரம். அதற்கு முன்னால் அனைவரும் முகம் க்ஷவரம் செய்துகொள்ள வேண்டும். அந்தக் கிராமத்து நாவிதர்கள் "நாடகக்காரர்களுக்கு வேலை செய்யமாட்டோம்" என்று கட்டுப்பாடோடு மறுத்துவிட்டார்கள்.

வேறு வழியில்லாமல் அருகில் எட்டாவது மைலுள்ள ஊரிலிருந்து ஒரு நாவிதரை அழைத்துவரத் தீர்மானித்தோம்.

கேட்டிருப்பாய் காற்றே

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

செடிகளுக்கு அருகில் சென்று இலைப்பாறிக் கொள்வாள். மரங்களில் ஏதாவது சின்னத் தேன்கூடுகள் இருந்தால், அவற்றைத்தான் அங்கே முன்னதாகவே மறைத்து வைத்திருக்கும் 'கவைக்கம்பா'ல் தட்டி அலைக்கழிப்பதில் அவளுக்குத் தனி விருப்பம்; அது அவளுக்கு மிகவும் பிரியமான விளையாட்டு.

அவளுடைய நினைவுமீண்டும் மீண்டும் கவைக்கம்பாகிமூக்காயியின் மழலைகளையே மனப்பரப்பில் உலுப்பிப் பறித்துச் சிதற வைக்கின்றது. வெகு தொலைவிலிருந்து அவளுடைய சன்னமாய் கீச்சிடும் அழுகைக் குரல் தன்னை அழைப்பது போல குணவதிக்கு மனதுள் பிரமை. குணவதி தன்னுடைய மடியில் பஞ்சுப் பாவைப் பிள்ளைபோல அசைவற்றுக் கிடக்கும் ஈஸ்வரியையே கூர்ந்து நோக்குகின்றாள்; கண்கள் ஈஸ்வரியிலேயே ஆழப் புதைகின்றன. ஈஸ்வரிநித்திரை மயக்கத்தில் கைவிரல்களால் மூக்கை கசக்கிக்கொண்டு அழும்பொழுது அவளது சிவந்த கன்னத்தில் குமிழிடும் சின்னஞ்சிறிய குழியின் சுழிப்பைப் போலத்தான் மூக்காயிக்கும்...

ஈஸ்வரியின் தலைமயிரை வருடும்பொழுது அங்குள்ள 'ரோசி' என்ற பூனைக்குட்டியின் மெத்தென்ற உடலைத் தடவுவது போல குணவதி உணர்வடைவாள். நிச்சயமாக மூக்காயிக்கும் பஞ்சுபோன்ற மென்மையான தலைமயிர்தான்.

மூக்காயியை அழவிடாமல் தூக்கிவைத்திருந்தவள் குணவதி. அவளோடேயே தன்னுடைய இதயத்துள் கசக்குண்டு போன ஆசைகளையெல்லாம் குணவதி கொட்டித் தீர்த்திருக்கின்றாள். குணவதியின் கதைகளுக்கெல்லாம், மூக்காயி அழுகையாலோ அல்லது சிரிப்பாலோதான் பதில் கொடுப்பாள்.

ஒருவரை ஒருவருள் இணைக்கும் பாசம் தலைமறந்து வானத்தை நோக்கி மேலே மேலே சென்று கீதத்தை வளையம் வளையமாக எழுந்து படரவைக்கின்றது...

குணவதி ஈஸ்வரியை மாறி மாறி இரண்டு கன்னங்களிலும் கொஞ்சினாள். நெஞ்சினுள் கனலும் மனவேட்கையின் வேகாரந் தாங்கமுடியாத குணவதி வெறிபிடித்தவள் போலக் குழந்தையைக் கொஞ்சிக்கொண்டேயிருக்க ...

"குணவதீ..."

காந்திமதியின் குரல், விருந்தையை அதிரவைக்கின்றது; இடுப்பிரண்டிலும் கைகளை வைத்துக்கொண்டு வாசலிலே வன்மத்தோடு கர்ஜித்துக் கொண்டு நின்ற காந்திமதியின் குரலில் குணவதி துள்ளி எழுந்தாள். அவளுடைய கையிலிருந்த ஈஸ்வரியை காந்திமதி 'இறுஞ்சி' பறித்துக்கொண்டாள்.

குணவதி கொலைசெய்த குற்வாளியைப்போல, பயத்துடன் தலைகுனிந்தபடி நின்றாள். பிரம்படியோ, அகப்பைச் குடோ தான் தனக்குக் கிடைக்கப் போகின்றது என அவள் எண்ணிக் கொண்டாள்.

காந்திமதி செருமிக் கொண்டு சொன்னாள்:

"குணவதீ" இனிநீகதிரையிலே ஒருநாளும் இருக்கப்படாது. அதோடை குழந்தையைக் கொஞ்சவும்கூடாது. இது முதல் பிழையெண்டபடியா உன்னை மன்னிச்சன்... இனி இப்பிடிச்செய்யாதை... செய்தியெண்டா... செய்தா..."

காந்திமதியின் அழுத்தமான குரல் ஓயமுன், குணவதியின் குரல் கிறீச்சிட்டது.

"இனிச் செய்யவிங்க..."

காந்திமதி புன்னகை செய்தாள். குணவதி கரங்களைக் குவித்தபடி, பயந்து நடுநடுங்கிய நிலையில் நின்றது காந்திமதிக்கு பரிதாபகரமான உணர்வை மனதினுள் தோற்றுவித்திருக்கவேண்டும்.

"சரி... போ... உள்ளை வேலையைப் பார்..."

காந்திமதி சொல்லி முடிக்குமுன் குணவதி உள்ளே சென்றுவிட்டாள்.

(தொடரும்)

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மார்கழி மீ 22 (6-1-63)

புதிய நம்பிக்கை உதயமாகுமா?

சீன – இந்திய யுத்தம் உலக யுத்தத்துக்கு அடிகோலுமா? வேறு நாடுகளிலும் எல்லைத்தகராறுகள் மூளுமா? இலங்கையில் மீண்டும் 'குட்டி உச்சிமகாநாடுகள்' நடைபெறுமா? சீனா தொடர்ந்து எங்களுக்கு அரிசி அனுப்பிவைக்குமா? இலங்கையின் பொருளாதாரநிலை சரடையுமா? புத்தாண்டு புதிய நம்பிக்கையைத் தருமா? இவ்வாறு பல கேள்விகள் இன்று எழுவது இயல்பே. ஆனால் இவை எல்லாவற்றினுக்கும் அடித்தளமாக, மூலவேராக விளங்கும் ஒரு கேள்வியை எத்தனையோ சந்தடிகளுக்கிடையில் நாம் மறந்து விடுகின்றோம்.

ஏற்றத்தாழ்வுக்கும், மக்களை வாட்டும் வறுமைக்கும், போர் பொறாமைக்கும் மூல காரணம் என்ன? இதுதான் அந்த முக்கியமான கேள்வி. உலகம் இன்று பிளவுபட்டு காட்சியளிக்கின்றது. அணுக் குண்டுக்கும் ஐலவாயுக்குண்டுக்குமிடையே நின்றுஅது தத்தளிக்கின்றது. இதே ஒருகை பார்த்துவிட்டுத்தான் மறுகாரியம் என்கின்றது ஆணவம். ஜீவகாருண்யமும் அஹிம்சையும் தான் மோட்சத்தின் திறவுகோல் என்கின்றது அன்பு. பணமுடைகளைக்குப்புறப் புட்டியே தீருவோம் என்கின்றது மக்கள் சக்தி. இவற்றிடையே சமாதான வாழ்வுக்கு இடமுண்டா? சேமநலத்திட்டங்கள் தலைதூக்கி உலகிலே நல்வாழ்வுக்கு வழிவகுக்குமா?

இப்படி எல்லாம் சிந்தனையில் ஆழ்ந்து கற்பனைக் குதிரையைத்தட்டிவிடுவது எவ்வளவோ இலகுவான காரியம். ஆனால் உலக மேம்பாட்டுக்கும், மக்களின் சேமநலத்துக்கும், நிரந்தர சமாதானத்துக்கும் வழிகாண்பதுதான் இயலாத காரியமாக இருக்கின்றது.

புதிய நம்பிக்கை மக்களிடையே அரும்புவது ஏதோ உண்மைதான். இருந்தும் உலகம் அழிந்து விடுமோ என்ற பீதியும் இருக்கத்தான் செய்கின்றது. மனிதன் பூமிக்குப் பாரமாக இருக்காமல் விரிந்த மனப்பான்மையை வளர்க்கவேண்டுமானால் அவனுடைய எண்ணத்தில் புரட்சிகரமான நன்மாற்றங்கள் ஏற்படவேண்டும். இன்று ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தாமும் ஆக்கவேலைகளுக்கு வழிவகுப்பதாயில்லையே!

ஆசியநாடுகள் அகில உலகுக்குமே புதிய நம்பிக்கையை ஊட்டிச் சமாதானத்துக்கு வழிகாட்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அங்குந்தான் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கின்றது. ஏற்றத்தாழ்வு அகன்று, போட்டியும் பூசலும் நீங்கி, மனித உள்ளங்கள் புனிதமடையும் போது இப்பரந்த உலகமே மக்கள் அனைவருக்கும் புகலிடமாக விளங்கும் அல்லவா?

விமான நிலையத்தில் மந்திரிகளுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"இன மத, பேதமின்றி திருமதி சிறிமா அரசாங்கம் இந்நாட்டு மக்கள் எல்லோருக்கும் சேவை செய்வதையே நோக்கமாகக் 'கொண்டது.'' உணவு வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்னவும் கல்வி மந்திரி அல்ஹாஜ். பதியுதீன் மாமூத்தும் நேற்றுக்காலை பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கியபோது விமானநிலையத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மந்திரிகளிருவரும் மற்றும் திருமதி பதியுதீன் மாமூத், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன நிர்வாகிகள் சபைத் தலைவர் திரு. ரத்னே தேசப்பிரிய சேனநாயக்கா, கூ. மொ. வி. ஸ்தாபன டைரக்டர் திரு. நவரத்னே, இன்ஷூரன்ஸ் கூட்டு ஸ்தாபன டைரக்டர் திரு குடாதித்தவெல ஆகியோரும் காலை 8-40 மணிக்கு விசேஷ விமானத்தில் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கினர். அவர்களை வடபகுதி உதவி விதியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா, காதி எம். எம். சுல்தான், ஹாஜி வி. எம். எம். அபூசாலி, மாநகரசபை அங்கத்தவர் திரு. ஏ. ஜி. ராஜ சூரியர், அரசாங்க அதிபர் ஆகியோர் எதிர்கொண்டழைத்து மேளவாத்தியம் முழங்க விமானநிலையக் கட்டிடத்துக்கு அழைத்து வந்தனர்.

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்விச் சங்கம், வட இலங்கை சங்கீதசபை மற்றும் பல ஸ்தாபனங்களின் சார்பாலும் தனிப்பட்டவர்களும் மந்திரிகளுக்கு மாலைசூட்டி வரவேற்றனர். திருமதி ஆர். ஆர். நவரத்தினம் திருமதி மாமூத்துக்கு மலர்ச்செண்டு வழங்கினர்.

இதன் பின் மனோரஞ்சிதம் சகோதரிகள் பாடிய வரவேற்புப்பத்திரங்களை திரு. கே. வி. சுப்பிரமணியம் மந்திரி இலங்கரத்னவுக்கும், காதி எம். எம். சுல்தானும், திரு. எஸ். யூ. சோமசேகரமும் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத்துக்கும் வழங்கினர்.

திரு. கே. வி. சுப்பிரமணியம் மந்திரிகளை வரவேற்றுப் பேசுகையில் யாழ்ப்பாண மக்கள் மந்திரிகளை மகிழ்ச்சியுடன் வரவேற்பதாகக கூறி, எவ்வித பேதமுமின்றி பொதுமக்களுக்கு மந்திரிகள் சேவை புரிய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

உணவு மந்திரி திரு. இலங்கரத்ன நன்றி தெரிவித்துப் பேசுகையில் எவ்வித பாரபட்சமுமின்றி நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் அவர்கள் எந்தப் பாகத்திலிருந்தாலும் அவர்களுக்குச் சேவை செய்வதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்று கூறினர்.

கல்வி மந்திரி தமிழில் பேசினர்

கல்வி மந்திரி பதியுதீன் மாமூத் நன்றி தெரிவித்துத் தமிழில் பேசுகையில் மழையையும் பொருட்படுத்தாது மக்கள் கூடிநின்று தங்களுக்கு அளித்த வரவேற்பு தங்களுக்கு அதிக மகிழ்ச்சியை அளிப்பதாகத் தெரிவித்தார்.

"தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற வித்தியாசமின்றி நாட்டிலுள்ள மக்கள் எல்லோருக்கும் சிறிமா அரசாங்கம் சேவை செய்துவருகிறது. கல்வித்துறையில் ஜாதி பேதமின்றி மக்களனைவரையும் ஒன்றாகக் கருதி நான் கடமையாற்றிவருகிறேன்" என்று கல்வி மந்திரி கூறினர்.

"மக்களின் தேவைகளை நேரில் அறிந்துகொள்ளவும், நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளவுமே இங்கு வந்திருக்கிறோம். உங்கள் பிரதிநிதிகள் என்னை எனது காரியாலயத்தில் சந்தித்து தேவைகளை முடித்துக்கொள்வதுண்டு. இங்கும் அவர்களைச் சந்திக்க நான் விரும்புகிறேன்" என்று பதியுதீன் மாமூத் கூறினர்.

பதவி வித்தியாதிபதி எஸ். யூ. சோமசேகரம் பேசுகையில் பண்டைக்காலத்தில் அரசர்களும் மந்திரிகளும் ஊர்கள்தோறும் சென்று மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவதைப் போன்றே இப்பொழுது மந்திரிகளிருவரும் இங்கு வந்துள்ளனர் என்றார்.

"ஐக்கியலங்கா எமது இலட்சியம்
அரசாங்கத்துக்கு ஆதரவு வேண்டும்"
பருத்தித்துறையில் உணவு மந்திரி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"ஐக்கிய லங்கா, சுதந்திர லங்கா, தன்னிறைவுபெற்ற லங்கா ஆகிய மூன்று இலட்சியங்களையும், அடைவதை நோக்கமாகக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திற்கு மக்கள் எல்லோரும் அவர்கள் எந்த இனத்தை, மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஆதரவு அளிக்கவேண்டும்" என்று உணவு, வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன நேற்று முற்பகல் பருத்தித்துறையில் ஒரு வைபவத்தில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

பருத்தித்துறை நகரமத்தியில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் கிளையொன்றை உணவு, வர்த்தக மந்திரி திரு. இலங்கரத்ன குத்துவிளக்கேற்றியும், நீல நாடாவை வெட்டியும் திறந்து வைத்தார். மந்திரியைப் பருத்தித்துறைப் பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். நடராசாவும், யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவும் விமான நிலையத்திலிருந்து பருத்தித்துறைக்கு காரில் அழைத்து வந்தனர். பருத்தித்துறைத் துறைமுகத்திற்குச் சமீபத்தில் மந்திரி வந்திறங்கியதும் பட்டினசபைத் தலைவரும் மற்றும் பிரமுகர்களும் மலர்மாலை சூட்டி மேளவாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். வீதியின் இருமருங்கிலும் மக்கள் மழைக்காக ஒதுங்கிநின்று மந்திரியை வரவேற்றனர். சில இடங்களில் மந்திரிக்கும் திரு. தேசப்பிரிய சேனநாயக்காவுக்கும் மலர்மாலைசூட்டி வரவேற்றனர்.

எல்லோருக்கும் சேவை செய்யும்

கூ. மொ. வி. ஸ்தாபனக் கிளையைத் திறந்துவைத்து மந்திரி திரு. இலங்கரத்ன பேசுகையில், இந்தஸ்தாபனத்தை விரும்புபவர்களுக்கும் விரும்பாதவர்களுக்கும் இது சேவைசெய்யுமென்றும் இந்த ஸ்தாபனத்தைப் பொதுமக்கள் ஆதரித்தால் அதனால் பொதுமக்கள்தான் நன்மையடைவார்களென்றும் கூறினர்.

இதன்பின் ஸ்தாபனத்திலிருந்த விற்பனைப் பொருள்களை மந்திரி பார்வையிட்டார்.

பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா பேசுகையில் கூட்டுறவு மொத்த விற்கனவு ஸ்தாபனத்தின் கிளையொன்றை பருத்தித்துறையில் திறக்கவேண்டுமென்று பட்டினசபை ஒன்றரை வருடங்களுக்கு முன் தீர்மானத்தின் மூலம் கேட்டுக்கொண்டதென்றும் அது நிறைவேறுவதற்கு மந்திரியும் மற்றவர்களும் செய்த உதவிக்கு நன்றி தெரிவிப்பதாயும் கூறினர். மக்களின் நன்மைக்காகவே இந்த ஸ்தாபனம் திறக்கப்படுகிறதென்றும் இதற்கும அரசியலுக்கும் சம்பந்தமில்லையென்றும் கூறினர்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன டைரக்டர்கள் சபைத் தலைவர் திரு. ரத்னே தேசப்பிரிய சேனநாயக்கா பேசுகையில் ஜாதிமத இன பேதமின்றி பொதுமக்களுக்குச் சேவை செய்வது தான் இந்த ஸ்தாபனத்தின் நோக்கமென்றார்.

"இந்த நாட்டு மக்களின் உழைப்பும் இந்தநாட்டு மக்களின் பணமும் இந்தநாட்டிலேயே இந்த நாட்டு மக்களுக்கே பயன்படவேண்டுமென்பதுதான் எமது கொள்கை. இதனால் தான் கொழும்பு புறக்கோட்டையை ஒரு 'சென்னை' யாக மாற்றிக் கொண்ட அந்நிய இந்தியர்கள் இங்குள்ள பணத்தைச் சுரண்டிச் சென்றனர். இவற்றைத் தடுப்பதற்காக எமது உணவு, வர்த்தக மந்திரி பல கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் பல நடவடிக்கைகளை எடுத்தார். கருவாட்டு வியாபாரத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டதால் பொதுமக்களைச் சுரண்டிய 31 இந்திய முதலாளிமார் இந்தியாவுக்குச் செல்ல நேரிட்டது. கருவாட்டு வியாபாரத்தினால் வெளிநாடு சென்று கொண்டிருந்த 80 லட்சம் ரூபாய் மிச்சப்படுத்தப்பட்டது" என்று திரு. சேனநாயக்கா கூறினர்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் சிறு வியாபாரிகளுக்கும் நன்மையே செய்யுமென்றும் எவருடனும் போட்டி போடும் எண்ணம் இல்லையென்றும் பொதுமக்களுக்குச் சேவை செய்வதே இந்த ஸ்தாபனத்தின் நோக்கமென்றும் கூறினர்.

சமஷ்டி எம். பி. க்கள் பற்றி மந்திரி

உணவு மந்திரி திரு இலங்கரத்ன பேசுகையில் தமக்கு எதிராகத் தமிழரசுக்கட்சி எம்.பி.க்கள் நடத்திய கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் பற்றிக் குறிப்பிட்டு, "சமஷ்டிக்கட்சி எம்.பி.க்கள் மழையில் நனைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இங்கு வந்து தங்கி நிற்பதற்கு இந்தக் கட்டிடம் போதாது. கொழும்பில் அவர்கள் தங்களுடைய தொகுதி வேலைகள் சம்பந்தமாகவும் தங்கள் சொந்த அலுவலாகவும் என்னை எனது அலுவலகத்தில் வந்து சந்திப்பார்கள். இப்பொழுது அவர்கள் இங்கு என்னைச் சந்திக்க வருவதற்கு முன்னால் நிற்கும் பொதுமக்கள் தடையாக இருக்கிறார்கள் என்று கூறினர்.

சந்திர சூரியர் போல சேவை

மந்திரி இலங்கரத்ன மேலும் குறிப்பிட்டதாவது:-

சந்திர சூரியர்போல எமது அரசாங்கம் எந்தவித பேதமுமின்றி சகல மக்களுக்கும் சேவைசெய்கின்றது. அரசாங்கததை விரும்புபவர்களுக்கும் விரும்பாதவர்களுக்கும் அரசாங்கம் உதவிசெய்கிறது.

உங்கள் மொழியில் பேச முடியாமைக்கு வருந்துகிறேன். ஆனாலும் ஒரேயொரு மொழியினால் பேசுவேன் அதுதான் இதயமொழி.

திரு. இலங்கரத்ன மேலும் பேசுகையில் அரசியல் வாதிகள் சிலருக்கு அரசியல் ஓய்வு நேர வேலையாக இருக்கலாமென்றும், தங்களைப்பொறுத்தவரையில் பொருளாதார அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கு எப்படிப்போராடுவதென்பதுதான் வேலையென்றும் கூறினர்.

பொருளாதார முன்னேற்றத்துக்காக வங்கிகளில் ஒரு பகுதி தேசியமயமாக்கப்பட்டதென்றும், மற்றும்பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென்றும் கூறினர்.

"இந்த அரசாங்கத்தின் முக்கிய இலட்சியங்கள் மூன்று. 1. ஐக்கியலங்கா 2. சுதந்திரலங்கா, 3. தன்னிறைவுலங்கா. இந்த மூன்று இலட்சியங்களையும் அடைவதுதான் அரசாங்கத்தின் நோக்கம். இந்த மூன்று இலட்சியங்களையும் ஏகாதிபத்திய வாதிகள் பிரபுத்துவவாதிகள் முதலாளித்துவ வாதிகள் ஆகிய மூவரும் எதிர்க்கின்றனர். முதலாளித்துவவாதிகள் பலவேறு வேஷங்களில் உங்கள்முன தோன்றுவர்" என்றும் மந்திரி இலங்கரத்ன கூறினர்.

மக்கள் வங்கி திறக்கப்படும்

மந்திரி மேலும் பேசுகையில் தாம் விரைவில் இப்பகுதிக்கு மீண்டும் விஜயம்செய்யவிருப்பதாகவும் யாழ்ப்பாணப் பகுதியில் விரைவில் மக்கள் வங்கிக் கிளைகள் திறக்கப்படவிருப்பதாகவும், மக்கள் வங்கியோ, கூட்டுறவுமொத்த விற்பனவு ஸ்தாபனமோ கூட்டுறவு இயக்கத்துக்கு மாறானவையல்லவென்றும் கூறினர்.

உலகமேடை

டி. எம். எம்.

1963-ம் ஆண்டு

1963-ம் ஆண்டு, சர்வதேச அரங்கில், சமாதானக் குரல் பலமாகக் கேட்கிறது. சென்ற ஆண்டு இறுதியில் நடைபெற்ற பல அரசியல் விளைவுகள் இதற்குப்பின் பலமாக அமைந்திருக்கின்றன. சண்டைக்கான கெடுபிடிகள் இறுதிக்கட்டத்தை அடைந்தபின், சமாதானத்தின் அவசியம்பற்றி இப்போது வற்புறுத்தப்படுகிறது. லாவோஸிலும், கியூபாவிலும், ஏன் பெர்லினிலும்கூட நடைமுறை சாத்தியமான வகையிலும், சமாதான ஆர்வத்தின் தூண்டுதலினாலும் ரஷ்யா மெச்சத்தக்க வகையில் செயலாற்றியிருக்கிறது. திரு. குருஷ்சேவின் ராஜதந்திர முயற்சிக்கு இது வெற்றியாகும்.

சமீபத்தில் திரு. குருஷ்சேவும், ஜனாதிபதி கென்னடியும் பரிமாறிக்கொண்ட புத்தாண்டுச் செய்திகள் மனோதத்துவரீதியில் நம்பிக்கையை அளித்திருக்கின்றன.

அணுசக்தி யுத்தத்தை உலகின் இரு பெரும் வல்லரசுகளும் விரும்பவில்லை என்பது, முன்னைவிட இப்போது நன்கு தெளிவாகியிருக்கிறது. பூகோளத்தின் இதரபகுதிகளில் யுத்தக் கெடுபிடிகளும், சிறிய யுத்தங்களும் இடம்பெற்ற போதிலும்- இன்னும் இடம்பெற்று வருகின்ற போதிலும்- ஆக்கவும், அழிக்கவும் சக்தி பெற்ற இரு தேசங்கள், நட்பின் அடிப்படையில் மேலும் மேலும் நெருங்கி வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். உலகசமாதானத்துக்கு கிழக்கு மேற்கு வல்லரசுகள் ஒருமித்துச் செயல்படுவதைத் தவிர, வேறு சிறந்த சக்திகள் எதுவும் கிடையாது.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நடைமுறையில் சமாதானம் நிலவிவருகிறது. ஆனால் உலகின் பிற்போக்கு நாடுகளில் யுத்தக் கெடுபிடிகளும், அமைதியின்மையும் தொடர்ந்து நீடித்து வருகின்றன. ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் அரசியல் நிலைமை இன்னும் ஸ்திரமடையவில்லை என்பதையே இவை காட்டுகின்றன. காங்கோவிலும் இந்தோசீனாவிலும், மக்மோகன் எல்லைக் கோட்டிற்குள்ளும் நடைபெற்றுவரும் சம்பவங்கள் சமாதான நோக்கத்துக்கு இடையூறு விளைவித்து வருகின்றன. இந்த வகையில் சீன-இந்தியத் தகராறே பெரியதாகும்.

★

சீன-இந்திய யுத்தம்

சீன இந்திய யுத்தம் தற்காலிகமாக ஓய்ந்திருந்த போதிலும், எந்த நேரமும் மீண்டும் இது வெடிக்கும் அறிகுறிகள் தெளிவாகி வருகின்றன.

சீனா ஒருதலைப்பட்சமாக யுத்தத்தை நிறுத்தியது, அதன் சமாதான நோக்கத்தை வெளிக்காட்டவில்லை. ராணுவரீதியில் தொடர்ந்து யுத்தத்தை நடத்துவதற்கு அது சக்தியற்ற நிலையில் இருந்ததே இதற்குக் காரணம்.

ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து தன் துருப்புக்களுக்கு சப்ளைகளைக் கொண்டுவர சீனாவுக்கு வசதியில்லை என்பதும், அதன் உள்நாட்டு நிலைமையுமே இதற்குக் காரணம்.

தற்காலிகமாக யுத்தத்தை நிறுத்தியபோதிலும், சீனா போர்புரியத் தயாராகி வருகிறது என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. திபேத்தில், அது பெரும் யுத்த முஸ்தீபுகளைச் செய்துவருகிறது. பாரசூட் துருப்புக்கள் பெருமளவில் பயிற்சிபெற்று வருகின்றன. ஜெட்விமானத் தளங்கள் புதிதாக நிறுவப்பட்டிருக்கின்றன. பெருஞ்சாலைகளும், ஏராளமான சிறிய ரஸ்தாக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த ரஸ்தாக்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு வருகின்றன. ராணுவ நடவடிக்கைகளுக்கேற்ற சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

சீனாவிலிருந்து சப்ளைகளைக் கொண்டுவருவது கஷ்டமானதால், அருகிலுள்ள திபேத்தில் இவைகள் குவிக்கப்பட்டுவருகின்றன. இவையெல்லாம் வருங்கால நீண்டநெருக்கடிக்கு அறிகுறிகளாகும்.

இந்த நீண்ட நெருக்கடி திடஉறுதியோடும், தளராத நெஞ்சத்தோடும் சமாளிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. சீனாவின் சமாதான நோக்கம் போலித்தனமானது - பாசாங்கானது - என்பதை இந்தியத் தலைவர்கள் அறிந்துகொண்டனர். எனவேதான் இந்த இடைக்கால சந்தர்ப்பத்தைச் சகல அம்சங்களிலும் பலப்படுத்த இந்தியா பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. பனிக்காலத்திற்குப்பின்போராட்டம் ஆரம்பமானால், அதைச்சமாளிக்கும் வகையில் இந்தியா தன் இராணுவபலத்தைப் பெருக்கியிருக்கிறது. இந்திய வீரர்களின் மனோஉறுதி மெச்சத்தக்க வகையில் இருப்பதாக, போர்முனைக்குச் சென்று திரும்பிய வெளிநாட்டு நிருபர்கள் கூறியிருக்கிறார்கள். சீனா, ராணுவரீதியில் முறியடிக்கப்பட்டாலன்றி, அதன் பிரதேச விஸ்தரிப்புக் கொள்கை நிற்காது என்பது தெரிந்த விஷயம். சீனாவின் சவாலை சகலவகைகளிலும் பாரதம் ஏற்றுக்கொண்டிருப்பதால், வடக்கில் கடும் போராட்டம் இனித்தான் இருக்கிறது என்பதை உணரலாம்.

★

கடாங்கா

ஐ. நா. துருப்புக்கள் கடாங்காவில் இறுதி நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றன. ஷோம்பேயின் தலைநகர் எலிஸபெத்வில்லி, முக்கிய சுரங்க நகரான கிபுஷி, கடைசி எதிர்ப்பிலக்கான ஜடோட்வில்லி ஆகிய இடங்களை ஐ. நா. கைப்பற்றிவிட்டது.

ஷோம்பே கைதுசெய்யப்படலாம், அல்லது தென்ரொடீஷியாவுக்குத் தப்பிச் செல்லலாம் என இரண்டு வாரங்களுக்கு முன் இப்பத்தியில் எழுதியிருந்தோம். அதற்கேற்ப, அவர் தென்ரொடீஷியத் தலைநகரான ஸாலிஸ்பரிக்கு ஓடிவிட்டார். ஆனால் இப்போது மீண்டும் கடாங்காவில் பிரவேசிக்க அவர் முயற்சிசெய்கிறார். இதற்குப் பூர்வாங்கமாகத் தமக்கு நடமாட்ட சுதந்திரம் வேண்டுமென்று அவர் விடுத்த கோரிக்கையை ஐ. நா. நிராகரித்துவிட்டது. காங்கோவுடன் கடாங்காவை இணைக்க முயன்று தனது ராஜ்யத்தை அழிக்க விடுவதாக ஷோம்பே முன்பு எச்சரித்தார். அவருக்கு மீண்டும் நிபந்தனையற்ற பிரவேச அனுமதி அளித்தால் இந்த வேலையைச் செய்யஅவர் முயற்சிப்பார் என்பதில் சந்தேகமில்லை. அவருடைய தலைவிதி இப்போது ஐ. நா. வின் கையில் இருக்கிறது. அவர் கைது செய்யப்படும் வாய்ப்பு இன்னும் இருந்தே வருகிறது. ஒருவேளை, இதற்குள் கடாங்கா, மத்திய காங்கோ அரசாங்கத்துடன் இணைக்கப்பட்டு, அவ்வாறு நடைபெற்றாலும் அதிசயமல்ல.

தென்ரொடீஷியப் பிரதமர் சர். ராய் வெலன்ஸ்கி, ஷோம்பேயின் உற்ற தோழர். பிரிட்டன், பெல்ஜியம் போன்ற நாடுகளில் செல்வாக்கான சில வட்டாரங்கள் ஷோம்பேக்கு உதவி செய்து வருகின்றன. இந்த வட்டாரங்களுக்கு கடாங்காவில் பல நலன்கள் இருக்கின்றன. எனவேதான் பலாத்காரத்தின் மூலம் கடாங்கா பிரச்சினையைத் தீர்க்கக் கூடாது என பிரிட்டன் கூறி வருகிறது ஆயினும் ஐ. நா, ஷோம்பேயின் நிபந்தனைகளையோ, பிரிட்டனின் யோசனையையோ ஏற்கத் தயாராய் இல்லை. பிரச்சினையை வேறு வழியில் தீர்க்க முடியவில்லை என்பதால்தான், ஐ. நா. இந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறது.

(இதை எழுதும் போது, திரு. ஷோம்பே, கடாங்காவில் ஓரிடத்தில் தனது தலைநகரை ஸ்தாபித்துக் கொண்டிருப்பதாயும், தாம் சமிக்ஞை காட்டும் போது கொரில்லா யுத்தத்துக்கு கடாங்கா மக்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும் எனக் கேட்டிருப்பதாயும் செய்திகள் வந்தன.)

பக்கத்திலுள்ள ஆபிரிக்க நாடுகளே கடாங்காவின் தனித்தன்மையை விரும்பவில்லை. தமக்கு உதவி அளிக்குமாறு நயாஸாலாந்து தலைவர் டாக்டர் ஹேஸ்டிங்ஸ்பண்டாவுக்கு ஷோம்பே அனுப்பிய வேண்டுகோளை, அவர் நிராகரித்திருக்கிறார். அதுமட்டுமின்றி தவறான ஆலோசனையுடன் செயலாற்ற வேண்டாம் என்றும், சொந்த மக்களைக் காட்டிக் கொடுக்க வேண்டாம் என்றும் டாக்டர் பண்டா புத்திமதி கூறியிருக்கிறார். காங்கோவுடன் கடாங்கா இணைவதின் அவசியத்தையும் அவர் வற்புறுத்தியிருக்கிறார்.

ஆபிரிக்காவின் இதர பல கறுப்புநாடுகளும்கூட, ஷோம்பேயின் போக்கை ஆதரிக்கவில்லை.

இந்த நிலையில் ஷோம்பே தனித்து நிற்கமுடியாது என்றும் அநேகமாகக்கடாங்காவில் ஐ. நா. தனது கடமையை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டதென்றும் கூறலாம்.

★

"இந்திக்கு அழிவில்லை"

தமிழ்மொழிக்கு அழிவில்லை என்கிறோம். கன்னித் தமிழ் என்கிறோம். தமிழ், தொன்மை வாய்ந்த மொழி என்றும், வரலாற்றுக்காலத்துக்கு அப்பாற்பட்டதென்றும் படித்திருக்கிறோம். முருகக்கடவுள், அகஸ்தியருக்குத் தமிழில் உபதேசம் செய்ததாகவும் ஐதீகம். எது வாயினும், லத்தீன், சமஸ்கிருதம், ஆகிய மொழிகளைப் போலவே, தமிழும் புராதன மொழிகளில் ஒன்று என்பதிலும், சமஸ்கிருதத்துடன் தமிழைக் கலந்து நாம் உபயோகித்தபோதிலும், பிறமொழிக் கலப்பின்றி தனித்தியங்கும் ஆற்றல் பெற்றது தமிழ்மொழி என்பதிலும் எவருக்கும் சந்தேகமில்லை.

தமிழ் மொழியின் செல்வாக்கு பிற மொழிகளில் இடம் பெற்றிருக்கிறது. "கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் உன்னு திரத்துதித்தெழுந்தே ஒன்று பல ஆயினும், ஆரியம் போல், உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையா உன், சீரிள மைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என மனோன்மணீயத்தில் வருகிறது.

ஆனால் இந்திமொழி எப்படி உண்டாக்கப்பட்டது? இந்தி தனிமொழி அல்ல. சமஸ்கிருதத்திலிருந்து கடன்வாங்கப்பட்டது. ஆயினும் இந்திமொழிக்கும் அழிவில்லை என்று கூறும் சிலர், [illegible]க்கண்ட காரணங்களைக் [illegible]ப்பிடுகிறார்கள். இது எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதை ஆராய்ச்சியாளர்கள் அல்லது மொழி விற்பன்னர்கள்தான் விளக்க வேண்டும். இந்தி என்ற பெயரால் ஒருநாடு, ஒருமொழி, ஒருமலை, ஒருகடல், ஒருநதி, ஒரு மதம் ஆகியன இருப்பதால், இந்திக்கு அழிவில்லை என்கிறார்கள்! இந்தியா ஒரு நாடு. இந்தி ஒரு மொழி. இந்துகுஷ் ஒருமலை. இந்து சமுத்திரம் ஒரு கடல். இந்து அல்லது சிந்து, ஒரு நதி. இந்து என்ற மதம். ஆகியவையே அவை. இந்த விசித்திரப் பெயர்ப் பொருத்தத்திற்கும், இந்திமொழியின் எதிர்காலத்திற்கும் சம்பந்தம் உண்டா என்பது தெரியவில்லை.

ஆயினும் இந்தியாவின் 44 கோடி மக்களில் 25 கோடிப் பேருக்குமேல் இந்தி பேசுபவர்கள். எனவேதான், இந்தியை தேசிய மொழியாக்க வேண்டும் என, அகில இந்திய காங்கிரஸ் வெகு காலத்திற்கு முன்பே தீர்மானித்தது. சுதந்திர அரசாங்கமும் இதையே கொள்கையாகக் கொண்டிருக்கிறது. ஆனால் பல ராஜ்யங்கள் தற்போது இது அனுபவ சாத்தியமற்றது எனக் கூறுகின்றன. இன்றைய விஞ்ஞான உலகில் ஆங்கிலத்தின் ஸ்தானத்துக்கு இந்தி போட்டியிட முடியாது என்றும், விஞ்ஞான முன்னேற்றம் இதனால் பாதிக்கப்படும் எனவும் அவை கூறுகின்றன.

இந்திய அரசாங்கமும் இதை உணர்ந்து தான், தாங்கள் விரும்பிய காலம்வரை ஆங்கிலத்தை உத்தியோக மொழியாக வைத்துக்கொள்ள இந்தி பேசாதாருக்கு அனுமதியளித்திருக்கிறது. இம்மாதப் பார்லிமெண்ட் கூட்டத்தில், 1965-ம் ஆண்டுக்குப் பின்பும், ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வகை செய்யும் முறையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ஆங்கிலம் உலக மொழியாய் இருக்கிறதென்பதையும், அது உலகத்தின் ஜன்னலாக விளங்குகிறதென்பதையும், தற்காலத்துக்கேற்ப பல அறிவு

(12ம் பக்கம் பார்க்க)

பூஜ்யம் தபால்

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்கள்,
C/o. சௌ-என்-லாய்,
பிரதம மந்திரீ,
பீக்கிங்-சீனம்.

அம்மணி!

சீனத் தலைநகரிலே தங்களுக்கு அமோகமான வரவேற்புக் கிடைத்ததைப் பற்றிய செய்திகளைப் படித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

ஆனால் முன்னர் பிரதமர் நேருஜிக்கு இதைவிடக் குதூகல வரவேற்பை அளித்த பீக்கிங் பிரபுக்கள் அவரை, "இம்பீரியலிஸ்ட் ஸ்டூஜ்" (ஏகாதிபத்திய அடிவருடி) என்று தூற்றி, பிரசாரம் செய்வது நினைவுக்கு வந்ததும் என் மகிழ்ச்சியெல்லாம் "சப்"பென்று இறங்கிவிட்டது.

தமது ஆயுளிலே பெரும் பகுதி ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்து பன்முறை சிறைப்பட்டு, அரிய தியாகங்கள் செய்த ஒரு தவப்புதல்வரை, "ஏகாதிபத்திய அடிவருடி" என்று சீனர்கள் பிரசாரம் செய்வது சமாதானத்துக்கோ இருதேச நட்புக்கோ உகந்ததாகுமா? சமாதான நோக்கத்துடன் சென்றுள்ள தாங்கள், இதுபற்றி சீனத்துக்கு நல்ல புத்திகூறி, இனியாவது அப்படிப்பட்ட பிரசாரம் செய்ய வேண்டாமென்று நல்ல புத்தி கூறுவீர்களா?

பாருங்கள், தாங்கள்கூட, இலங்கை சென்ட் சபையில் நியமனம் பெற்று, பிரதமராவீர்கள். ஆனால் நேருஜியோ, தேர்தல் மூலம் இந்திய பொது மக்களின் அமோகமான ஆதரவைப் பெற்று பிரதம மந்திரி ஆகியுள்ளார். மக்களின் அமோகமான அபிமானத்தைப் பெற்றிருக்கிறார். அப்படிப்பட்ட ஒருவர்மீது, பீக்கிங்கிலேயுள்ள சர்வாதிகாரிகள், ஒயாமல் வசைபாடியும், அவரை "சத்ரு", "விரோதி" என்றும் பிரசாரம் செய்வது முறையா? இதைப் பற்றியும் அவர்களை மறக்காமல் கேளுங்கள்.

ஒரு முக்கிய விஷயம். நேருஜியைப் பிற்போக்கு வாதியென்று பீக்கிங் கூறுகையில், தங்களுக்கும் அந்த அர்ச்சனை சேரும் தானே! இலங்கையுள்ளிட்டு, தென்-கிழக்கு ஆசியா அனைத்தையும் முற்போக்கு (கம்யூனிஸ்ட்) நாடாக ஆக்கிவிடவேண்டுமென்று பீக்கிங் திட்டம் போட்டுள்ளதாகக் கேள்வி. உண்மைதானா? இது பற்றியும் மறக்காமல் கேட்டு வாருங்கள். வேண்டாம், வேண்டாம். தங்களுடன் வரும் திரு. பீலிக்ஸ் அதையெல்லாம் பார்த்துக்கொள்வார்.

இப்படிக்கு,
பூஜ்யம்.

குறிப்பு:

பீக்கிங் விருந்தில் தாங்கள் பேசுகையில் மேற்கத்திய நாடுகளுக்குச் சரியான சாட்டை கொடுத்தீர்கள். பலே பேஷ்! எல்லாம் பீலிக்ஸ் தான் எழுதிக்கொடுத்திருப்பாரென்று இங்கு சிலர் கூறுகின்றனர். இது எப்படியாயினும், சீனத்துக்கும் இந்தியாவுக்கும் சமாதானம் செய்யும் முயற்சியில், மேற்கு நாடுகளைத் தாங்கள் வீணாக விரோதித்துக்கொள்வானேன்? குளிக்கப் போய் சேறு அப்பிக்கொண்ட கதையாகி விடுமோ என்று இங்குள்ள தங்கள் கட்சியில் சிலரே அஞ்சுகின்றனர்.

ஆசியக் குளத்தில் சீனதான் ஒரு பெரிய முதலை என்றும், சிறிய நாடுகளை விழுங்க அது திட்டம்போட்டுள்ளதாயும் நேருஜி எச்சரித்ததைத் தாங்கள் கேள்விப்பட்டீர்களோ?

எப்படியும் தங்கள் தூது வெற்றி பெறவேண்டுமென்றும், வெற்றி பெறமுடியாவிடினும் இலங்கைக்கு எவ்வித புதிய தீங்கும் ஏற்பட்டுவிடக்கூடாதென்றுமே இதையெல்லாம் எழுதலானேன். வேறு வித்தியாசமாக நினைக்கவேண்டாம்.

"பூ"

கேட்டிருப்பாய் காற்றே

அத்தியாயம் 1

குறுநாவல்

செ. யோகநாதன்

பொழுது புலரும் வேளை.

யன்னற்கதவுகளின் நாதாங்கிகளை மேலே தூக்கி, கதவுகளைத் திறக்கின்றாள் குணவதி. இருளோடு குழைந்து மங்கித் தெரியும் ஒளியில் வளைவளுப்பான மஞ்சள் மூங்கிலும், பச்சிலைகளும் புகை படிந்தது போலத் தெரிகின்றன. அவதானிக்கும் நிலையினில் அவள் அதிக நேரத்தைச் செலவிடாத பொழுதும், ஒரு நிமிஷம் வெளியே தெறிக்கும் பார்வை, புதுமையொன்றைக் காண்பது போல தினமும் யன்னற் கம்பிகளுக்கூடாக ஊடுருவிநிற்கும்.

வீட்டு விருந்தையின் முகப்பிலிருந்த மணிக்கூண்டு ஆறு முறை 'டங்'காரம் செய்து ஓய்கின்றது. குணவதி நாக்கைக் கடித்துக் கொள்ளுகின்றாள். அடுப்பைப் பற்றவைத்து அதில் கேத்தலை வைக்க வேண்டிய நேரம் அது. குணவதியின் கரங்கள் துரிதமாகச் செயல்படுகின்றன. மேலே மேலே நாக்குகளை நீட்டிக்கொண்டு எழும் நெருப்பின் செவ்வொளியில் அவளது கண்கள் மின்னுகின்றன. தீயின் இலேசான வெம்மையில் உடல்கதகதப்பையடைய, அவள் விறகுகளை அடுப்பின் உள்ளே தள்ளுகின்றாள். முகம் அடுப்பை நோக்கி கவிந்துநிற்க, அவளின் மனதுக்குள் ஈஸ்வரி தொட்டில் சீலையாடுகின்றாள்.

நடுமாடத்திலிருந்து எழும் அழுகைக்குரல், சிணுக்கம் கலந்துகேட்கின்றது. நித்திரை மயக்கத்தில் ஏதேதோ தடுமாற்றச் சொற்களை சிணுங்கிக் கொண்டு அழுவது ஈஸ்வரி தான். இரண்டு உள்ளங்கைகளையும் இடுப்புச் சட்டையில், உராஞ்சித் துடைத்துக் கொண்டு, குணவதி நடுமாடத்தை நோக்கி விரைகின்றாள்.

'ஈஸ்வரிக்கு இன்று பால் புகட்டுவதற்கு நான் தாமதித்து விட்டேன்; இன்று, இருவருக்கும் நல்ல சண்டைதான். இனி ஈஸ்வரிக்கு முகங்கழுவி, பவுடர் போட்டு பால் புகட்டுவதற்குள் அது பசியைப் பொறுத்துக்கொள்ளுமோ?'

கட்டிலில் கிடந்து காலை உழட்டிக்கொண்டிருக்கும் ஈஸ்வரியை குணவதி வாஞ்சையோடு வாரி எடுக்கின்றாள். ஈஸ்வரிக்கு நித்திரை மயக்கம் தெளியவில்லை. அழுகை அணைப்பின் வருடலில் ஓய்ந்து மடிய, குணவதியின் தோள் மூடோடு அவள் ஒட்டிக் கொள்ளுகின்றாள். ஈஸ்வரியின் பிஞ்சுவிரல்கள குணவதியின் முதுகுப்புறச் சட்டையின் கிழிந்த பொத்தலுள் நுழைந்து விளையாடுகின்றன. குணவதி கூச்சத்துடன் முதுகை நெளித்துக் கொண்டு, அவளது விரல்களை, சட்டைப் பிற்றலுள் நுழைக்காதவாறு தடுக்கின்றாள்.

"வேணும் பேபி ... குணவதி விட்டை ஆக ரெண்டு சண்டை தானிருக்கு ... அதைக் கிழியாதேங்கோ ... குணவதி பாவமெல்லோ ..."

தன்னைத்தானே, தனக்கு முன்னிறுத்தி குணவதி சொல்லும் சொற்களில் கனிவும், நெஞ்சலும் கலந்து ஒலிக்கின்றன. அவளின் மெலிந்த குரலில் மனம் இளகுண்டோ என்னவோ, ஈஸ்வரியின் விரல்களும் அவளது சட்டைப் பிற்றலுள் இருந்து வெளிவந்து அவளின் முதுகோடு செயலற்றுத் துவள்கின்றன.

குணவதி அந்த வீட்டு வேலைக்காரி.

பன்னிரண்டு வயதான அவள் அந்த வீட்டுக்கு வந்து இன்றோடு மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. கட்டைக் குட்டையான தலைமயிருடன் அங்கு வந்த அவள், இப்பொழுது கருத்து அடர்ந்து வளர்ந்திருக்கும் தலைமயிரை, இரட்டைப் பின்னல் கட்டிவிடும் கால எல்லையை அந்த வீட்டுக்குள் கழித்துவிட்டாள். மூன்று வருஷங்களுக்கு முன்பு, மாலை மங்கிக்கொண்டுவரும் வேளையில் அவளது மாமன் பெரியையா அவளை அந்த வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்தான். எலமலையின் தோட்டக்காம்பறையிலிருந்து புறப்பட்ட பொழுதே அனுங்கத்தொடங்கிவிட்ட மனம், அந்த வீட்டுவாசற்படியில் காலை வைத்ததுதான் பரமதம் உலக்கையால் குற்றுண்டு அதிரும் உரலாகிவிட்டது. 'டக் டக்' கென்று அடித்துக் கொள்ளும் நெஞ்சத்தோடு, கண்ணியில்சிக்கியமான் குட்டி போல மிரண்டுகொண்டு நின்ற குணவதியை, முதலில் அந்த வீட்டிலிருந்து எதிர்கொண்டது காந்திமதிதான். பெருமனுக, நீலச் சேலையுடுத்த இடுப்பிலே ஒரு குழந்தையும் வைத்துக்கொண்டு நின்ற காந்திமதி, குணவதியை ஒரு கௌதுகவைப் பார்ப்பதுபோலப் பார்த்தாள். காந்திமதியின் கையிலிருந்து குழந்தையை — ஈஸ்வரியைக் கண்டதும் குணவதிக்கு ஏதோ ஒரு உந்தல், மனதினுள் தோன்றி அந்தக் குழந்தைதான் இறுகக் கட்டிக்கொண்டு அதன் பட்டுக் கன்னங்களில் இரத்தம் கன்றத் தடவிடவேண்டுமென்ற உணர்வினைப் பிறப்பித்தது.

காந்திமதி மனதுக்குள் தன்னுடைய கணவன் காலையில் சொன்னதை நினைத்துக் கொண்டு தனக்குத்தானே தலையாட்டிக் கொண்டாள் காலையில் வெளியே புறப்படும் பொழுது காந்திமதியின் கணவன் இராமமூர்த்தி, தான் ஒரு வேலைக்காரப் பிள்ளைக்கு ஒழுங்கு பண்ணியதாகவும், அதை இன்று அதன் மாமன் வீட்டிற்கு அழைத்துவருவான் என்றும் கூறிவிட்டுச் சென்றிருந்தார்.

பெரியய்யா, சால்வையை இடுப்பில் வரிந்துகட்டிக் கொண்டு காந்திமதியை நோக்கித் தலைகுனிந்து வணங்கினான்:

"அம்மா ... சலாமுங்க ... இவநம்ம மருமவ. பேரு குணவதீங்க. நல்லா வேலை செஞ்சு, நறுக்கா நடப்பாங்க ..."

காந்திமதி மீண்டும் குணவதியை ஏற இறங்கப் பார்த்தாள். நோஞ்சலான உடம்பும் 'எலி'வாற் கூந்தலும், மிரண்ட கண்களுமுடைய குணவதி அவள் மனதிற்குள் ஒருகணம் நகைப்பை மூட்டி மறைந்தாள். குணவதியின் கண்கள் அங்கு மிங்கும் சுழன்று அலைந்தன. இருளும் நாற்றமும் சூழ்ந்த தோட்டத்துக் காம்பறையிலே வாழ்ந்தவள் குணவதி. சின்னஞ் சிறிய அந்தக் காம்பறையின் வெம்மையுள் புழுங்கிக்கிடந்த அவளுக்கு அந்த வீடு மிகப் பெரியதொரு அற்புதப்பொருளாகத் தெரிந்தது. வீட்டின் முகப்பில் இருந்து அடிக்கடி ஒலித்துக் சொண்டிருக்கும் பெரிய மணிக்கூண்டு. அதன் பெரியவட்டத்தின் கீழே பூனையொன்று கண்ணைக் காட்டி அசைப்பது போன்ற படம் ... விளங்காத பாஷையில் பாடிக் கொண்டிருக்கும் வானொலிப் பெட்டி ... நிறநிறமாய் மெத்தை வைத்துத்தைத்த சாய்வான கதிரைகள் ... வழுவழுத்த சிவப்புத்தரை ... குணவதிக்கு எல்லாமே புதுமையாகத் தோன்றின; புதிய உலகத்தில் நிற்பதுபோல அவளின் சின்ன நெஞ்சம் உணர்வுகொண்டது. எலமலைத் தோட்டத்தின் இருண்ட காம்பறையிலிருந்து தனது மாமனுடன் பேராதனையை நோக்கிப் புறப்படும்பொழுது அவளுக்கு அழுகை நெஞ்சையடைத்துக் கொண்டு வந்தது. அவள் புறப்பட்ட அதேவேளையில் பெருதொலைவிலிருந்த பிள்ளைக் காம்பறையிலிருந்து கேட்ட பன்னமான சின்னஞ் சிறிய குரலொன்று அவளது இதயத்தைக் குத்திக் கிழித்துக் கொண்டு அவளை அங்கே காலூன்றவைத்தது. அவள் தனது தங்கச்சி மூக்காயியை அந்தவேளையிலே நினைத்துக் கொண்டாள். அவளுக்கு அந்தத் தோட்டத்தை விட்டுப் பிரிய மனமில்லை. அவளின் அப்பன் வீரய்யனின் அடிக்குப் பயந்துதான் அவள் அரை குறைச் சம்மதத்தோடு மாமனோடு பேராதனைக்குப் புறப்பட்டாள்.

அவளது காம்பறைக்கு அடுத்த காம்பறையில் இருந்த பழனியாயி, இரண்டு வாரங்களுக்கு முன்பு வேலைக்காரியாகப் போய்விட்டுத் திரும்பி வந்தபொழுது அவளின் முதுகிலும், கால்களிலும் பதின்மூன்று குடுபட்ட தளும்புகள் இருந்தன. அவளும் குணவதியும் மிக நெருங்கிய சிநேகிதிகளாய் இருந்தனர். பழனியாயி தான் வேலைக்காரியாக இருந்த பொழுது பட்ட அனுபவங்களையெல்லாம் குணவதிக்குக் கதை கதையாகச் சொல்வாள். நாடியைக் கைகளால் தாங்கியபடியே குணவதி, அவள் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டிருப்பாள். ஒருநாள், பழனியாயி அவள் வேலைபார்த்த வீட்டுக் குழந்தையை முதுகில் ஏற்றி குதிரை விளையாட்டுக்காட்ட மறுத்துவிட்டாள். ஏனென்றால் அவளின் முதுகில் சென்றவாரம் போட்ட சூட்டினால் வந்த எரிபுண் இன்னும் மாறவில்லை. அவள் குதிரையேற்ற மறுத்ததற்காக அந்தக் குழந்தை அன்றுமுழுவதும் அலறிக்கொண்டிருந்தது. மாலையானது. வீட்டின் எஜமானி காரியாலயத்திலிருந்து திரும்பிவந்தாள். அழுது சொண்டிருந்த குழந்தை தாயிடம் இல்லாததையும் பொல்லாததையும் சொன்னாள்.

எஜமானியம்மாள் பழனியாயியை ஒன்றும் விசாரிக்கவில்லை. ஒரு நிமிஷம் அவளைச் சுட்டெரிப்பவள் போலப் பார்த்தாள். பிறகு எழுந்து மேசையில் இருந்த பிரம்பை எடுத்தாள்; முகத்தில் கொடூரம் வலை பின்னியிருந்தது.

"பழனியாயி இஞ்சாலை வா..."

பழனியாயி சிறகொடிந்த பறவைபோல, நடுங்கிய நெஞ்சுடன் அசைந்து எஜமானியை நோக்கி நடந்தாள்.

எஜமானி அவளுக்குமுன்னே நடந்தாள்.

"எளிய நாயே..."

எஜமானி பழனியாயியின் தலைமயிரை ஒரு கையினால் இறுக்கி இழுத்துக்கொண்டு மறுகையால் பிரம்பை மேலாக ஓங்கிச் சுழற்றி வீசினாள்.

"ஐயோ... ஐயோ..."

பிரம்பு சுழன்று வீசும் சக்கரமாய் மேலுங் கீழும், இடமும் புறமுமாய்ச் சுழலச் சுழல பழனியாயி வேதனையில் அழுந்திக் கூவிக் கதறினாள்; நெளிந்து வளைந்து கேவினாள். ஆனால் அடி ஓயவேயில்லை. பழனியாயியின் உதடுகளில் பிரம்பு பட்டு, ஒரு பல் வேரறுந்து இரத்தம் வாயிலிருந்து கொப்பளிக்கும்வரை அவளுக்கு அடி விழுவது ஓயவேயில்லை.

எலமலைத் தோட்டத்திலிருந்து குணவதி புறப்படுமுன், பழனியாயி அவளைக் கட்டிக்கொண்டு கண்ணீர் பெருக்கினாள்; அவளின் உடம்பு விக்கல் கலந்த அழுகையாற் குலுங்கியது.

"எடி தோட்டக்காட்டிலை புகைக்குடி வைரவராயிருக்கலாண்டி... பட்டணம் போனாலவலேசமும் சந்தேகமில்லை... பிறவு நரகந்தான்..."

அவளின் குரல் இப்பொழுதும் குணவதியின் காதோடு கேட்கின்றது.

"என்ன அம்மா அப்படி நிண்டிட்டா?"

பெரியய்யாவின் குரலில், குணவதியின் பழைய சிந்தனைகள் அலறுகின்றன. அன்றே அவள் அந்த வீட்டின் வேலைக்காரியானாள்.

அவள் அந்த வீட்டிற்கு வேலைக்காரியாக வந்து இன்றோடு மூன்று வருடங்கள் ஆகிவிட்டன; காலங் கீறிக்கிழித்த நிகழ்ச்சிக்கோடுகள் எத்தனையோ மங்கிப்போய் விட்டன. ஆனால் எதை மறந்தாலும், அந்த வீட்டில் தான் வேலைக்காரியாக வந்து சேர்ந்த அந்த நாளின் மங்கிய மாலைப்பொழுதினை மட்டும் குணவதியினால் மறக்க முடியவில்லை.

* *

பழனியாயியைப் போல எந்த விதமான வேதனைகளையும், கவலைகளையும் குணவதி அனுபவிக்கவில்லை. சமதரையில் எவ்வித முடங்கல் நொருங்கலுமின்றி சீராக ஓடும் நதியினைப் போல அவளது வாழ்வு அமைதியாகவே கழிந்தது. அதிகாலையிலிருந்து இரவு பதினொரு மணிவரைக்கும் அவள் விசை திருகிய இயந்திரம்போல வேலைகளைச் செய்தாலும், அவளின் மனம் நிறைவிலும், குதிப்பிலும் பொங்கிப் பூரித்து மகிழ்வு நுரைகக்கிக் கொண்டிருந்தது. நோஞ்சலான உடம்பென்றாலும் அவளுக்குச் சுறுமீனின் வழுவழுப்பான முகம். அதிலே, கழியோடும் நீர்ப்பரப்பின் மேல் இடையிடை கள்ளக் குமிழியிடுவதுபோல அரும்பி மறையும் புன்னகைப்பு.

அந்த வீட்டு எஜமானர் இராமமூர்த்தி ஓர் உயர்தர அரசாங்க அதிகாரி. மனைவியின் சொற்படியே நடப்பவர். மிகவும் அமைதியான சுபாவம் படைத்த அவர் முற்கோபக்காரராலும், இளகிய மனங்கொண்டவர். குணவதிக்கு அவர்மேல் மிகவும் மதிப்பு இருந்தது. மாலை ஐந்துமணிக்கு அவர் சார்மனைக் கட்டிலில் வந்து பெருமூச்சொன்றை விட்டவாறே சாய்வார். அந்த வேளையிலே குணவதி அவருக்கு வந்த புதினத் தாள்களையும், புத்தகக் கட்டுகளையும், கடிதங்களையும் கொண்டு வந்து அவரது கையில் கொடுப்பாள். பிறகு அவர் ஒரேயடியாக அவற்றிலேயே மூழ்கிவிடுவார். குழந்தைக்குப் 'பராக்கு'க்காட்ட பாவைகளைக் கொடுத்துவிட்டு மறையும் தாயைப்போல அவள் மீண்டும் விருந்தையிலிருந்து விலகி உள்ளேயுள்ள அலுவல்களைக் கவனிக்கச் சென்றுவிடுவாள்.

இராமமூர்த்தியின் மனைவி காந்திமதியும் ஒருவிதத்தில் குணவதிக்கு நல்லவளாகவே பட்டாள். வீட்டு நிர்வாகம் முழுவதும் அவளின் கையிலேயே இருந்தது. இடுப்பில் செருகுண்டு வெளித் தெரியும் திறப்புக் கோர்வை அவள் அந்த வீட்டில் வசிக்கும் நிலைமையைப் பட்டவர்த்தனமாகக் காட்டிக் கொண்டிருந்தது. வீட்டு வேலைக்காரர்கள் ஒழுங்காகக் கடமை செய்யப் பிறந்தவர்கள் என்பது அவளின் அசைக்கமுடியாத நம்பிக்கை.

குணவதி, இராமமூர்த்தியின் வீட்டிற்கு வேலைக்காரியாகவந்து ஒருவார காலந்தான் அப்பொழுது ஆகியிருந்தது. மாலை நான்குமணி இருக்கும். வெளியே இலேசாக மழைத்தூற்றல் விழுந்துகொண்டிருந்தது. வானொலியின் இனிய கீதம் மெல்லியதாகக் கேட்டுக்கொண்டிருந்தது. குணவதி விருந்தையில் போடப்பட்டிருந்த கதிரையில் ஈஸ்வரியை இருத்திவிட்டுத் தரையில் 'சம்மாளி' கட்டி உட்கார்ந்திருந்தாள். இரண்டே வயதான ஈஸ்வரியின் மணிக்கண்கள், குணவதியையே உற்று நோக்கிக் கொண்டிருந்தன. நாகதாளிப்பழக் கூழை நினைவுறுத்தும் செவ்வுதடுகள் புன்னகையில் குமிழ்க்க, ஈஸ்வரி தனது எச்சில் தோய்ந்த பிஞ்சு விரல்களை முன்னே நீட்டி, விரல் நக்கக் கண்களால் தன்னுடைய இதய நினைவுகளைச் சொற்களாய் மொழி பெயர்க்க முனைவதைப் போல, ஆட்டிஆட்டி அசைத்தது. அதன் பாஷையை ஈஸ்வரி கணத்தில் புரிந்துகொண்டாற் போல மனதினுள் உணர்ந்து கொண்டாள். 'ஒகோகோ... ஈஸ்வரி என்னைத் தன்னோடு மெத்தைக் கதிரையில் வந்து உட்காரும்படி அழைக்கிற அழகைப் பாருங்களேன்'. சிறு குழந்தையின் குழந்தைத் தனமான பொருளற்ற மழலைகளுக்கு தன்னுள் தானே அர்த்தங் கற்பித்துக்கொண்டே அதையே உண்மையெனவும் ஆக்கி மனதினுள் திருப்தியைச் சூடிக் கொண்டவளாய் குணவதி ஈஸ்வரிக்குப் பக்கத்தில் கதிரையில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். மெத்தை வைத்து தைத்த கதிரை, அவள் ஏறியதும் ஒருமுறை ஏறி இறங்கிப் பிதுங்கியது. குணவதியின் மனதிற்குள் அன்றைக்கு என்றுமேயில்லாத மகிழ்வு தலைதூக்கி நாட்டியமாடிக்கொண்டிருந்தது. இருண்ட, தகரக் கறள் உதிர்ந்து கிடக்கும் காம்பறைக்குள் மலசல நாற்றமும், சாம்பற் புகையின் வயிற்றைக் குமட்டும் வெடிலும் நிறைந்த அருவருக்கத்தக்க சூழலில், வெறுந் தரையில் உருண்டு புரண்டு படுக்கக்கூட இடமின்றி அசையாமல் வெறுங்கட்டைபோல தூங்கிய அந்தச் சின்னஞ் சிறிய பெண்ணுக்கு அந்த வீடு, சொர்க்கத்தின் கதவுகளைத் திறந்து விட்டிருந்தது.

கதிரையில் அமர்ந்து, கனவுலக சஞ்சாரத்தில் ஆழ்ந்திருந்த குணவதியின் எண்ணங்கள் ஏனோ தெரியவில்லை மீண்டும் எலமலைக் காம்பறைக்குள் சுழன்று பறந்தன. குணவதியின் கடைசித் தங்கச்சி மூக்காயியை அவள் அப்பொழுது நினைத்துக்கொண்டாள். ஈஸ்வரியும், மூக்காயியும் அவளின் மானசீக நினைவிலே ஒருவர்மாறி ஒருவராய் உருக காட்டிக்கொண்டிருந்தனர். மூக்காயியை குணவதியின் தாய் 'பிள்ளைக்காம்பறை'யிலே போட்டுவிட்டு அவசர அவசரமாகத் தேயிலைக் கூடையை முதுகில் கட்டிக்கொண்டு போய்விடுவாள். அதிகாலையில் எழுந்தவுடன் ஏலக்காட்டுக்குக் குட்டிச் சாக்கையும் தூக்கிக் கொண்டு அவள் செல்வாள். மரங்களோடு மரங்களாய், இடையிடை பரவி நிலத்திலிருந்து கிளைத்துச் சீறிக் கிடக்கும் ஏலச் செடிகளிலிருந்து ஏலக்காய்களைக் கொய்து போட்டுக்கொள்பவள் இடைக்கிடை தேயிலைக் கருப்பஞ்

(5ம் பக்கம் பார்க்க)

நிறைவேறாத தீர்மானங்கள்

— வி. என். பி. —

புதுவருடத் தீர்மானங்கள் செய்யும் மேனாட்டு வழக்கம் இப்பொழுது எங்கும் பரவியிருக்கிறது. இனி வரப்போகும் வருடத்தில் இன்னது செய்வேன், இன்னது செய்ய மாட்டேன் என்று எங்களில் பலர் பிரதிக்ஞை செய்து கொள்வோம்.

'எண்ணித் துணிக கருமம்
துணிந்த பின் நிற்க
அதற்குத் தக' — என்று குறளைக் குளறுபடி செய்தார் ஒருவர். அவர் என்ன வேடிக்கைப் பேச்சாளரோ என்று சந்தேகித்தேன். எதற்கும், என்னுடைய பாண்டித்தியத்தையும் காட்டி வைப்போம் என்று நினைத்து,

'எண்ணிய எண்ணியாங்கு
எய்துப எண்ணியார்
திண்ணியராகப்பெறின்'—என்றேன்.

அவர் கடகடவென்று சிரித்தார். எனக்குக் கோபம் வரப் பார்த்தது. அவர் சொன்னார்:

"தம்பி, நீ சொன்னது வள்ளுவர்வாக்கு. நான் சொன்னது சொந்த சாகித்தியம். இதுதான் இக்காலத்துக்கும் எம் போன்றவருக்கும் சாலப் பொருத்த முடைத்து. வள்ளுவர் சொன்னது போல் நாம் திண்ணியராய் இருக்கிறோமா? எமக்கு மனத்திட்பம் உண்டா? மனத்திட்பம் இருந்தால்தானே வினைத்திட்பம் இருக்கும்? எங்கள் எல்லோரிலும் கடவுள் தன்மை இருக்கிறது. அது எங்களை நல்ல காரியங்களைச் செய்யும்படி எப்போதும் தூண்டிக் கொண்டிருக்கிறது. நல்லது செய்யவேண்டுமென்று நினைக்கிறோம். நினைத்ததைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய மனத்திட்பம் எங்களிடமில்லை. ஆகையினால் தான் நாங்கள் 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' தில்லை. என்னுடைய சொந்த சாகித்தியத்தைப்பார். 'ஒரு நல்ல கருமத்தைச் செய்ய வேண்டுமென்று துணி; துணிந்த பின், எவ்வளவு உற்சாகமாகத் துணிந்தாயோ அவ்வளவு உற்சாகத்துடன் நிறுத்து.' எப்படி இருக்கிறது பார்த்தாயா?"

இப்பொழுது எனக்கு உண்மையாகவே மகா கோபம் பிறந்து விட்டது. நான் ஒரு கோழை என்பதை, என்னிடம் மனத்திட்பம் இல்லை என்பதை அவர் எப்படித்தெரிந்துகொண்டார்? என்னிடம் மனத்திட்பம் உண்டு என்பதை உலகத்தாருக்கு நிரூபிப்பதற்காக ஒவ்வொருநாளும் எத்தனை சத்தியம் செய்கிறேன். அப்படியிருக்கையில் இந்த மனிதர் இப்படியா பேசுவது! இது ஒரு போதும் அடாது! எப்படியாவது அவருடன் தர்க்கமாட வேண்டுமென்று நினைத்துக் கொண்டு திரும்பிப்பார்த்தேன். அதற்குள் அவர் மாயமாய் மறைந்துவிட்டார்!

* * *

புது வருடத் தீர்மானங்கள் செய்யும் மேனாட்டு வழக்கம் இப்பொழுது எங்கும் பரவியிருக்கிறது. இனி வரப்போகும் வருடத்தில் இன்னது செய்வேன், இன்னது செய்ய மாட்டேன் என்று எங்களில் பலர் பிரதிக்ஞை செய்து கொள்வோம். செய்த பிரதிக்ஞை நிறைவேறியதா என்று வருட முடிவில் வரவு செலவு பார்க்கும்போது வெளிப்படும்.

நானும் சென்ற பத்து வருடங்களாக ஒவ்வொரு புது வருடம் பிறக்கும் போதும் எத்தனையோ வெகு புனிதமான பிரதிக்ஞைகளைச் செய்து வந்திருக்கிறேன். எத்தனையோ கடினமான விரதங்களை அனுட்டிப்பதென்று தீர்மானித்திருக்கிறேன். அவை எல்லாம் நிறைவேறியிருக்குமானால் நான் என்னவாயிருப்பேன்! அடடா! ஆனால்,—ஆனால் என்ன—அந்தாள்தான் குட்டை வெளிப்படுத்திவிட்டாரே! இருந்தும், நானா பின்வாங்கப் போகிறவன்? கிடையவே கிடையாது! இவ்வருடமும் தீர்மானங்கள் போடத்தான் போகிறேன். போட்டுவிட்டேன். கீழே பாருங்கள் அட்டவணையை!

1. டயரி (நாட் குறிப்பு) எழுதுவதை சித்திரை மாதத்துடன் நிறுத்திவிடாமல் தொடர்ந்து மார்கழி 31 வரை எழுதுவது.

2. என்னுடைய சக தொழிலாளி ரத்தினத்திடம் 'ஓசி' பொடி வாங்குவதில்லை. (இரண்டுநாள் வைத்துக் கொண்டு இல்லையென்றுவிட்டான்.)

3. எனது மருமகளும் சிஷ்யையுமாகிய செல்வி மீனலோசினியின் பாட்டுக்கச்சேரியாயிருந்தாலும் இலங்கை வானொலியைத் திறப்பதில்லை.

4. காவியிலுள்ள எனது நண்பன் 3-4-62 இல் எழுதிய கடிதத்துக்கு பதில் போடுவது. (அவனுக்கு பத்துரூபாய் கடன் இருக்கிறது.)

5. அடுத்த வீட்டுக்காரரிடம் இரவல் வாங்கின புதுக் குடையை, தெரிந்தோ தெரியாமலோ, இன்னொருவருக்குத் தானம் வழங்குவதில்லை. (போன புரட்டாதி மாதம் போன குடையொன்று இன்னும் திரும்பவில்லை.)

6. கடன்கொடுக்க மறுத்த கடைக்காரனிடம் போய், பரோபகாரம் என்ற பொருள் பற்றி ஒரு நீண்ட சொற்பொழிவு செய்வது.

7. சலூனில் முடிவெட்டுவதில்லை. (போனதடவை 'டொப்'பாய் வெட்டவேண்டுமென்று சொல்லி தலை உச்சி மொட்டையானது.)

8. மாமிசம் சாப்பிடுவதில்லை என்று சபதம் செய்து, இரண்டுவாரம் செல்ல காய்ச்சல் என்று படுக்கையாய்க் கிடந்து, டாக்டருக்கு கைக்கூலி கட்டி, எனக்கு கோழி முட்டை அவசியமென்று அவரை வீட்டாருக்குச் சொல்லும்படி செய்யாமல், அறவே மாமிசம் விலக்குவது.

9. மனைவியின் அழகை வாயாரப் புகழ்வது. (படத்தில் வந்த கதாநாயகியை விமர்சித்து மூன்று நாள் வீட்டில் சமையல் இல்லை.)

10. 'மன உறுதி இல்லாதவன் மனிதனல்ல; செய்யு நினைத்ததைச் செய்துமுடிக்க வேண்டும்'—இப்படியான விஷயங்கள் பற்றி மற்றவர்களுக்குப் பிரசங்கம் செய்வதுமில்லை, அவர்களோடு வாதாடுவதுமில்லை.

மகளிர் மன்றம்

சமையற்கலை

கீரைக்கறி: மோர், தயிர்

— அ. காமாட்சி குமாரசுவாமி —

எண்சாண் உடம்பிற்குத் தலையே முதன்மை என்ற முதுமொழி ஒருபக்கம் இருப்பினும் எல்லாம் ஒருசாண் வயிற்றுக்கே என்பது பெரும்பாலோரின் வாழ்க்கைக் குறிக்கோளாய் இருந்துவருவதும் இயல்பே. இதிலும் உண்மையில்லாமல் இல்லை. வயிற்றின் நிலையைப் பொறுத்தே —அதாவது உணவுச் செரிப்பின் நிலை குறித்தே உடலின் நிலையும் அமையும். உடலின் நிலைக்கேற்றவாறு உள்ளமும் செம்மையுறும். எனவே வாழ்க்கையின் செம்மைக்கே உணவு தான் அடிப்படை என்பது அவர்களின் கூற்றாகும். இத்தகைய உணவு வகைகளைச் சுவைபடச் சமைத்துப் பாங்குறப் படைக்கும் கலைகளில் எந்நாட்டவரினும் தென்னாட்டவரே தலைசிறந்து விளங்கினர். வீடுதோறும் இக்கலையைப் பேணிவளர்ப்பவர்கள் பெண்களேயாவர்.

நறுமணம் கமழும் அறுசுவை உண்டி வெறும் நாக்குச்சுவைக்காக மட்டும் அமையாமல் உடலின் நலத்திற்கேற்பவும் சமைக்கப்பெற்றது. இனிப்பு, கைப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, ஆகிய ஆறு சுவைகளும் தத்தம் தனி வகையில் உடல்நலத்திற்கு உறுதி தருவனவாகவும் சிறப்பாக கைப்புச் சுவையுடைய பாகற்காய், வேப்பம்பூ, வெந்தயம், வெந்தயக்கீரை துவர்ப்புச்சுவையுடைய வாழைப்பூ, மாதுளம்பிஞ்சு, பலாக்காய் போன்றவை அடிக்கடி கறிவகைகளுள் இடம்பெறவேண்டும். ஆனால் நாகரிகத்தின் போக்கிலே வேலை மிகுதியாக்கும் காரணத்தால் இவை இன்று பெரும்பாலும் அருகி வருவதைக் காண்கின்றோம். அதே போன்று மோர்ப்புளி, மரப்புளி, பழப்புளி என புளிப்புச்சுவையும் மூவகைப்படும். கார்ப்பிலும் மிளகாயைப் பார்க்கிலும் மிளகே சாலச் சிறந்ததாகும். உணவுக்கு உணவாய் மருந்துக்கு மருந்தாய் விளங்குவது மிளகு. எனவேதான் மரப்புளியும் மிளகும் சேர்ந்த மிளகுச்சாறு (ரசம்) ஏழை எளியோர்க்கும் செல்வந்தர் உணவிலும் இன்றியமையாததோர் உணவு வகையாய் அமைவதை இன்றும் காணலாம். மூட்டை மூட்டையாய் இம்மிளகு உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபத்தில் இடமபெற்றதென ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய இலக்கியங்களாலும் அறியலாம்.

தமிழ்நாட்டின் முக்கனிகளை ஈனும் மரங்களும் பற்பலவகையில் உணவில் இடம்பெற்றன. வாழைத்தண்டு, வாழைப்பூ, வாழைப்பிஞ்சு, காய், கனிகள் உணவில் சிறந்த இடம்பெறும். மாவடு, மாங்காய், மாங்கனியும் உண்ணப்பெற்றன. பலாப்பிஞ்சு, பலாக்காய் (ரொட்டிப் பலா) பலாச்சுளை, பலாக்கொட்டையும் உணவில் இடம் பெறும்.

இவைகளே போன்று கீரை வகைகள் மிகச் சிறந்த உணவாய் அமைந்தன. அரைக்கீரை, முளைக்கீரை, வெந்தயக்கீரை, அகத்திக்கீரை, பசலைக்கீரை, சுக்காக்கீரை, தூதுவளை முதலிய எண்ணற்ற கீரைகள் உணவாயின. அவற்றுள் தண்டுக்கீரையின் எல்லா உறுப்புகளும் கறியாகும். அடித்தண்டைக் குழம்புக்கும் இளந்தண்டைக் கூட்டுக்கறிக்கும், இலையைக் கீரைக்கும் பயன்படுத்துவர்.

கீரையுணவு ஏழை எளியோர்க்கும் சத்தான உணவாக அமைவதாகும். பசிகீரையில் உப்புச்சத்தும் ஏற்கனவே நிறைந்திருப்பதால் கீரையினை உப்பிடாமற் சமைப்பினும் அதனைச் சுவைத்து உண்ணலாம். உப்பு இடினும் மிகக் குறைவாக இடல் வேண்டும்.

மோர், தயிர்

ஒவ்வொரு நாட்டுமக்களும் அவ்வந் நாட்டுத் தட்பவெப்பநிலைக்கேற்றவாறும், காலநிலைக்கேற்றவாறும் அமையும் உணவினை உண்ணுதல் வேண்டும். வெப்பம் மிக்க நமது தமிழ் நாட்டில் மோரும் தயிரும் வீடுதோறும் விளங்கக்காணலாம். மோர் தயிராலான மோர்க் குழம்பும் வீடுதோறும் காணலாகும். செய்வதும் எளிது. அதிக நேரமோ செலவோ தேவைப்படுவதில்லை. அறுசுவைகளுள் இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு ஆகிய நான்கு சுவைகளையும் உடையதாகவும் அமையும் நல்லுணவாகும். மோர்க் குழம்பின் சுவையே அதன் தாளிப்பில்தான் சிறப்புறும். தாளிக்கும்போது 'குய்' என்ற ஒலி கேட்பதால் "குய்" என்ற சொல்லே தாளிப்பைக் குறிக்கும்.

எளிய உணவாயினும் சுவையான உணவு வீட்டில் கிடைப்பின் ஆடவர் விடுதி உணவை விரும்பி வெளியே செல்லமாட்டார். "உணவில் நஞ்சு" முதலிய தொல்லைகளும் உடம்பை வருத்தா. அடுக்த உண்மை, அன்புடன் மனைவி சமைத்த உணவினை உண்ணும் கணவன் அதைப் பாராட்ட மறக்கக்கூடாது. புகழை விரும்பாதார் யாருளர்! அதிலும் அன்றாடம் அட்டில் தொழில் ஒன்றிலேயே ஈடுபட்டுக்கிடக்கும் மனைவிக்கு வேறு எத்துறையில் தான் புகழ் பெற வாய்ப்புள்ளது! நாள் முழுதும் உழைக்கும் மனைவிக்கு இத்தகைய பாராட்டு மகிழ்ச்சியைத் தருவதோடு மேன்மேலும் அத்துறையில் சிறக்க ஊக்கத்தையும் அளிக்கும்.

எனவே தமிழ்நாட்டு மகளிரின் தனிக் கலையான அட்டில் தொழில், சுவையோடு சத்தும் தருவதாக விளங்கி வீடும் நாடும் விளங்கி உயர்வதாக!

சரித்திரப் பிரசித்திபெற்ற பழங்கால கோட்டை

அநேகமாக ஒவ்வொரு பெரிய ஜெர்மன் நகரிலும் ஒரு பிரசித்தமான கோட்டையோ, அரண்மனையோ இல்லாமல் இருக்காது. ஹனோவரிலுள்ள கோட்டை மிகப் பழமையானது என்பதுடன் சரித்திரப் பிரசித்தமுள்ளதாகும். இரண்டாவது உலகயுத்தத்தின் போது இக்கோட்டையின் உட்பாகங்கள் தகர்க்கப்பட்டு விட்டன. வெளிப்புறம் பாதிக்கப்படவில்லை. வெளிப்புறத்தை அப்படியே வைத்துக்கொண்டு உள்புறத்தில் சகல வசதிகளும் அமைத்து இக்கோட்டை புதுப்பிக்கப்பட்டு விட்டது. லோயர் ஸாக்ஸனியின் பார்லிமெண்ட் இதில் நடைபெற்று வருகிறது. இடிந்துபோன கோட்டைகளில் ஒரு சிலதான் ஹனோவர் கோட்டைமாதிரி புதுப்பிக்கப்பட்டுள்ளன.

ஜெர்மனியின் நகரங்களில் சாதாரணமாகச் சரித்திரப் பிரசித்திபெற்ற கோட்டைகள், அரண்மனைகள் இருப்பது சகஜம். அதேபோல் ஹனோவரிலும் ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற கோட்டை இருந்து வருகிறது. இக்கோட்டை ஆங்கில, கிரேக்க ராஜகுடும்பங்களுடன் நெருங்கிய சம்பந்தமுடையதாகும். ஜியார்ஜ் வான் கேலன் பார்க் என்பவரின் குடியிருப்பு ஸ்தலமாக இது 1640-ல் ஏற்பட்டது. 19-வது நூற்றாண்டில் இதன் சுற்றுப்புறக் கட்டிடங்கள் கட்டப்பட்டன.

இரண்டாவது உலக யுத்தம் தின்போது இதன் உட்புறத் முழுவதும் இடிந்து தகர்ந்து விட்டது. இதன் வெளிப்புறச் சுவர்கள் மட்டும் அப்படியே இருந்தன. பிரபல ஜெர்மன் கட்டிட நிபுணர் பீட்டர் ஆஸ்டர்லென் என்பவர் இக்கோட்டையின் உட்புறத்தைச் சகல வசதிகளையும் அமைத்துக் கட்டியிருக்கிறார். லோயர் ஸாக்ஸனியின் பார்லிமெண்ட் அலுவலகம் இங்கு இடம்பெற்று அதன் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

லோயர் ஸாக்ஸனி ராஜ்யத்தில் இப்போது அடங்கியிருப்பது ஹனோவர், ஒல்டன்பெர்க், பிரன்ஸ்விக், ஸ்காம்பர்க்லிப் ஆகியவையே. இக்கோட்டை லீன் கோட்டை என்று அழைக்கப்பட்டு வருகிறது.

இக்கோட்டையிடம் மக்கள் எப்போதுமே பெருமதிப்புக் கொடுத்து வந்திருக்கிறார்கள். யுத்தத்தின்போது அது நிர்மூலமாகியும் — கூட — அதனிடம் மக்கள் வைத்திருந்த மதிப்பு குறையவில்லை.

இக்கோட்டையில் மார்ல்பரோ கோமகன், ஸவோயா இளவரசர் யூஜென், ரஷ்ய மன்னர் ட்ஸார் பீட்டர், லெப்னீஸ் என்ற பிரபல தத்துவஞானி, பிரிட்டிஷ் மன்னர்கள் ஆகியோர் இங்கு தங்கி வசித்திருக்கின்றனர்.

இப்போது இங்கு அமைக்கப்பட்டுள்ள பார்லிமெண்டரி மண்டபத்தில் 157 மக்கள் பிரதிநிதிகளும், 83 அதிகாரிகளும் வேலைசெய்ய வசதியுள்ளது. ஹனோவரில் யுத்தத்தின் போது நிர்மூலமான பல கட்டிடங்கள் இப்போது புதிதாகநிர்மாணம் செய்யப்பட்டு புதுச் சோபையையே நகருக்கு அளித்துவருகின்றன. இவற்றில் புதுக் கட்டிடக் கலையே புத்துயிர் பெற்றிருப்பதைக் காணலாம்.

முற்பகுதியிலுள்ள போர்டிக் கோவிலிருந்து மாடிப்படி வழியாக மேலே சென்றால் கண்ணாடி சலவைக்கல், சிவப்புக்கல் இவற்றால் இழைக்கப்பட்ட பல விஸ்தாரமான அறைகளை அடையலாம். இதில் ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் ஆகியவைகளும் இப்போது இடம்பெற்றுள்ளன. உட்புறங்களில் செய்யப்பட்டுள்ள அழகை நாள் முழுவதும் பார்த்துக்கொண்டேயிருக்கலாம்.

சிறந்த சேமிப்பு
அதிக ஆதாயம்
உயர்ந்த வட்டி
6%
உறுதியான இடம்
சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

சுய ரூபம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வெறியில் புலம்பும் அரற்றல் அல்ல! என் உள்ளத்திலிருந்து புறப்படும் உண்மை! என்னை நம்பு சந்திரா நம்பு!" என்றான் மனோகரன் சந்திராவின் தலையில் கைவைத்தபடி!

சந்திரா உவகையில் தன்னையே மறந்து நின்றாள்.

"ஆருயிர் அன்பரைத் திருத்திவிட்டோம் மாமியாரின் குடும்பத்தில் ஒளி ஏற்றிவிட்டோம்" என்ற உணர்வினிலே உலகையே மறந்து நிற்கிறாள்.

ஆனால்?

—3—

அன்புள்ள மனோகரன் அறிவது:

நானும் சந்திராவும் சுகமாய் இருக்கிறோம். அதேபோல் உன் சுகத்தையும் கடவுள் காப்பாற்றுவாராக.

இப்படிக்கு
மரகதம்மாள்.

கடிதத்தின் மீது கண்களை ஓடவிட்ட மனோகரனுக்குத் தலை சுற்றியது.

கொழும்பிற்கு வியாபார அலுவலாகவந்து ஒரு மாதம் கழித்துவிட்டது. சந்திராவுக்கு எவ்வளவு ஆசையுடன் இரண்டு கடிதங்கள் எழுதினான்! ஒன்றிற்கும் பதிலில்லையே! இப்பொழுது அவளுடைய தாயிடமிருந்தல்லவா வருகிறது. அதுவும் இரண்டு வரியில் முடிக்கப்பட்டுள்ளது.

சந்திரா கடிதம் எழுதி அது தன்கைக்குக் கிடைக்காமலிருந்திருக்க நியாயமேயில்லை. அப்படியானால் சந்திரா பதில் போடாததன் காரணம்? வேண்டுமென்றே எழுதவில்லையா? அல்லது அவளை எழுதவொட்டாது யாராவது தடுத்துவிட்டார்களா?... அப்படித் தடுத்திருந்தால் யார் தடுத்திருக்க முடியும்? எதற்காகத் தடுத்தார்கள்?

குழம்பிய மனத்துடன் கொழும்பிலிருந்து புறப்பட்டு நேரே சந்திரா வீட்டிற்கே போகிறான். எதிர்பாராத விருந்தாளியாக உள்ளே நுழைந்த மனோகரனுக்கு சந்திரா முற்றம் கூட்டும் காட்சியே கண்ணுக்கு விருந்தாகக் கிடைக்கிறது. அவள் கூட்டும் அழகை ரசித்தபடி தன்னையே மறந்து நிற்கின்றான்.

"என்னடியம்மா... மனோகரன் வந்து அரைமணி நேரமாகக் காத்து நிற்கிறான். வந்தவரை வரவேற்காமல் நீபாட்டுக்குக் கூட்டிக்கொண்டு நிற்கிறாயே..."

மரகதம்மாள் கூறிமுடிக்கவில்லை, சந்திரா ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு அந்த இடத்தைவிட்டு மின்னலென மறைகிறாள்.

மனோகரனுக்கு யாரோ தலையில் சம்மட்டியால் அடிப்பது போல் இருக்கிறது! ஒரு மாதம் கழித்து பிறந்த வீட்டிற்குக்கூடப் போகாமல் நேரே சந்திராவைத் தேடிவந்தால் அவள் தரும் வரவேற்பு இதுதானா?

"என்ன மனோகரன் சிலை போல் நின்றுவிட்டாய். வாவேன் உள்ளுக்கு" எனச் சொல்லிவிட்டுச் சிரிக்கிறாள் மரகதம்மாள். அவள் சிரிப்பின் அர்த்தத்தை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"என்ன மாமி! எல்லாமே புரியாத புதிராயிருக்கின்றது. சந்திராவிற்கு இரண்டு கடிதங்கள் எழுதினேன். அதற்குப் பதிலில்லை இப்பொழுது என்னடா என்றால் யாரோ வேற்று மனிதனைக் கண்டவள் போல் ஓடி ஒழிகிறாள். அத்துடன் நீங்களும் சேர்ந்து."

"என்னதம்பி ... அவளுக்குப் பின்னே வெட்கமிராதா? ... நான்தான் நீவந்ததும் அறிவிக்கலாமெனச் சொல்லி அவளைக் கடிதமெழுதாமல் செய்துவிட்டேன் ... வந்து ... "

"மாமி! ... "

"என்ன மனோகரன் ...அதை நீயே உணர்ந்திருக்கவேண்டும். சந்திரா அடிக்கடி வாந்திஎடுக்கிறாள். சரியாகச்சாப்பிடுவதும் இல்லை ..."

"என்ன மாமி ... சுகமில்லையென்றால் டாக்டரிடம் அழைத்துப் போவதுதானே ... நான் வரட்டும் என்று காத்திருந்தீர்கள்?"

"மனோகர்!"

மரகதம்மாள் அழைத்த குரலில் தானித்த உறுதியும் கடுமையும் மனோகரனைத் திடுக்கிடவைக்கின்றன!

"செய்வதையும்செய்துவிட்டு விளையாடவும் ஆரம்பித்துவிட்டாயா? சந்திரா ஒரு மாதமாய் முழுகாமல் இருக்கிறாளடா முழுகாமல்!"

"மாமி!"

மனோகரன் கத்திய தொனியில் அந்த வீடே அதிர்ந்தது.

"உங்களுக்கென்ன பயித்தியமா பிடித்து விட்டது ... அல்லது என்னைத் தட்டிக்கழிப்பதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சியா?"

அடுத்த கணம் வெறிபிடித்தவன் போல் உள்ளே பாய்கிறான். சந்திரா தூணைப் பிடித்தபடி கொண்டு நின்று கண்ணீர் வடித்திய நிலை மனோகரனின் மனதில் சற்றாவது உரசினதாகத் தெரியவில்லை.

"என்ன சந்திரா நீயாவது பேசேன் ... மாமி சொல்வது உண்மைதானா? ... சொல்லு சந்திரா சொல்லு! ... உண்மைதானா சந்திரா ?..."

அவள் அதைப் பொய் என்றுரைக்கமாட்டாளா என அவனுடைய அத்தனையங்கங்களும் துடிக்கின்றன!

"என்ன அத்தான் ... நீங்களா இப்படிக் கேட்பது? ... அன்று ... கொழும்பிற்குப்புறப்படுவதற்கு முதல் நாள் ... வெள்ளிக்கிழமை இரவு! ... அம்மாகூடக் கோயிலுக்குப் போய்விட்டார் ... நீங்கள் குடித்துவிட்டுவந்து ... எப்படியாவது தடுப்பதற்கு முயன்றேன் ... ஆனால் ... "

"நிறுத்து சந்திரா!"

மனோகரனின் பற்கள் ஒன்றுடன் ஒன்று உரசும்ஓசை தெளிவாகக்கேட்கின்றது. பின்ஏனோ திடீரென அமைதியடைகின்றான்.

"சந்திரா ... நான் குடிகாரன்தான் ... அளவுக்கு மிஞ்சிக் குடிப்பவன் தான். ஆனால் குடித்துவிட்டு எனது வீடு தாண்டி உனது அம்மா இல்லாத நேரம் உன்னிடம் வந்து வம்புசெய்வதற்கு நான் என்ன கொடிய கயவனா? ... முழுக்க முழுக்க உலகத்தையே மறக்குமளவுக்கு நான் இன்னும் குடிக்கப் பழகவில்லையே!"

ஒரு நிமிடம் பேய்க்காட்டு அமைதி நிலவுகிறது!

"என் வாழ்வுமலர, குடும்பத்தின் பெயரிலே விழுந்த கறையை துடைத்துக் கழுவ நீ என் குடும்பத்தில் காலடி வைக்கப் போகிறாய் என்ற நினைவே என்னை இவ்வளவு நாளும் வளர்த்து வந்தது... ஆனால் ... கொழும்பிலிருக்கும் பொழுது உன்னிடமிருந்து கடிதமொன்றும் வரவில்லையே என்ற பொழுதே என மனதில் பல எண்ணங்கள் எழ ஆரம்பித்துவிட்டன ... இன்றுஅதன் கயரூபத்தைக் காண்கிறேன் ... ம்! யார்தான் உன் உள்ளத்தைக் கெடுத்தார்களோ? ... ஆனால் என்னை நீங்கள் உதறித் தள்ளிவிடுவதென முடிவுகட்டிவிட்டால் "என்னை மறந்துவிடு" என ஒரு சொல் சொன்னால் நான் போய்விடமாட்டேனா? ... இதற்கு இப்படியொரு பயங்கரக் கற்பனையா?... சீ! ...நான் வருகிறேன்."

தலை குனிந்தபடியே கூறிவிட்டு நடக்கத் தொடங்கினான்.

"அத்தான்!"

சந்திராவின் அலறல் மனோகரனையும் உலுக்கிவிட்டதென்றே சொல் வேண்டும் அவன்நிற்க அவள் ஓடிவந்து அவனுடைய காலைக்கட்டிப் பிடித்துக்கொள்கிறாள்.

"அத்தான் ... என்னை விட்டு விட்டுப் போய்விடாதீர்கள் ... போய் விடாதீர்கள் அத்தான்! ...நான்குற்றமற்றவள்... நான் குற்றமற்றவள் அத்தான்" அவளுடைய கதறல் கல்லையுங் கரைகக்கூடியதாய் இருந்தது. ஆனால் மனோகரனுக்கு?

"உங்கள் நாடகத்தின் கடைசிக் கட்டம் அருமையாகத்தான் இருக்கிறது ... சீ விடு காலை!" என்றவனாய் தன் பலம் முழுவதையும் சேர்த்து சந்திராவை உதறித் தள்ளுகின்றான். அவளுடைய தலை சுவருடன் மோதிரத்தம் பீறிடுவதைக்கூடப் பொருட்படுத்தவில்லை. அறையை ஓட்டு வெளியேறுகின்றான்.

"அத்தான் ...! போகாதீர்கள் அத்தான்... பின்பு என் பிணத்தைக்கூட காணமாட்டீர்கள் ... அத்தான்." சந்திராவின் கதறல் அந்தப் பிராந்தியம் முழுவதிலும் எதிரொலிக்கின்றது.

— 4 —

அடுத்த நாட்காலை ஏழுமணி! வெவெவெற் கட்டில்கூட மனோகரனுக்கு முட்களாகக் குத்துகின்றது. புரண்டு புரண்டு படுக்கின்றான். ஆனால் மனம் ஒருநிலையில் நின்றால்தானே!

சந்திராவின் குழந்தை உள்ளத்தை யார்தான் மாற்றியிருப்பார்கள்? அதுவும் குடிப்பதை ஒழித்துவிடுகிறேன் எனச் சபதம் செய்துகொடுத்த பின்னர் அவள் மனம் மாறியதென்றால்...? யோசித்து யோசித்து மண்டையை உடைத்துக்கொள்கின்றான். ஆனால் இந்தக் கேள்வியின் பதிலை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அந்த வெள்ளிக்கிழமையை, கொழும்புக்குப் புறப்படுவதற்கு முந்திய நாளை நினைவுபடுத்திக்கொள்ள முயலுகிறான். பல நிகழ்ச்சிகளுடன், அன்று மாலை பிரண்டி அருந்தியது ஞாபகம் வருகின்றது. 'கொழும்புக்குப் போய்விட்டால் குடிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கிறதோ என்னவோ, என்று சற்று அதிகமாகக் குடித்ததும் நினைவுக்கு வருகின்றது. ஆனால் எப்படிதான் குடித்தாலும் நிலையிழந்து மதியிழந்து கிடடத்தட்ட இருநூறு யார்களுக்கப்பாலிருக்கும் வீட்டுக்குப் போவதென்றால்... வீட்டை விட்டு வெளியேறும் போது பட்டு தடுத்திருக்கமாட்டானா...? வீதியிலே வெறியில் தள்ளாடித் தள்ளாடிச் சென்று கொண்டிருக்கும்பொழுதாவது யாராவது தடுத்திருக்கமாட்டார்களா..." சரி! எல்லோரின் கண்ணிலும் மண்ணைத் தூவிவிட்டுத்தான் அவளின் வீட்டுக்குள் நுழைந்துவிட்டோம்... சந்திராவினால் அப்படியொரு நிகழ்ச்சியைத் தடுத்திருக்க முடியாதா? பத்துவயதுப் பாலகனொருவனின் உதையிலேயே குபுறவிழுந்திருப்பேன்! சந்திரா வேறு என்னுடன் போராடியதாகக் கூறுகிறாளே ... சீ! என்ன அபாண்டம்! இத்தனை பயங்கரமான கற்பனையைச் சொல்லத் துணிந்தவர்கள் அது நம்பக்கூடியதானா என நினைத்துப்பார்த்திருக்கக்கூடாது!

"ஐயா...! சின்னையா!"

யாரோ அழைக்கின்றார்கள்! மனோகரனின் சிந்தனை கலைகிறது. வெளியே வருகின்றான். சலவைத்தொழிலாளி அழுக்குத்துணி எடுப்பதற்காகக் காத்து நிற்கின்றான். அவன்கூட, தன்னைக் கேலி செய்வதைப்போல் மகேனகரனுக்குத் தோன்றுகின்றது. முன்பெல்லாம் பத்துநாட்களுக்கொருதடவை வந்தவன் இப்பொழு நாலு பத்துநாட்களுக்கொரு தடவையல்லவா வருகின்றான்.

துணியை எடுத்துக்கொடுப்பதற்காக பட்டுவை அழைக்கின்றான், பதிலில்லை. தாயையும் காணவில்லை. தானே துணிகளைக் கொடுக்க முனைகின்றான்.

ஒவ்வொரு துணிகளாக எடுத்துப் போட்டுக்கொண்டு வந்தவன் ஒரு உடுப்பின்மீது கிடந்த ரத்தக்கறையைக் கண்டு மனம் துணுக்கிறுகின்றான். நன்றாக யோசித்துப் பார்க்கிறான். புத்தம் புதுக் காற்சட்டை. அன்று கொழும்புக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் ஏதோ ஒரு விருந்து நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக அணிந்தது. அதிலே ரத்தக்கறையா...? எப்படி வந்தது? கேள்விக்குறி சந்தேகக் குறியாக மாறுகின்றது.

காலடி யோசை... பட்டு வருகின்றான்.

"பட்டு!" ஈனக் குரலில் அழைக்கின்றான் மனோகரன்.

"என்ன சின்னையா" என்றவனுக்குப் பதில் சொல்ல முடியவில்லை மனோகரனால். அவனையும் தன்கையிலிருந்த துணியையும் மாறிமாறி பார்க்கிறான். பட்டு புரிந்துகொண்டுவிடுகிறான். அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. தனக்குத் தெரிந்ததைச் சொல்ல நினைத்தவன் சலவைத்தொழிலாளி அருகில் இருப்பதை உணர்ந்து கண்களினால் ஜாடை செய்துவிட்டு அடுத்த அறைக்குச் செல்லுகின்றான். மனோகரன் பின்தொடர்கிறான்.

"என்ன சின்னையா இதைக் கூட மறந்துவிட்டீர்களா?... நாசமாய்ப் போச்சு... அந்தப் பெண் அறிந்தால் இத்தறுதியில் கழுத்தில் கயித்தை மாட்டிடுமே...அன்றுதானே நீங்கள் கொழும்பிற்குப் போறதற்கு முதல்நாள்... எனக்கு ஒன்றாக நினைவிருக்கிறது... அன்று மாலை... குடித்துவிட்டு அரற்றிக்கொண்டிருந்த உங்களை இருந்தாற்போல் காணவில்லை. ஒருவேளை சந்திரா அம்மா வீட்டிற்குப் போய்விட்டீர்களோ என நினைத்து அங்கு வந்தேன். அங்கே நீங்க..."

"அங்கே..."

மனோகரனின் இருதயம் அடித்துக்கொள்ளும் வேகம், இதோ நின்றுவிடப்போகிறேன் எனப் பயமுறுத்தியது. அவன் இருதயத்தை அழுத்திப்பிடித்துக் கொள்ளுகின்றான்.

"அங்கே... நீங்க... அப்பொழுதுதான் சந்திராவின் அறையிலிருந்து வந்துகொண்டிருந்தீர்கள்...நீங்கள் இருந்த கோலமும் சந்திரா அம்மாவின் விசும்பல் ஒலியும் எனக்கு நிலைமையைத் தெளிவுபடுத்தின..."

பட்டு கூற நினைத்ததைக் கூறி முடிக்கவில்லை. "சந்திரா" என்ற மனோகரனின் அலறல் அவனைத் திடுக்கிடச் செய்து அவனின் வாயை மூடுகின்றது. அடுத்த கணம் வெறிபிடித்தவன் போல சந்திராவின் வீட்டுக்கு ஓடுகிறான்.

"சந்திரா! சந்திரா!" எனக் கதறியவனுக்கு வீட்டிலிருந்து பதிலொன்றுங் கிடைக்கவில்லை. உள்ளே பாய்கிறான். அங்கே! நிலத்திலே அலங்கோலமான நிலையிலே கிடந்த உருவத்தின் காட்சி அவனது இரத்தத்தை உறையவைக்கிறது. மரகதம்மாள் குப்புற விழுந்து கிடந்தாள்! "மாமி! மாமி!" எனக்கத்துகிறான் பதிலில்லை. மூக்கில் கைவைத்துப் பார்க்கிறான். மூச்சு லேசாக வந்துகொண்டிருக்கிறது இதற்கிடையில் யாரோ "ஐயோ சந்திரா! ஐயோ... ஐயோ" என அலறியது கேட்கிறது. மனோகரனுக்கு இருதயமே நின்றுவிட்டாற்போல் இருக்கிறது. சத்தம் வந்த திசையை நோக்கி ஓடுகிறான்.

வெளியே! கொல்லைபுறத்துக்கு கிணற்றடியில் கூடி நின்ற கூட்டத்தின் கதறல் ஒலி காதைப் பிய்க்கிறது. கூட்டத்தையும் மதியாது உள்ளே பாய்கிறான் அங்கே அவன் கண்ட காட்சி!

"சந்திரா!" மனோகரனின் ஓலம் வானைப் பிளக்கிறது.

மனோகரனின் வீட்டை அரசு புரிந்த மது அரக்கன் "இந்த வீட்டில் ஆடிய ஆட்டம் போதும்" என்ற மனநிம்மதியுடன் இங்கிருந்து வெளியேறுகிறான்!

(யாவும் கற்பனை)

ஆபிரிக்காவில் மாந்திரீகம்

— என். எஸ். ரிஷிகேஸ் —

(சென்ற வாரத் தொடர்ச்சி)

சில 'மந்திரவாதிகள்' எனப்படும் மாந்திரீகர் அறியாமையின் எல்லைக்கோட்டைத் தாண்டிவிடுவர் சில சமயங்களில்! இவர்கள் கர்ப்பமடையாத பெண்களைப் படுக்கவைத்து அவர்கள் வயிற்றில் ஒரு பெரிய கூழாங்கல்லாலோ அல்லது உருண்டையான மரத்தாலோ மூன்று அல்லது நான்குமுறை தட்டிவிட்டு வயிற்றைப் பிடித்து அழுத்துவர். பின்னர் காட்டுஇலைகள், பழங்கள இவற்றின் சாற்றை உடல்மீது பிழிவர். இவ்வாறு குழந்தை பிறக்குமேயாயின் அது இம்மந்திரத்தின் வேலை என்று கூறுவர். இம்மாதிரியான உடற்கூறு சம்பந்தமான காரியங்களைச் செய்யும் மாந்திரீகர்களுக்கு 'மருத்துவ மாந்திரீகர்கள்' என்று பெயர். இக்காரியங்கள் வெற்றியடைந்த பின்னர் இவர்கள் பெறும் பரிசுகள் ஏராளம். பயிர்வகைகள், ஆடுகள், கோழிகள், மட்பாண்டங்கள், மதுபானவகைகள், மங்கையர், வில், அம்பு, தோல் முதலியன. இதைத் தவிர மக்களால் இவர்களுக்கு யாகத்தின் பொருட்டு கொடுக்கப்படும் பொருள்களையும் இவர்கள் 'அபேள்' செய்துவிடுவர். யாகப்பொருள்கள் வந்த சுவடு தெரியாமல் மறைவது மிகவும் சகஜம். ஆனால் மாந்திரீகர்களின் அதிர்ஷ்டம் தவறினால் அதோ கதிதான். கிராமத்தை விட்டு ஓடஓட விரட்டுவர். இவ்வாறான தண்டனையையும் அனுபவித்தனர் பலர்.

முக்கியமாக, இவர்களைத் தண்டனையை அடையச் செய்வது இவர்களின் பிரதான ஜோசியமான 'மழை ஜோசியம், ஆபிரிக்க மக்கள் மழை வருமா? வராதா? என்பதை மாந்திரீகர்களின் மூலமாய் முன்பே அறிந்துகொள்வர். இவர்கள் சொற்படி நடந்துவிட்டால் மக்களால் சேமித்து குவித்து வைக்கப்பட்ட தானியத்தில் ஒவ்வொருவரும் ஒரு பகுதியை மாந்திரீகனுக்கு அளிப்பர். பிறகு, அவர் கோரைப் புற்களால் மறைவு கட்டப்பட்ட பெரிய பல்லக்கில் கிராம வீதிகளில் ஊர்வலமாய் அழைத்துச் செல்லப்பட்டு மக்கட் பிரதிநிதி சபையில் கௌரவிக்கப்படுவார். இந்த அறிவில்லா மக்கள் இயற்கையன்னை செய்யும் ஒவ்வொரு மாறுபாட்டையும் சாதாரணமாய் கருதுவதில்லை. எதற்காயினும் மந்திரமும், மாயமும், பூசாரியும் தான்! இம்மூட மக்கள் புயல், காற்று, வெள்ளம் இவற்றைப் பல விரோதிகள் கூட்டமாய் ஒருமித்து செய்யும் காரியம் எனநினைத்து, இதன் பொருட்டு இவர்கள செய்யும் பூஜையும், ஆர்ப்பாட்டமும் கணக்கிலடங்கா. ஆனால் ஒன்று இவற்றிலெல்லாம் பயன் அடைவர்-கடவுள் என்ற அளவில் கருதப்படும் அந்த ஒரு மனிதன்-! மருத்துவர் எனப்படும் 'மாந்திரீகரே'.

ஆபிரிக்கக் கிராமக் குடிகள் வேட்டையில் வல்லவர். யானை, எருமை, சிங்கம் போன்ற பலம் பொருந்திய மிருகங்களை ஒரே உலோகத்தாலான ஈட்டியால் நேருக்கு நேர் சண்டையிட்டுக் கொல்வர். இவர்கள் யானை, பன்றி, காட்டெருமை

(11-ம் பக்கம் பார்க்க)

சிறுவர் பூங்கா

வரதனின் திருட்டு

— 'பாமா ராஜகோபால்' —

வரதன் பள்ளியிலே படிக்கும் சிறுவன்; அவனுக்குத் தனது அண்ணன் மாதிரித் தனது பெயரும் பத்திரிகைகளிலே வெளியாக வேண்டும் என்று ஆசை. அந்த ஆசையினால் பல பத்திரிகைகளுக்கு கதைகட்டுரைகள் எழுதி அனுப்பியிருக்கிறான்.

ஆனால் —

அவைகள் எவையுமே பத்திரிகைகளில் பிரசுரமாகவில்லை; தனது அண்ணனைக் கொண்டு ஏதாவது எழுதிப் பத்திரிகைகளுக்குத் தனது பெயரிலே அனுப்பிவைக்கலாமே என்று கூடப் பலமுறை எண்ணியிருக்கிறான். அப்படி எண்ணிய அவன், ஒருநாள் —

தனது அண்ணனிடமேநேரில் போய்த் தனது விருப்பத்தைக் கூறியிருக்கிறான்; தனது தம்பியின் இப்படியான விருப்பத்தைக் கேட்டு, அண்ணன் மிகவும் கோபம் கொண்டு —

"டேய், உனக்குச் சொந்தமாக எழுதத் தெரியாதா? நீயே தெண்டித்து எழுது. முயற்சி செய்தோர் இகழ்ச்சி அடையார்" என்று தனது தம்பிக்கு அறிவுரை கூறி அனுப்பி விட்டான். மனமுடைந்த வரதன் —

சிந்தித்தான்! சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தான்.

தனது அண்ணன் இல்லாத சமயம் பார்த்து - அவனது அறைக்குள் சென்றான். அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்த பழைய பத்திரிகைகளில் ஒன்றை எடுத்தான்.

பிறகு —

அதில் வெளியாகியிருந்த 'அன்பே தெய்வம்' என்ற கதையை பார்த்தெழுதித் தனது பெயரிலே 'நிலா' என்ற மாதப்பத்திரிகைக்கு அனுப்பி வைத்தான்.

'நிலா' தை இதழ் வந்தது; வரதனுக்கும் ஒரு இதழ் தபாலில் வந்தது; உள்ளே —

அவனது பெயரில் 'அன்பே தெய்வம்' கதை வெளியாகியிருந்தது. அவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. தனது அண்ணனிடம் சென்று 'நிலா' வைக் கொடுத்துத் தனதுகதையைக் காட்டினான்.

அந்தக் கதையை வாசித்த அவனது அண்ணன் பூரிப்படைந்து விட்டான் — தனது தம்பியின் திறமையை வியந்து!

வரதன் தான் பெரிய 'எழுத்தாளன்' என்ற எண்ணத்தினால் சற்றுப் பெருமைகொண்டிருந்த சமயம் —

'நிலா' மாசி இதழ் வந்தது; வரதன் கடிதங்கள் பகுதியைப் பார்த்தான் - தன்னை யாராவது போற்றி எழுதியிருக்கிறார்களோ என்று!

பாவம், வரதன்! எல்லாக் கடிதங்களுமே வரதனின் 'அன்பே தெய்வம்' கதையைப் பற்றியதாகவே இருந்தது. ஆனால் —

அவைகள் எல்லாம் அக்கதையை போற்றியதாக இருக்கவில்லை. பதிலாக —

'அன்பே தெய்வம்' என்ற கதை 1958-ம் ஆண்டு ஆவணி மாதம் வெளியான 'தேன்' இதழில் 'அன்பரசன்' எழுதிய கதையை வரதன் என்பவர் திருடிவிட்டார் என்பது போன்ற கடிதங்களாகவே இருந்தது.

அவைகளில் ஒன்றை வாசித்ததும் வரதன் மயங்கிவிட்டான்!

மாற்றம்

— சி. சண்முகராசா —

ஆவேசத்தைத் தீர்த்துக் கொள்வதுபோல் கடல் அலைகளெல்லாம், மலைபோன்றிருந்த பெரும் பாறைகளில் முட்டிமோதிச் சென்றன. அதேபோன்று அவன்—சுந்தரின் மனக்கடலிலும் ஒரே கலக்கம். ஆவேச அலைகளெல்லாம் அவனது இதயத்தில் முட்டி மோதிச் சென்றன. 'ஜில்' லென வீசிய வாடைக்காற்றினால் அவனது உடம்பு புல்லரித்தது. கூட்டம் கூட்டமாக கருமேகங்களெல்லாம் நீலவானை முற்றுகையிட்டன. மின்னல் கோடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பளிச்சிட்டன. சிறிது நேரத்தில் அங்ஙூண்டான இடிமுழக்கத்தின் பேரொலியால் அண்டமே அதிர்ந்தது. இவையெல்லாம் அவனது இதயத்தில் உறைந்து கிடந்த ஆத்திரத்தை மென்மேலும் கிளறிவிட்டுக்கொண்டிருந்தன. கோபத்தால் கண்களிரண்டும் கொவ்வைக்கனிகளாயின. இவன் கண்களிலே கோபாக்கினி தெறித்தது. அப்படியென்ன நடவாதது நடந்துவிட்டது?

* *

அன்று திங்கட்கிழமை மத்தியானம் இரண்டாவது பாடம் முடிந்துவிட்டது என்பதற்கறிகுறியாக பாடசாலை மணி 'கணீர் கணீர்!' எனப் பல தடவை அடித்து ஓய்ந்தது. அடுத்து அந்த வகுப்புக்கு இலக்கியப் பாடம். அந்த நேரத்தில் மாணவரிடையே ஏதோ பெரும் கலகலப்பு ஏற்பட்டது. ஆசிரியர் வந்ததே தெரியவில்லை! சுந்தருக்கும் இன்னொரு பையனுக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி அடிபிடியில், வந்துவிட்டது.

"டேய்!" ஆசிரியரின் குரல் பீரங்கி வேட்டுப்போல் முழங்கிற்று. சற்றுநேரதகில் காற்றடித்து ஓய்ந்ததுபோலிருந்தது. எல்லா மாணவர்களும் அவசரமவசரமாக இருபபிடத்தில் அமர்ந்தனர். எங்கும் ஒரே அமைதி! கோப மேலீட்டால ஆசிரியர் கண்கள் அகல விரிந்தன. கோபம் கண்களில் தெறிக்க வகுப்பை ஒருமுறை துளாவினர். அடுத்து அவரது பார்வை சுந்தரின் மீது வீழ்ந்தது. அவரின் பார்வை அவனை ஒரு குலுக்குக குலுக்கியது.

"டேய் சுந்தர் வாடா இங்கே!"—ஆசிரியர் குரலில் கோபம் தொனித்தது. சுந்தரின் உடல் பயத்தாலோ என்னவோ வியர்த்துக் கொட்டியது. ஒன்றும் பேசாது எழுந்து நின்றான்.

"வாடா இங்கே!" அவரது குரல் மறுபடியும் எதிரொலித்தது! அவரைப்பார்க்கவே சுத்தருக்கு திகில் ஏற்பட்டது. எப்படியோ சிறிது அசட்டுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, மெதுவாக ஆசிரியர் முன் போய் நன்றான்.

"என்னடா அங்கே கலாட்டா?"

அவன் திரு திருவென விழித்தானே தவிர ஒன்றுமே பேசவில்லை. அதே நேரத்தில் அவனுடன் சண்டையிட்ட பையன் எழுந்து நின்று, "சே...ர்! சும்மாயிருந்த என்னை அவன்ரை பேனையை எடுத்திட்டனெண்டு அடிச்சுப்போட்டான் சேர்! மூக்காலை இரத்தம் ஊத்...துது", இரண்டு சொட்டுக் கண்ணீரை உதிர்த்தபடியே வார்த்தையை வெளியிட்டான் அவன்.

அதுதான் தாமதம், ஆசிரியர் நாற்கலியை உதறிவிட்டு எழுந்தார். நாற்காலி சுவரண்டை போய் வீழ்ந்தது.

'பளார்...! பளார்...!' -வந்த வரத்திலேயே ஆசிரியரின் கைகள் அவன் கன்னத்தைப் பதம் பார்த்தன!

"போடா வெளியே !"- ஆசிரியர் குரல் அண்டத்தையே அதிர்த்தது.

சுத்தரின் நெஞ்சம் குமுறியது. அவனது உள்ளத்தில் அமைதியில்லை "இவ்வளவு மாணவர்கள் முன் என் மானத்தையே வாங்கிவிட்டாரே" என்று தனக்குள்ளேயே ஆசிரியரைத் திட்டிக்கொண்டான். கண்களிலிருந்து கண்ணீர் பீறிட்டது. பழிவாங்கும் எண்ணம் அவனை வந்தடைய வெகுநேரமாகவில்லை.

"தெருவுக்கு வா, பார்த்துக் கொள்ளுகிறேன்" அவனது ஆத்திரத்தை வார்த்தைகளாக கொட்டிவிட்டு புத்தகங்களைக் கையில் எடுத்தபடி எடுத்தான் ஓட்டம் வீடு நோக்கி! வீடுவந்து சேர்ந்ததும்தான் அவனது கால்கள் ஓய்ந்தன. மெதுவாக எடுத்தடிவைத்து வீட்டில் நுழைந்தான். அவனது நல்லகாலமோ என்னவோ வீட்டில் அவனது அம்மாவோ அப்பாவோ ஒருவருமே இருக்கவில்லை. அவ்வளவுதான் மேசையில் போய் வீழ்ந்தன புத்தகங்கள். திரும்பினான்! கடற்கரையை நோக்கி அவன் கால்கள் விரைந்தன. ஒரே பரவலாயிருந்த வெண்மணல் பரப்பு அவனை வரவேற்பது போன்று காட்சியளித்தது. மணல் பரப்பில் போய் அமர்ந்தான் அவன். களைபுற்றோர் அமைதி காணும் இடம் அல்லவா அது? ஆனால் அவனுக்கோ அமைதியில்லை.

"டும்... டும்... டும்!" இடையில் ஏற்பட்ட முழக்கம் அவனது சிந்தனையை அறுத்தது. பக்கத்திலிருந்த முருகன் கோயிலில் இருந்து எழுந்த மணியோசை அப்போ மணி நான்காகிவிட்டது என்பதை அறிவித்தது. பாடசாலை முடிந்து ஆசிரியர் வீடு திரும்பும நேரமல்லவா அது! அவனது வீட்டுத் தெருவால் தானே வருகிறவர். எடுத்தான் ஓட்டம் வீடுநோக்கி. வழியில் கிடந்த கூளாங்கல் ஒன்று அவனது கையினுள் சரணடைந்தது. அடுத்த கணம்...!

'ஆ! அம்மா...! ஐ...யோ!' அவனது கையிலிருந்த கல் நழுவிக கீழே வீழ்ந்தது. அந்தக் கல்லிலிருந்த ஓர் ஓட்டையினுள் இருந்து பாம்புக் குட்டி ஒன்று ஊர்ந்து சென்றது.

ஆம்! அவன் கையை பாம்பு தீண்டிவிட்டது. கையெல்லாம் விறைத்தது போன்ற ஓர் உணர்ச்சி. தலை சுற்றியது. அவன் தடுமாறிக்கொண்டே நடந்தான். ஏதோ அவன் காலில் தடக்கியதுதான் தாமதம் விழுந்தான் கீழே அவ்வளவுதான் தெரியும். அவனுக்கு வேறொன்றும் தெரியாது!

* *

அவன் கண் விழித்தபோது வீட்டுக்கட்டிலில் கிடப்பதை அறிந்தான். தன் செய்து விட்ட தவறை நினைக்க அவனுக்கு நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. அவனுக்குப் பக்கத்தில் யாரோ நிற்பது போன்ற உணர்வு! தலையை திருப்பிப் பார்த்தான்.

அங்கே...!

அன்புகலந்த பார்வையோடு ஆசிரியர் நிற்பது அவனுக்குத் தெரிந்தது. அப்போது! அவன் உள்ளத்திலே ஓர் மாற்றம்! அவன் உறுதியிலே ஓர் மாற்றம்! அவன் பார்வையிலே ஓர் மாற்றம்! ஆசிரியரின் கனிவு நிறைந்த பார்வை, 'கெடுவாய் கேடு நினையாதே, தானே வருங்கேடு' என அவனுக்கு உணர்த்துவது போலிருந்தது. அப்படியேபோய் அவர் காலில் வீழ்ந்து கதறியழ வேண்டும் போல் அவனுக்குத் தோன்றியது. ஆனால், அவனது மாற்றத்தை அவன் கண்களிலிருந்து வழிந்த இரண்டு சொட்டு நீர் அதை ஆசிரியருக்கு எடுத்துக் கூறிற்று.

நன்றி மறந்திடுவோமோ?

— "வட்டுர் கானம்" —

வானம் இருண்டு கறுத்தது
வானவில் எழிலுடன் வந்தது
கான மயிலும் மகிழ்ந்தது
கண்டு களிநடம் புரிந்தது.

மேளம்போல் இடிகள் முழங்கின
மேவியே முகில்கள் பரந்தன
புள்ளினம் உறைவிடம் நாடின
விலங்கினம் ஓடி ஒதுங்கின.

சோவென மழை பொழிந்தது
சொக்கு மின்பமும் சேர்த்தது
காவினில் மலர்கள் சொரிந்தன
கண்டு வரவேற்றுக் கொண்டன.

பார் செழித்திட வேண்டுமேல்
பயிர்கள் செழித்திட வேண்டுமே
கார்முகில் கருணை வைத்திட்டால்
பயிர்கள் வளர்ந்திடும் தன்னிலே.

உலகை உய்விக்கும் மாமழை
உன்னைப் புகழ்ந்திங்கு பாடுவோம்
நலமே நல்கினை எங்கட்கு
நன்றி மறந்திடு வோமோசொல்?

'சர்க்கரின்' வரலாறு

— வே. கோணேஸ்வரன் —

சர்க்கரினைப் பற்றி அறியாதோர் மிகச் சிலரே. பலர் சர்க்கரினை ருசித்துமிருப்பார்கள். சர்க்கரின் சீனியைப்போல அதிக மடங்கு தித்திப்பு உள்ளது. ஒரு கங்காளம் பானம் பண்ணவேண்டுமானால் சுமார் நான்கு வீசை சீனியாக வேண்டும். ஆனால் சர்க்கரின் ஒரு சிறிதளவு பானத்தில் கலந்தால் பானம் தித்தித்து வழியும்.

இற்றைக்கு எண்பது வருடங்களுக்கு முன் சர்க்கரின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ரெம்சன் என்ற ஆசிரியரும் பால்பர்க் என்ற மாணவனும் ஏதோ ரசாயன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். ஒருநாள் மாணவன் வேலையை முடித்துக்கொண்டு அதிக நேரத்தின் பின் வீடு சென்றடைந்தான். உடைகளைக் களைந்து விட்டு முகம் கால்களைக் சுத்திசெய்துகொண்டு சாப்பாட்டு மேசையின் முன் உட்கார்ந்து உணவருந்தத் தொடங்கினான். அப்போது சாப்பாடோ ஒரே தித்திப்பாகவே இருந்தது. அவனுக்குச் சந்தேகம் உண்டாகவே, கையை உதறிக் கொண்டு ஒரே ஓட்டமாகக் ரசாயனச்சாலையில் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க வந்துநின்றான். அவன் அன்று செய்த ரசாயனப் பொருள்கள் ஒவ்வொன்றாக நாக்கில் வைத்து ருசிபார்த்தான். அதில் ஒன்று மட்டும் இனிப்பே உருவாக இருந்தது. அதுஎன்னவென்று அறிந்து அதைச் செய்வதில் முனைந்தான். அதுவே சர்க்கரின்.

ஆபிரிக்காவில் மாந்திரீகம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மாமிசத்தை விரும்பி உண்பர். இன்று யானை, காட்டெருமையைப் போன்ற மிருகங்களின் இனமழிந்து, நலிந்திருப்பது இவர்களால் தான் இருக்கக் கூடும் என்று நினைக்கிறேன். இவர்கள் கொன்று குவித்துள்ள யானைக் கூட்டத்தின் மதிப்பு சுமார் பல கோடி ரூபாய் களிலிருக்கும் இன்றைய நாளில். இவர்கள் ஒற்றைத் தந்தமுள்ள யானை, கண்குருடான யானை, வால் நீண்ட யானைகளை வேட்டையாட மாட்டார்கள். அதற்குப் பதிலாய் அதைக் கண்ட நிமிடமே பக்தியுடன் வழிவிட்டு வணங்குவர்.

உலகின் பல புராதன குடிகள் நாகரிகம் அடைந்து மூடநம்பிக்கைகளைவிட்டுவரும் இந்நாளில் என்றுதான் இம்மக்கள் நாகரிகம் அடைந்து வாழ்க்கையில் முன்னேறுவார்களோ அன்றுதான் ஆபிரிக்கரின் சமூக வாழ்வில் ஒரு பொன்னாளாகும்.

வசீகரசக்தி மிக்க லூதரன் பாதிரியார்

ஹனோவரிலுள்ள லூதரன் மாதா கோவிலைச் சேர்ந்த பாதிரி டாக்டர் ஹான்ஸ் லில்ஜே கேட்போர் மனதைக் கவரும் நாவன்மை படைத்தவர். அவர் அன்றாட உலகச் செய்திகளையும் கலந்து சொற்பொழிவாற்றும்போது கேட்போர் கிறிஸ்தவ மதத்தில் எப்பிரிவினரைச் சேர்ந்தவராயினும் கவனித்து ரசித்துக் கேட்கும்படியான ஒரு வசீகர சக்தியை இவர் பெற்றிருக்கிறார். அரசியலில் மாறுபட்ட கொள்கையுடையவர்களையும் மதவிஷயமாக ஒற்றுமைப் படுத்தக் கூடிய ஆற்றலுள்ளவர் இவர்.

இவர் பல நாடுகளுக்கும் சென்றிருக்கிறார். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஐசன்ஹோவர், இந்தியப் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு, ஜப்பானியச் சக்கரவர்த்தி ஹிரோஹிட்டா, ராணி எலிஸபெத் ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

கேரளாவில் இந்தியர்களுடன் அளவளாவி இருக்கிறார்.

ஜெர்மனியில் சோவியத் ஆதிக்கத்திலுள்ள பகுதியில் ஆயிரக்கணக்கான பேர்கள் கூடிய கூட்டத்தில் இவர் பிரசங்கம் செய்திருக்கிறார்.

நாவற்குழி-கடைக்காணி

அரசாங்க கட்டிடங்களுக்கும் சந்திக்கும் இடையில் ஆறு கடைகள் கட்டுவதற்கு சிறந்த காணி விற்பனை- 1 கடைக்குரிய காணியின் விலை ரூபா 2000.

விபரம்:- நாவற்குழி காணி விற்பனை, c/o. சிலோன் றிசேவ் லிட்., வங்கி, யாழ்ப்பாணம்.

காணி–வீடு– விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பேங்ஷால் (Bankshall) வீதியில் தாபாற் கந்தோருக்குப் பின்னால் 29-ம் இலக்கத்தில் உள்ள 13/4 பரப் புடைய கிட்டங்கி ஒன்று விற் பனைக்கு உண்டு. இவ்விலாசத் துக்கு விண்ணப்பிக்கவும்; க. இராஜசபை, 16, வில்லி அவெனியூ, வெள்ளவத்தை.

EC 1

காணி விற்பனைக்கு

பருத்தித்துறை - வல்வெட் டித்துறைப் பிரதான வீதியில் சக்கோட்டைக் கிராமத்தில் அளவையிடப்பட்ட வீடமைப் புக்கான உறுப்பமைந்த காணித் துண்டுகள் கிணற்றுப் பங்குடன் விற்பனைக்கு இருக் கின்றன. விளம்பரத்திற்கும் படத்திற்கும், ஜெயதேவர், 35, ஸ்ரீ விக்கிரம ரோட, வெள்ள வத்தைக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

EC 2

காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சந்தைக்கணித் தாய் புதிய வீடு கட்ட நிலமோ அல்லது புதிய வியாபார-தொழில் ஸ்தானமோ தேடு வோருக்கு ஓர் அரிய சந்தர்ப் பம்! டச்சு ரோட்டில் சங்கத் தானை - பெருங்குளம் வீதிகள் தொடும் சந்தியில் வடகிழக்கு மூலையில் புளியமரம் நிற்கும் காணியில் சந்தியோரமாக தென்னம்பயிருள்ள மூன்று அல்லது நான்கு பரப்பு [illegible]ம் விற்பனைக்கு உண்டு. வி[illegible]ம்பு வோர் என்னுடன் [illegible]ரில் தொடர்புகொள்ளவும். வே. க. வேலுப்பிள்ளை, (ஆசிரி யர், இந்துக்கல்லூரி), பெரிய அரசடி, சாவகச்சேரி. 636

இரத்தினபுரி தபால் தந்தி ஊழியர் வேலை நிறுத்தம்

எம்.பி.ஆபாச வார்த்தையால் ஏசினராம்!

இரத்தினபுரி, சனி

இரத்தினபுரி தபால் நிலையத் தைச் சேர்ந்த டெலிபோன் சேவை பெண்கள், ஆண்கள் மற்றும் ஊழியர்கள் எல்லோ ரும் வேலைநிறுத்தம் ஆரம்பித் துள்ளனர்.

கலவான எம். பி. திரு. எல். டி' எஸ். ஏ. குணசேகரா டெலி போனில் அங்கு வேலைசெய்யும் டெலிபோன் பெண்களை ஆபா சமான வார்த்தைகளால் பேசி யதாகவும் இவ்விதம் அவர் சில நாட்களாகத் தொடர்ந்து ஏசிவந்ததாகவும் இதுபற்றி உரிய நடவடிக்கை எடுக்கும்படி போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கு அவர்கள் புகார் செய்திருந்த தாகவும் கூறப்படுகிறது. தகுந்த நடவடிக்கை எடுக்கப் படாவிட்டால் தாம் நேரடி நட வடிக்கை எடுக்கப்போவதாக வும் அவர்கள் தெரிவித்திருந்த னராம். கலவான எம். பி. தொடர்ந்தும் ஆபாச வார்த் தைகளால் டெலிபோன் பெண் களை ஏசிவந்ததால் அவர்கள் வேலைநிறுத்தம் செய்திருப்ப தாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி மேலதிகாரிகளுக்கு அறிவிக்கப்படுகிறது.

ஆஸ்பத்திரியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்டியபடியே "மந்திரியே திரும்பிப்போ" என்று கோஷ மிட்டனர். இச்சமயம் ஆர்ப் பாட்டக்காரரைக் கலைக்கும்படி யாழ்ப்பாணப் பகுதி பொலிஸ் சுப்ரின்டென்ட் உத்தரவிட் டார். உடனே பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பாய்ந்து அவர்களை நையப் புடைத்தனர். மந்திரியைப் பார்ப்பதற்காக வீதி ஓரத்தில் நின்றவர்களும் தாக்கப்பட் டனர். ஒரு சிறுவனைக்கையில் பிடித்தபடி நின்ற ஒருவர் மூன்று நான்கு பொலிஸ்காரர் களால் அடிக்கப்பட்டார். காலாலும் அவர் உதைக்கப் பட்டார். சிறுவன் கூச்சலிட் டான். என்றாலும் அந்த மனி தன் பலதடவைகள் அடிபட் டார்.

எம். பி.க்கள் தாக்கப்பட்டனர்

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா, வட் டக்கோட்டை எம். பி. திரு, ஏ. அமிர்தலிங்கம் ஆகியோர் பொலிஸ்காரர்களாலும் உதவி இன்ஸ்பெக்டர்களாலும் அடி பட்டனர். திரு. அமிர்தலிங கம் இடத்தை விட்டு நகர மறுக்கவே பொலிஸ்காரர்கள் அவரைப் பிடித்துத்தள்ளினர். திரு. வி. ஏ. கந்தையாவின் கன்னத்தில் ஒரு பொலிஸ் காரர் ஓங்கி அறைந்தபொழுது அவர் அணிந்திருந்த மூக்குக் கண்ணாடி பறந்துவிட்டது. அடி யை வாங்கிக்கொண்டு மூக்குக் கண்ணாடியைத் தேடிக்கொண் டிருந்த திரு. கந்தையாவை மீண்டும் பொலிஸ்காரர்கள் பிடித்துத்தள்ளினர்கள். ஆனால் அவர் மூக்குக்கண்ணாடியைத் தேடுவதாகக் கூறி அங்கு நின்று தேடினர். பின்னர் அவரை வழக்கறிஞர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளையும் மற் றும் சிலரும் அழைத்துச்சென் னர்.

பெண்கள் தள்ளப்பட்டனர்

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சில பெண்கள் தொடர்ந்து கறுப்புக்கொடி காட்டியபடி 'மந்திரியே திரும் பிப் போ' என்று கோஷமிட் டுக்கொண்டிருந்தனர். இவர் களை பொலிஸ்காரர் தள்ளிவிட் டனர். ஆர்ப்பாட்டக்காரர் களைப் பொலிஸார் கைகளால் கண்டபடி தாக்கியதும் ஆர்ப் பாட்டக்காரர்கள் சிலரும் மந் திரியைப் பார்ப்பதற்காக வீதி யோரத்தில் நின்றவர்களும் சிதறியோடி கடைக்குள்ளும் புகுந்தனர். கடைக்குள்ளும் பொலிஸார் புகுந்து அடித்த னர்.

ஆஸ்பத்திரியில் திரு. கந்தையா

ஆர்ப்பாட்டத்தின் போது அடிபட்ட திரு. கந்தையா மாலையில் ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டார். நெஞ்சில் அடிபட்டதால் மூச்சுவிடக் கஷ் டப்படுவதுடன் மூக்குக்கண்ணா டியை இழந்ததால் தலைவலியும் ஏற்பட்டுள்ளது: ஆஸ்பத்தியில் நேற்றிரவு நமது நிருபர் அவ ரைப் பார்த்தபோது அவர் பின் வரும் அறிக்கையை விடுத் தார்:-

"எங்களுடைய உரிமைகளைப் பறித்த அரசாங்கத்தின் அமைச்சருக்கு எங்கள் எதிர்ப் பைக் காட்டுவதற்காக அமைதி யான முறையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்து வதற்காக நாங்கள் அவர் உத் தியோகபூர்வமாகக் கலந்து கொள்ளவந்த ஒரு வைபவத் தின்போது அந்த இடத்திற்கு அருகிலுள்ள கட்டிடங்களின் தாழ்வாரத்தில் கூடிநின்றோம். அமைதியான முறையில் நாங் கள் அமைச்சருக்குக் கறுப்புக் கொடி காட்டிய பின்னர் அமைதியாக நின்றோம். ஒரு காரணமுமில்லாமல் பொலிஸ் காரர்கள் எங்கள் மீது பாய்ந்து மாறி மாறி அடித்தார்கள். கன்னத்தில் அறைந்தார்கள். நெஞ்சில் ஒரு உதவி இன்ஸ் பெக்டர் ஒருவர் கடுமையாகக் குத்தினர். மூக்குக்கண்ணாடி பறக்கும் வகையில் அடித்தார் கள். நாங்கள் ஓரத்தில் ஒதுங் கிநின்றோம். ஊர்வலத்துக்கோ வேறு போக்குவரத்துக்கோ நாங்கள் எவ்வித தடையும் செய்யவில்லை. பொலிஸார் மிரு கத்தனமாக நடந்திருக்கிறார் கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் உடு வில் எம். பி. திரு. வி. தர்ம லிங்கம், புரக்டர் எஸ். நட ராச, திருமதி. அமிர்தலிங்கம், வழக்கறிஞர் திரு. கதிரவேற பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உடன் பகிரங்க விசாரணை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய கடையில் உணவுமந் திரி திரு. இலங்கரத்தினவுக்கு கறுப்புக்கொடி பிடித்து அமை தியான முறையில் ஆர்ப்பாட் டம் செய்தவர்கள் பொலிசா ரால் தாக்கப்பட்டது. சம்பந்த மாக திரு. செல்வநாயகம் இத்தந்தியை அனுப்பியுள் ளார். அத்தந்தியில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

உணவு வர்த்தக மந்திரியி னால் இன்று திறக்கப்படவி ருந்த கூட்டுறவு மொத்த பிற் பனவு ஸ்தாபனம் கடைக்குச் சமீபத்தில் பாதையின் ஒரு பகுதியிலுள்ள கடைகளின் வராந்தையில் பெருந்திரளான சாத்வீக ஆர்ப்பாட்டக்காரர் கள் வரிசையாகக் கூடிநின்ற னர். இவர்களுள் பார்லிமெண்ட் அங்கத்தவர்களும் மற்றும் பி முகர்களும் பெண்களும் இருந் தனர். மந்திரி பிரயாணம் செய்துகொண்டிருந்த கார் சாத்வீக ஆர்ப்பாட்டக்காரர் கள் நின்ற கடைகளுக்குச் சமீபத்தில் வந்ததும் அவர்கள் 'திரும்பிப்போ' 'உங்களை எங் களுக்குத் தேவையில்லை" என்ற கோஷமிட்டு கறுப்புக்கொடி களைக் காட்டினர். மந்திரியின் கார் கூட்டுறவு மொத்தஸ்தா பனத்தின் கடையின் முன் நின்றதும் ஆர்ப்பாட்டமும் நின்று விட்டது. அதன் பின் னர் பொலிஸ் சுப்ரின்டென்ட் னின் தலைமையில் பொலி சார் அங்கு குழுமி நின்ற மக்களை ஈவிரக்கமின் றித் தாக்க ஆரம்பித்தனர். ஆத்திரமுட்டப்படாமலே நியா யமற்ற முறையில் பொலிஸார் முன்னரே திட்டமிட்டு வேண்டு மென்றே நடத்தியதாகத் தோன்றும் இத்தாக்குதலின் போது பார்லிமெண்ட் அங்கத் தவர்கள் சிலரும் பெண்கள் உட்பட பெருந்திரளான மக்க ளும் நையப்புடைக்கப்பட்ட னர். கடுமையாகத் தாக்கப்பட் டவர்களுள், இப்பொழுது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ள ஊர்காவற்றுறைஎம். பி. திரு. வி. ஏ. கந்தையாவும், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கமும் இரு வர். ஊர்காவற்றுறை எம். பி. தாக்கப்பட்டதில் அவர் தமது மூக்குக்கண்ணாடி, சால்வை செருப்பு ஆகியவைகளை இழ ந்துவிட்டார். பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் மீதோ பொது மக்கள் மீதோ பொலிஸார் இவ்விதம் தாக்குதல் நடத்து வதற்கு நியாயமுமில்லை. ஏனெ னில் சட்டத்துக்கு மாறாக அவர்கள் எவ்வித குற்றமும் செய்ததாக இல்லை. சட்டத் துக்கு மாறான முறையில் அமைதியான மக்கள் மீது பொலிஸார் மிருகத்தனமாக வும் கொடூரமாகவும் நடந்து கொண்ட இந்த நடத்தையை நான்மிக வன்மையாக ஆட்சே பிக்கிறேன். பொலிசாரின் இந்த நடத்தை பற்றி உடனடியாக பகிரங்கவிசாரணை நடத்த வேண்டுமென்றும் இந்த சட்ட விரோதமான தாக்குதலுக்குப் பொறுப்பானவர்களுக்கெதி ராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரிய கலாசாலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மாற்றுவதென்று செய்த முடிவை கலாசாலையை நேரில் பார்த்தபின் தாம் மாற் றிவிட்டதாகவும் மாற்றுவ தென்று செய்த முடிவு தவறான தென்பதைத் தாம் ஒப்புக் கொள்வதாயும் கல்வி மந்திரி தெரிவித்தார்.

திருநெல்வேலி மூடப்படும்

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை இவ்வருட முடி வுக்குள் மூடிவிடுவதென்று கல்வி மந்திரி தீர்மானித்துள் ளார். கொழும்புத்துறை கலா சாலையில் கட்டிட வேலைகள் முடிவடைந்ததும் நல்லூர் ஆசி ரிய கலாசாலை மூடப்படும். இக் கலாசாலைகளில் உள்ள சாதனை பாடசாலைகள் விஸ்தரிக்கப் படும். இப்பகுதியிலுள்ள பிள்ளைகளுக்கு மேலும் கல்வி வசதிகள் அளிக்கப்படும்.

பருத்தித்துறையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர். அடியை வாங்கிய திரு. அமிர்தலிங்கம் அங்கிருந்து செல்லாமல் மீண்டும் கறுப்புக் கொடியைக் காட்டியபடியே அதே இடத்தில் நின்றார். இதற்கிடையில் சிறிது தூரத் தில் நின்றுகொண்டிருந்த திரு மதி மங்கையர்க்கரசி அமிர்த லிங்கம் தமது கணவருடன் வந்து சேர்ந்துகொண்டு கறுப் புக் கொடிகாட்டினர். மற்றவர் களைப் பொலிசார் அடித்துக் கலைத்தபின்னரும் திருமதி அமிர்தலிங்கமும் திரு. அமிர்த லிங்கமும் மற்றொருவரும் அந்த இடத்திடலேயே நின்று சிறிது நேரம் கறுப்புக்கொடி காட்டி விட்டுச் சென்றனர்.

இருவருக்குக் காயம்

கறுப்புக்கொடி காட்டிக் கொண்டிருந்த ஊர்காவற் றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா மந்திரிகளைப் பார் த்து "உங்களை இங்கு வேண் டாம். திரும்பிப் போங்கள்" என்று ஆங்கிலத்தில் கோஷ மிட்டபோது மந்திரி தமது கழுத்தில் கிடந்த மாலையிலி ருந்து ஒரு மலரைப் பறித்து அவர்மீது வீசினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் குண்டாந்தடிகளு டன் தாக்கியதில் காங்கேசன் துறை பட்டினசபை முன்னை நாள் அங்கத்தவர் திரு. எஸ். தட்சணாமூர்த்திக்கு கன்னத் தில் காயமேற்பட்டது. புரக் டர் திரு. எஸ். நடராஜாவின் மூக்கிலும் காயமேற்பட்டது. பலர் கீழே விழுந்தனர். ஆர்ப் பாட்டக்காரர்கள் நின்ற இடத் திற்குப் பின்னாலிருந்த கிணற் றுக்குள் ஒருவர் தவறி விழுவ தற்கிருந்தார். அதிர்ஷ்டவச மாக மற்றொருவர் அவரைக் காப்பாற்றிவிட்டார்.

பொலிஸார் தாக்கியதைத் தொடர்ந்து நிலைமை சிறிது குழப்பமடையவே அங்கு திர ண்டு நின்ற பொலிஸார் ஒருவ ரோடு ஒருவர் கைகோர்த்து கட்டிடத்தின் முன்புறமாக ஆர்ப்பாட்டக்காரர் எவரும் வராது தடுத்துக்கொண்டனர்.

அங்கு நின்ற ஒருவர் ஆர்ப் பாட்டக்காரர் மீது மண் அள்ளி வீசியபொழுது அது தவறுதலாக ஒரு பொலிஸ்கா ரர் மீது வீழ்ந்தது. இதனால் ஆத்திரமடைந்த பொலிஸ்கா ரர் அவரைத் தேடிவந்து குண் டாந்தடியால் அடித்தபொழுது பட்டினசபைத் தலைவர் திரு. நடராசா தடுத்துக் காப்பாற்றி னர்.

இந்தக் கறுப்புக்கொடி ஆர்ப் பாட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தி னம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் ஆகி யோரும் கலந்துகொண்டனர்.

(6–ம் பக்கமும் பார்க்க)

உலக மேடை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

களஞ்சியங்கள் அதில் தான் இருக்கின்றன என்பதையும் எவரும் மறுக்கவில்லை. அதே சமயம், கணக்கற்ற மொழி களைப் பேசும் இந்திய மக்க ளின் ஐக்கியத்துக்கு ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் விளங்குகிறது. எதுவாயினும் சொந்தக் கலாச்சாரத்தை அறிய பிரதேச மொழியும், தேசியகலாச்சாரத்துக்கு தேசிய மொழியும், உலக அறி வைப்பெற ஆங்கில மொழியும் அவசியம் என்பதைப் பரந்த நோக்குடன் கவனிப்பவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) மொடோர்ன் (பண்டாரவளை)

டி. ஆர். மகாலிங்கம், எம். ஆர். ராதா

அஞ்சலிதேவி, ஈ. வி. சரோஜா, ஏ கருணாநிதி

நடித்த

ஆடவந்த தெய்வம்

டைரக்ஷன்: நீலகண்டன்

மனோகரா

(யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன் – பண்டரிபாய்

நடித்த

திரும்பிப்பார்

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.